பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 09 செவ்வாய்க்கிழமை (22.03.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :116

## படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தீவுச்சேனை இல்லை என்கிறது பொலீஸ்

கொழும்பு.மார்ச்22

"கருணா குழுவினர் முகாம் அமைத்திருக்கின்றனர் என்று கூறப்படும் பகுதி தீவுச்சேனை இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசம் இல்லை. முத்துகல பொலீஸ் சோதனைச் சாவடியில் இருந்து 12 கிலோமீற்றருக்கு அப்பாலேயே அது அமைந்துள்ளது. முன்னர் இந்தக் கிராமம் புலிகளின் கட்டுபாட்டிலேயே இருந்தது". இப்படிக் கூறியுள்ளார் வடமத்திய மாகாண பிரதிப் பொலீஸ்மா அதிபர் ஜயந்த கமகே.

தீவுச்சேனையில் கருணா குழுவினர் முகாம் அமைத்திருக்கின்றதைப் பற்றி வடமத்திய மாகாண பிரதிப் பொலீஸ்மாஅதிபரிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கருணா குழுவினர் என்று கூறிக்கொள்ளும் மங்களம் மாஸ்டர் என்பவர் அப்பகுதிமக்களுக்குத் தொடர்ச்சியாகப் பிரச்சினைகளை ஏற்படுத்தி வந்துள்ளார். இவரின் நடவடிக்கை

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் திங்களன்று பேரணி

கரவெட்டி.மார்ச்22

கடந்த 11 ஆம் திகதி வடமராட்சி - கலிகைச் சந்திப்பகுதியில் உள்ள வீடொன்றினுள் நள்ளிரவில் தகாத நோக்கத்தோடு இராணுவச்சிப்பாய் ஒருவர் நுழைந்தார் எனக்கூறப்படும் சம்பவத்தைக் கண்டித்து எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை வடமராட்சியில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை வடமராட்சிப் பொது அமைப்புகளின் ஒன்றியம் மேற்கொண்டுள்ளது.

(க-11-70)

# தீவுச்சேனை கருணா முகாம் மீது நேற்றுக் காலை திடீர்த் தாக்குதல்

கொழும்பு, மார்ச்22

**பொலன்னறுவை தீவுச்சேனையில் அமைந்துள்ள கருணா குழுவினரின் முகாம் நேற்றுக் காலையில் தாக்கப்பட்டுள்ளது. இதில் அந்த முகாமின் பொறுப்பாளராக இருந்தவர் என்று கூறப்படும் மங்களம் மாஸ்ரரும் அவரது சகாக்கள் இருவரும் காயமடைந்தனர். தாக்குதலை நடத்தியவர்கள் என்று கூறப்படும் இருவர் உயிரிழந்துள்ளனர். சிவிலியனான சிங்களச் சிறுமி ஒருவரும் இந்தச் சம்பவத்தில் காயமடைந்தார்.**

**தீவுச்சேனையில் கருணா குழுவினரின் முகாம் உள்ளது என்று கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று புகைப்பட ஆதாரங்களுடன் செய்திவெளியிட்டு ஒருநாளின் பின்னர் அந்த முகாம் தாக்குதலுக்கு இலக்காகி உள்ளது.**

நேற்றுக் காலை 6.20 மணியளவில் தீவுச்சேனைக் கிராமத்தில் திடீரெனத் தொடர்ச்சியான துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். 15 முதல் 20 நிமிடங்கள் வரையே இந்தத் துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றது என்று பொலீஸார் தெரிவித்தனர். சுமார் ஒரு மணித்தியாலத்துக்குச் சண்டை நடந்தது என்று மற்றொரு தகவல் தெரிவித்தது.

தாக்குதலில், தீவுச்சேனை முகாம் பொறுப்பாளராகச் செயற்பட்டுவந்தவரான மங்களம் மாஸ்ரர் என்று அழைக்கப்படும் ஜயாத்துரை சதீஸ், சின்னமுத்து ரவீந்திரராசா, கந்தசாமி தேவராஜா மற்றும் சிங்கள யுவதியான அப்புஹாமி ரம்பண்டலாகே ஆகியோர் காயமடைந்தனர். இவர்கள் உடனடியாகப் பொலன்னறுவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இவர்களில் சின்னக்குட்டி ரவீந்திரராசாவின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கின்றது என்று பொலன்னறுவை வைத்தியசாலை வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

தாக்குதலை நடத்தியவர்கள் என்று கருதப்படும் ஆயுததாரிகள் இருவரின் சடலங்கள் அப்பகுதியில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை அடையாளங்காணப்படவில்லை எனப் பொலீஸார் தெரிவித்தனர். சடலங்கள் பொலன்னறுவை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் குறித்து இராணுவப் பேச்சாளர் தயாரத்னாயக்க தெரிவிக்கையில் -

வெலிகந்த சேனபுரப் பகுதியில் துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டது. உடனடியாக அப்பகுதியைப் படையினர் சுற்றி வளைத்தனர். எனினும், தாக்குதல் நடத்தியவர்கள் தப்பிவிட்டனர். இந்தச் சம்பவத்தில் கருணா தரப்பில் மூவரும் ஒரு சிங்களச் சிறுமியும் காய

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தலை உரியநேரத்தில் நடத்த இந்தியாவின் உதவியை ஐ.தே.கட்சி நாடும்

### அடுத்த மாதம் ரணில் புதுடில்லி பயணம்

கொழும்பு.மார்ச்22

இலங்கை ஜனாதிபதித் தேர்தல் உரிய காலப்பகுதியில் நடத்தப்படவேண்டுமென அரச தலைமைத்துவத்துக்கு இந்தியாவினூடாக அழுத்தம் கொடுப்பதற்கு ஐக்கிய தேசியக்கட்சி உத்தேசித்துள்ளதாக அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

அடுத்த மாதம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க இந்தியா செல்லும்போது இதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

புதுடில்லியில் இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி பிரதமரின் தேசிய பாதுகாப்புத்துறை ஆலோசகர் நாராயணன் உட்படப் பலரை ரணில் சந்திப்பதற்கு ஏற்பாடாகியுள்ளது. இதற்கான ஏற்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பு விரைவில் வேண்டும் என பிரதி அமைச்சர்கள் கூட்டமைப்பு வலியுறுத்தும்

கொழும்பு.மார்ச்22

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இணைந்து பொதுக்கட்டமைப்பு ஒன்றை விரைவில் உருவாக்க வேண்டுமென பிரதியமைச்சர்களின் கூட்டமைப்பு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் வலியுறுத்தவுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிகளுக்கான இந்த கட்டமைப்பை உருவாக்கும் முயற்சியில் ஏற்படும் தாமதமானது சமாதான முயற்சிகளில் மேலும் ஸ்தம்பித நிலையை உருவாக்குமென்பதால் ஜனாதிபதியிடம் இவ்வாறு வலியுறுத்தத்தீர்மானித்தார்கள் என பிரதியமைச்சர்கள் கூட்டமைப்பின் முக்கியஸ்தரும், சிவில்விமான சேவைகள் பிரதியமைச்சருமான டிலான் பெரேரா நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் இது பற்றி மேலும் கூறியதாவது:-

ஏற்கனவே லங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழுவும், தேசிய மாநாடும் இந்த யோசனையை அங்கீகரித்திருக்கின்றன. எனவே, சிறு விடயங்களைச் சரிசெய்து உடனடியாக இந்தக் கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

ஜே.வி.பியினர் இதனை எதிர்ப்பதை கவனத்திற் கொள்ளக் கூடாது. பெரும்பாலான கட்சிகள் இதனை ஆதரிக்கின்றன. எவ்வாறாயினும் இவ்வார இறுதிக்குள் நாம் கொழும்பில் இதுபற்றி விரிவாகக் கூடி ஆராயவுள்ளோம். அதன்பின் நாம் ஜனாதிபதியை சந்திப்போம்.

இவ்வாறு டிலான் பெரேரா மேலும் குறிப்பிட்டார்.

(எ-க)

## எஸ்.பி.யைக் கவர்ந்திழுக்க ஜனாதிபதி தொடர் முயற்சி

கொழும்பு.மார்ச்22

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டுக்காக சிறைவாசம் அனுபவித்துவரும் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸநாயக்கவை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு நெருக்கமான அரசியற் பிரமுகர்கள் சிலர் சிறையில் சந்தித்து முக்கிய அரசியல் நகர்வுகள் குறித்து அவருடன் கலந்துரையாடியிருக்கின்றனர் என்று தெரியவந்தது.

ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கத் தயாராக இருக்கிறார் என்பதால் அதற்கான கோரிக்கையை எஸ்.பி.திஸநாயக்க விடுக்கவேண்டுமென்று ஜனாதிபதிக்கு நெருக்கமானவரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணியொருவர் நேற்றுமுன்தினம் திஸநாயக்கவை நேரடியாகச் சந்தித்துப் பேசியபோது கோரியுள்ளார்.

பொதுமன்னிப்பை வழங்கும் அதேசமயம் தனது கட்சியிலும் அவருக்கு முக்கியமான அந்தஸ்தை வழங்குவதற்கு ஜனாதிபதி தயாராக இருக்கிறார் என திஸநாயக்கவுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, பொது மன்னிப்புக்கான கோரிக்கையை உடனடியாக விடுக்குமாறு அவர் எஸ்.பி.யைக் கேட்டுள்ளார்.

ஆனாலும் இந்தக் கோரிக்கைகளை முற்றுமுழுதாக நிராகரித்திருக்கும் எஸ்.பி.திஸநாயக்க, ஜனாதிபதியிடம் மன்னிப்புக் கோரும் பேச்சுக்கே இடமில்லையென்று கூறியிருக்கிறார் என எஸ்.பிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

### மூன்று சட்டமூலங்கள் உயர் நீதிமன்றுக்கு

உயர்நீதிமன்றத்தின் பரிசீலனைக்கான மூன்று சட்டமூலங்கள் சட்டமா அதிபர் மூலமாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

குதிரைப்பந்தய, சூதாட்ட சட்டமூலம், நிதிச் சட்டமூலம், தேசிய வருமான சட்டமூலம் என்பனவே அவை மூன்றுமாகும்.

இச்சட்டமூலங்களை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. இவை 2005 பட்ஜெட்டில் முன்மொழியப்பட்டவை.

இச்சட்டமூலம் சட்டமாயின் பெருமளவு நிதி அரசுக்கு வரிமூலம் மேலதிகமாகக் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(க-8)

## வளங்களையும் கல்வித்துறையையும் தனியார்மயப்படுத்த அரசு முயற்சி

### குற்றஞ்சாட்டுகிறது ஜே.வி.பி.

கொழும்பு.மார்ச்22

நாட்டின் முக்கியமான வளங்களையும் கல்வித்துறையையும் தனியார் மயமாக்க அரசு நடவடிக்கை எடுத்துவருவதாக அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. குற்றஞ்சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்குக் கடிதமொன்றை நேற்று அனுப்பிவைத்திருக்கும் ஜே.வி.பி. தலைமைச் செயலாளர் ரில்வின் சில்வா, அரசின் கொள்கைகளைக் கடுமையாகச் சாடியிருக்கிறார். அந்தக் கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

நாட்டின் முக்கியமான வளங்களான கந்தளாய் சீனித் தொழிற்சாலை, எம்பிலிப்பிட்டிய கடதாசித் தொழிற்சாலை, பொஸ்பேட் வளம் போன்றவற்றை அரசு தனியார் மயப்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதுபற்றி பத்திரிகைகள் மூலமும் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

மறுபுறம் கல்வித்துறையையும் தனியார் மயப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தனியார் பல்கலைக்கழகங்கள் அமைக்கவும் தனியார் கல்வி நிறுவனங்கள் பட்டங்களை வழங்கவும் அனுமதிவழங்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்தபோது இவ்வாறான வாக்குறுதிகள் எதனையும் மக்களுக்கு வழங்கவில்லை. இதற்கான ஆணையையும் மக்கள் வழங்கவில்லை. அவற்றுக்கு மாறாக அரசு எடுத்த இந்தத் தீர்மானம் ஏழை மக்களையும் ஏழை மாணவர்களையும் பாதிக்கும் ஒன்றாகும். எனவே இதனை அரசு கவனத்திற்கொள்ள வேண்டும்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(க-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# குடாநாட்டில் மலேரியாவை ஒழிக்க சர்வதேச லயன்ஸ் கழகம் உதவும்

தென்மராட்சி,மார்ச்22

யாழ்குடாநாட்டிலிருந்து மலேரியா நோயினை முற்றாக ஒழிப்பதற்குச் சர்வதேச லயன்ஸ் கழகத்தினர் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நோயை முற்றாக ஒழிப்பதற்கான நிதியினை உலக வங்கியினூடாக வழங்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முதல் கட்டமாக சுனாமி ஆழிப்பேரலைகளால் பாதிக்கப்பட்ட வடமராட்சி, தென்மராட்சி பிரதேசங்களில் மலேரியா ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் -

இத் திட்டத்தினை வடமராட்சி சாவகச்சேரி ஆகிய லயன்ஸ் கழகங்கள் ஊடாக மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் -

இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த சர்வதேச லயன்ஸ் கழகத்தின் 306பி மாவட்ட லயன்ஸ் கழகப் பிரதிநிதி தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்றும் லயன்ஸ் கழக 306பி மாவட்ட ஆளுநாலயன் எஸ்.சிவானந்தம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற லயன்ஸ் கழக நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே அவா இத்தகவலை வெளியிட்டார். (எ-117)

## சிறுவனின் சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்22

குளத்திற்கு குளிக்கச்சென்ற சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்ததாகத் தெரிவித்து சடலம் ஒன்று நேற்று மாலை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

வேலணை கிழக்கில் நேற்று இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் தவச்செல்வம் விஜிதரன் (வயது -7) என்ற சிறுவனே மரணமானவராவார்.

சடலம் மரணவிசாரணையின் பொருட்டு வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (எ-15)

# மோ.சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்தவர் நான்கு நாள்களின் பின்னர் நேற்று மரணம்

யாழ்ப்பாணம்,மார்ச்22

இணுவிலில் கடந்த வியாழக்கிழமை (17.03.2005) மோட்டார்சைக்கிள - சைக்கிள் விபத்தில் சிக்கி படுகாயமடைந்தநிலையில், யாழ். போதனாவைத்தியசாலை அதிதீவிரசிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த பெண் நான்கு நாள்களின் பின் நேற்று அங்கு மரணமானார்.

சைக்கிளில் கணவருடன் சென்றவரான ரஞ்சி தமனோகரன் ரஜனி (வயது 30) என்ற குடும்பப்பெண்ணே இச்சம்பவத்தில் உயிரிழந்தவராவர். இவரது கணவரும் தலையில் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் காயமடைந்து யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்குட்படுத்தப்பட்டிருந்தவர்களான, கல்வியங்காட்டைச் சேர்ந்தவர்களும் மோட்டார்சைக்கிளைச் செலுத்திச் சென்றவர்களுமான இருவரும் நேற்று முன்தினம் முதல் விடுதியிலிருந்து தப்பி ஓடி தலைமறைவாகியுள்ளனர். (எ-15)

# வெளிவாரிப் பட்டப் படிப்பில் சித்தியடைந்தோர் விவரம்

யாழ்ப்பாணம்,மார்ச்22

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகின் கலைமாணி 2000 மற்றும் வணிகமாணி 2001 ஆகிய கல்வி ஆண்டில பட்டம் பெறுவோரின் இரண்டாவது பட்டியல் கடந்த வெள்ளிக்கிழமை வெளியாகியது.

இதற்குரிய சான்றிதழ்கள் நேற்று திங்கட்கிழமை முதல் யாழ்பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகினால் வழங்கப்பட்டு வருகின்றன.

இரண்டாவது பட்டியலில் வெளியான பட்டம் பெறும் 17 மாணவர்களின் பெயர் விவரம் வருமாறு:

**வணிகமாணி - 2001**

ஐயாத்துரை ஜனகமாலினி, போஜன் றேனுகா, அப்புத்துரை செந்தூரன், தர்மசேகரம் சுகன்யா, பாக்கியநாதன் தனலக்ஷ்மி, சிவநடராஜா நிசேநதினி, பேரம்பலம் சுபாஜினி.

**கலைமாணி - 2000**

குலசேகரம்பிள்ளை சோமஸ்கந்தமூர்த்தி, மார்க் ஞானப்பிரகாசம், சந்திரசேகரம் மதியழகன், திருமதி மகாதேவி சிவகுமார், ஞானச்சந்திரன் தாட்சணாயினி, திருமதி பாமா ஜெகதீஸ்வரன், சுப்பிரமணியம் கௌசியா, திருமதி பூங்குழலி இந்திரகுமார், வீரசுந்தரம் சுதர்சினி, மரியநாயகம் சாம்பிரதீபன். (த-12-203)

# கண்ணிவெடி அகற்றும் பிரிவு அமைக்க ஜப்பான் நிதி உதவி

கொழும்பு,மார்ச்22

ஜப்பானிய அரசின் உதவியுடன் நிவாரண, புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சில் நிரந்தரமான கண்ணிவெடி அகற்றும் பிரிவு ஒன்று அமைகப்படவுள்ளது. இதற்கென ஜப்பானிய அரசு 180 கோடி ரூபாவை நன்கொடையாக வழங்குகின்றது.

இத்துறையில் நன்கு பயிற்றுவிக்கப்பட்ட இராணுவ அதிகாரிகளைக் கொண்டு இந்த விசேட பிரிவு அமைக்கப்படும். இப்பிரிவின் தேசிய இடர் நிவாரண மற்றும் கண்ணி வெடியகற்றும் தலைமையகத்தின் நேரடிக் கண்காணிப்பில் இயங்குவர்.

இப்பிரிவுக்குத் தேவையான நவீனரக உபகரணங்களையும், கருவிகளையும் வாங்குவதற்கும், கண்ணிவெடி அகற்றும் தொண்டர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கும் இந்த நிதி பயன்படுத்தப்படும்.

இது தொடர்பான ஒப்பந்தம் ஒன்று இன்று கொழும்பில் கைச்சாத்திடப்படவுள்ளது. இது ஒப்பந்தத்தில் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் அக்கியோ சூடாவும், நிவாரண புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சின் செயலாளரும் கையெழுத்திடுவர். (க-8)

# பாண் விலை அதிகரிப்பை கட்டுப்படுத்த அரசு முடிவு

கொழும்பு,மார்ச்22

மூன்று வாரங்களில் பாணின் விலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு அரசு முடிவு செய்துள்ளது. உத்தேச நிர்ணய விலையை மீறும் வியாபாரிகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக மற்றும் நுகர்வோர் அமைச்சு அறிவித்துள்ளது.

அண்மைக்காலமாக ஓர் இறாத்தல் பாணின் விலை கட்டுமீறிச் சென்றுள்ளது. சில இடங்களில இருபது ரூபாவுக்கும் ஒரு றாத்தல் பாண் விற்கப்படுகிறது. கட்டுமீறி இப்படி பாணின் விலை அதிகரிக்கப்பட்டிருப்பதால் பொதுமக்கள் பெரும் சிரமத்துக்கு உட்பட்டுள்ளனர்.

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே யிடம் மேற்படி விடயம் தொடர்பாக செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து மூன்று வாரங்கள தனக்கு கால அவகாசம் தருமாறு அவர் கேட்டிருக்கிறார். பாணின் விலை 14 ரூபாவுக்குள் கட்டுப்படுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தனர். (க-8)

# நிறைவேற்று அலுவலர்களின் வேலை நிறுத்தம் துணைவேந்தரின் தலையீட்டால் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம்.மார்ச்22

யாழ்.பல்கலைக்கழக நிறைவேற்று அலுவலர் ஒன்றியத்தினால் நேற்று ஆரம்பிக்கப்பட்ட தொடர்ச்சியான வேலைநிறுத்தப் போராட்டம் துணைவேந்தரின் தலையீட்டையடுத்து கைவிடப்பட்டது.

சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்ட பல்கலைக்கழகப் பதிவாளரை மீண்டும் பதவியில் இணைத்துக்கொள்ள பேரவை மேற்கொண்ட தீர்மானம் நடைமுறைப்படுத்தப் படாததைக் கண்டித்துப் பல்கலைக்கழக நிறைவேற்று அலுவலர்கள் கடந்த புதன்கிழமை ஒருநாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதித்தனர்.

பின்னர் இது விடயமாக நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாததையடுத்து நேற்று முதல் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்கப்போவதாக அறிவித்தனர். நேற்று முற்பகல் துணைவேந்தர் சு.மோகனதாஸ், நிறைவேற்று அலுவலர் ஒன்றியத்தினைச் சந்தித்து அடுத்தபேரவைக் கூட்டத்தில் இது தொடர்பாக உரிய நடவடிக்கையெடுக்கப்படும் என்று உறுதி அளித்தார் என்றும் - இதனை அடுத்துப் போராட்டம் கைவிடப்பட்டு வழமையான பணிகளுக்குத் தமது ஒன்றிய அங்கத்தவர்கள் திரும்பினர் என்றும் நிறைவேற்று அலுவலர் ஒன்றிய வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-12)

## எல்லைப்படை மாவீரர் நினைவு

# உதைபந்தாட்ட போட்டியில் இளந்தென்றல், கல்வளை விநாயகர் வெற்றி

வலி .வடக்கு.மார்ச்22

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ்.மாவட்டப் பிரிவின் ஆதரவுடனும் உதயனின் அனுசரணையுடனும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் உதைபந்தாட்டப்போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் இளந்தென்றல் வி.கழகமும் கல்வளை விநாயகர் விளையாட்டுக்கழகமும் வெற்றிபெற்றுள்ளன.

வலிகாமம் லீக்கைச்சேர்ந்த இளந்தென்றல் விளையாட்டுக்கழகத்திற்கும் யாழ்.லீக்கைச் சேர்ந்த கலைவாணி விளையாட்டுக்கழகத்திற்கும் இடையேயான ஆட்டத்தில் 5இற்கு 4 என்ற கோல் கணக்கில் இளந்தென்றல் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

மற்றைய ஆட்டமொன்றில் வலிகாமம் லீக்கைச்சேர்ந்த கல்வளை விநாயகர் விளையாட்டுக்கழகமும், ஈவினை கலைமகள் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டதில் 2இற்கு 0 என்ற கோல் கணக்கில் கல்வளை விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றுள்ளது. (8-86)

## யோகர் சுவாமியின் குருபூசை தினநிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச்22

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் இன்று யோகர் சுவாமியின் குருபூசைத் தின நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இன்று முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமாகும் இந்நிகழ்வினைத் தொடர்ந்து மகேஸ்வர பூசை இடம்பெறும். (எ-12)

## யாழ்.நகரப் பகுதியில்

# சைக்கிளில் சமாந்தரமாகச் சென்ற 12 மாணவருக்கு தலா 500 ரூபா தண்டம்

யாழ்பாணம்,மார்ச்.22

யாழ்நகரப்பகுதியில் சமாந்தரமாகச் சைக்கிளில் சென்ற பாடசாலை மாணவர்கள் பன்னிரண்டு பேரை பொலீஸார் கைதுசெய்து யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

நேற்று யாழ்.நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா முன்னிலையில் இவர்கள் ஆஜர் செய்யப்பட்ட சமயம் ஒவ்வொருவருக்கும் 500 ரூபா அரச செலவாகச் செலுத்துமாறு நீதிவான உத்தரவிட்டார்.

வீதி ஒழுங்குகுறித்து பாடசாலை தோறும் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன. அத்துடன் ஒலி பெருக்கிகள் மூலம் உரிய அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலையில் பாடசாலை மாணவர்கள் இவ்வாறு நடந்துகொள்வது விரும்பத்தக்கதல்ல. பாடசாலை மாணவர்கள் என்ற காரணத்துக்காகக் கருணைகாட்டி குறைந்த பட்சம் தண்டம் விதிக்கப்படுகின்றது.

எனவே, இவ்வாறான செயல்களில் பாடசாலை மாணவர்கள் தொடர்ந்தும் ஈடுபட்டால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதிவான் தமது தீர்ப்பில் தெரிவித்தார். (எ-7)

# களுதாவளை விநாயகர் ஆலயத்தில் வெள்ளியன்று மோட்சதீப வழிபாடு

காரைதீவு,மார்ச்22

சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்திவேண்டி எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு மட்டக்களப்பு களுதாவளைப் பிள்ளையார் ஆலயத்தில் மோட்சதீபவழிபாடு நடைபெறவுள்ளன.

அன்று அதிகாலை கல்லடிப் பிள்ளையார் ஆலயத்தில் ஸ்நபன அபிஷேகமும் விசேட பூசைகளும் நடைபெறும். பின்னர் அங்கிருந்து மோட்ச தீபங்கள் ஏற்றப்பட்டு அவை ஊர்வலமாக களுதாவளைப் பிள்ளையார் ஆலயத்திற்கு எடுத்து வரப்படும்.

இந்த நிகழ்வில் சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் சுடர்களை ஒன்றிணைந்து ஏற்றி ஆத்மசாந்தி வழிபாடுகளில் ஈடுபடுவர்.

இதற்கான ஏற்பாடுகளை களுதாவளைப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபைத் தலைவரும், பிரதிக் கல்விப் பணிப்பாளருமான கே.பாஸ்கரன் மேற்கொண்டுள்ளார். (எ-84-204)

## விபத்தில் படுகாயம்

யாழ்ப்பாணம்,மார்ச்22

கோப்பாய் கைதடி வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் நாவற்குழியைச் சேர்ந்தவர்களான குடும்பஸ்தரான சிவராசா ரூபன் (வயது 22), சர்வானந்தம் உதயசூரியன் (வயது 28) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து அருகில் இருந்த மின்கம்பத்தில் மோதியதாலேயே விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது.

காயமடைந்த இருவரும் யாழ்போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (8-12)



மாதகல் புனித லூர்து கெபியின் திருவிழா அண்மையில் நடைபெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகை தலைமையில் அருட் தந்தையர்கள் திருப்பலி ஒப்புக்கொடுப்பதையும் திருவிழாவில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியிரையும் படங்களில் காணலாம். *(படங்கள்: அருண் - மாதகல் செய்தியாளர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை வீச்சை சுமந்துவந்ததில் புலிகளின் குரலுக்கு முக்கிய பங்குண்டு

## துணைப் பொறுப்பாளர் செயல்வீரன் உரை

பரந்தன்,மார்ச்22

மக்களின் கருத்துக்களையும் விடுதலை வீச்சையும் சுமந்து வந்ததில் 'புலிகளின் குரல் வானொலிக்கு முக்கிய பங்குண்டு.

- இவ்வாறு புலிகளின் குரல் நிறுவனத்தின் துணைப் பொறுப்பாளர் செயல்வீரன் தெரிவித்தார்.

அண்மையில் புலிகளின் குரல் நிறுவனத்தின் அமலன் அரங்கில் இடம்பெற்ற கேணல் கிட்டுவின் 12ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வில் தலைமை வகித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் உரையாற்றும்போது மேலும் தெரிவித்ததாவது:-

எங்களுடைய வானொலியின் வீச்செல்லையை அதிகரிக்காத நிலையில் வானொலியை தமிழர் தாயகப் பிரதேசங்களில் தெளிவாகக் கேட்கமுடியாத நிலை இருந்தது.

எங்களுடைய தலைவரின் சிந்தனையின் பாடமாக புலிகளின் குரல் வானொலிப் பொறுப்பாளர் தமிழன்பனுடைய முயற்சியில் பிரதேசங்கள் தோறும் ஒவ்வொரு வானொலி மன்றங்கள் உருவாக்கப்பட்டன.

தாயக விடுதலைக்காகப் போராடிக்கொண்டிருக்கின்ற காலத்திலே இந்த வானொலியைத் தொடங்கி அக்காலப் பகுதியில் இருந்தே இந்த வானொலியின் சேவையை நடத்தி வருகின்றோம்.

எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் எவையுமே தீர்க்கப்படாத நிலையில் - மக்களுக்கான போக்குவரத்துச் சேவை, செய்திப் பரிவர்த்தனை எதுவுமே சீராகாத நிலையில் - மக்களுக்குச் செய்திகள் போய்ச் சேரவேண்டும். மக்கள் உண்மைச் சம்பவங்களை அறிய வேண்டும் என்ற காரணத்திற்காகவும் -

மக்களின் கலைப்படைப்புக்களை வானொலி ஊடாக வெளிக்கொண்டுவரவேண்டும் என்ற காரணத்திற்காகவும் ஒவ்வொரு பிரதேசத்திலும் வானொலி மன்றங்கள் அமைக்கப்பட்டன.

இதன் பயனாக மன்றங்களில் மக்களின் கலை கலாசார விழுமியங்கள் விடுதலைக்கான வேட்கைகள் அடங்கிய கருத்துக்களை ஒலிப்பதிவு செய்து ஒலிபரப்புகிறோம்.

இந்த வகையில் பிரதேச மக்கள் தமது திறமைகளை வெளிக்கொண்டுவர ஓர் அரங்க செயற்பாட்டுக்கான மேடை இல்லாமை இனங் காணப்பட்டுள்ளது.

இந்த வகையில் மக்களின் கருத்துக்களையும் விடுதலை வீச்சையும் சுமந்து செல்கின்ற ஒரு வானொலியாக எமது வானொலி இருக்கிறது.

மன்றங்களின் செயற்பாட்டால் எமது தாயக தேசம் விடுதலையடையவும் மக்களின் எண்ணங்களில் உதிக்கும் விடுதலைக்கான தாகத்திற்கு முழுமையான இடம் வழங்கமுடிகிறது.

விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் எங்கள் தலைவர் அவர்கள் பல்வேறு ஊடகத்துறையையும் ஆரம்பித்தார்.



இந்த வகையில் தலைவர் அவர்களின் அத்திபாரத்தில் கட்டுமானங்களில் அடிப்படையிலே சிறந்த ஊடகங்கள் வளர்ந்தன.

போராட்ட காலத்தில் எமது கருத்துக்கள் மக்களுக்குச் சென்றடையும் ஓர் ஊடகமாக வானொலி இருந்து வந்திருக்கிறது.

ஆரம்பத்தில் ஒரு சிற்றலை வரிசையை ஆரம்பித்து பின்னர் உறுமல் என்கின்ற சுவரொட்டி முறையை ஆரம்பித்து போர் நடக்கின்ற காலத்தில் மக்களுக்கான செய்திகள் அந்தந்த இடங்களில் மக்களுக்குச் சென்றடையக்கூடிய வகையில் நடைபெற்றுவந்தன.

அக்காலப் பகுதியில்தான் கேணல் கிட்டு அண்ணா அவர்கள் வானொலிக்கான முயற்சியை ஆரம்பித்தார்.

அவருடைய அத்திபாரத்தில் ஆரம்பித்து இன்று பூத்துக்குலுங்கி கிளை பரப்பி நிற்கும் ஒரு வானொலிதான் புலிகளின் குரல் வானொலி ஆகும் என்றார் (த-202-352)




## புதுக்குடியிருப்பில் மாணவர்களுக்கு மருத்துவமுகாம்

புதுக்குடியிருப்பு,மார்ச்22

புதுக்குடியிருப்பு பிரதேசப் பாடசாலை மாணவர்களுக்கு வைத்திய பரிசோதனை முகாம்கள் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியிலும் ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையிலும் கடந்த வாரம் இடம்பெற்றன.

முல்லைத்தீவு மாவட்ட பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் லண்டன் சத்தியசாயிபாபா அமைப்பினர் மற்றும் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனையினரின் அனுசரணையுடன் 50 பேர் கொண்ட வைத்தியக் குழுவினரால் இந்தப் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது.

மாணவர்களிடம் பல், கண் மற்றும் ஏனைய உறுப்புக்கள் பரிசோதனை செய்யப்பட்டு வைத்திய ஆலோசனைகள் வழங்கப்பட்டன பற்பசை, பற்தூரிகை என்பனவும் வழங்கப்பட்டன.

ஏற்கனவே கரைத்துறைப்பற்று பிரதேசத்தில் நடத்தப்பட்ட இந்த மருத்துவ முகாமில் 28 பாடசாலைகளின் மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

இச்செயற்பாடு முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பாடசாலைகளில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-353-204)

## வர்த்தகர்களுக்கான கருத்தரங்கு

புதுக்குடியிருப்பு,மார்ச்22

தமிழீழ வைப்பகத்தின் ஏற்பாட்டில் புதுக்குடியிருப்பு வர்த்தகர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு அண்மையில் இடம்பெற்றது.

இக்கருத்தரங்கில் வங்கி நடைமுறைகள், ஐந்தொகை, கடந்தகால வைப்பக நடவடிக்கைகள், மேம்பாடு, ஆயத்தீர்வை நடைமுறைகள் போன்றன குறித்து கருத்துரைகள் இடம்பெற்றதுடன் வர்த்தக மேம்பாடு தொடர்பாகவும் கருத்துரைகள் இடம்பெற்றன. (த-353-202)

# விவசாயிகளுக்குக் கடன்களை வழங்க ஒட்டுசுட்டானில் கமக்காரர் வங்கி

ஒட்டுசுட்டான்,மார்ச்22

ஒட்டுசுட்டான் பிரதேச விவசாயிகளின் நன்மைகருதி கமநல சேவை நிலையத்தினர் கமக்கார வங்கி ஒன்றை ஆரம்பிக்கவுள்ளனர். அங்கு விவசாயிகளுக்கு கடன் அடிப்படையில் உதவிகள் வழங்கப்படவுள்ளன.

கமநல சேவை உதவி ஆணையாளர் இந்தத் தகவலைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

விவசாயிகள் நலன் கருதி பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக உரக் களஞ்சியம் ஒன்று நிறுவ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கமக்கார வங்கி ஒன்று ஆரம்பிக்கப்பட்டு விவசாயிகளுக்கு கடனடிப்படையில் உழவு இயந்திரங்கள் மற்றும் உதவிகளை வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம் - என்றார். (த-341)

# முள்ளியவளை, அளம்பில் வீதிகள் திருத்தப்படாததால் மக்கள் சிரமம்

அளம்பில்,மார்ச்22

குமுழமுனைக்கு செல்லும் முள்ளியவளை, அளம்பில் பிரதேச வீதிகள் நீண்டகாலமாகத் திருத்தப்படாது உள்ளன.

குண்டுங் குழியுமாகக் காணப்படும் இவ் வீதிகளில் பயணம் செய்வோர் பெருஞ்சிரமங்களை அடைகின்றனர். வீதிகளின் இருமருங்கும் வளர்ந்துள்ள பற்றைகளால் போக்குவரத்துக்கு மேலும் இடைஞ்சல் ஏற்பட்டு விபத்துக்களும் இடம்பெறுகின்றன.

இதேவேளை -

முல்லைத்தீவிலிருந்து நாயாறுக்குச் செல்லும் வீதியும் மிகவும் சேதமடைந்து காணப்படுகிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இவ்விடயம் தொடர்பாகப் பலதடவைகள் முறையிட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. உரியவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-ரி-204)

# ஏற்றுமதி, விவசாய மானியத்தை மாற்ற வளர்ந்த நாடுகளிடம் கோரிக்கை

புதுடில்லி,மார்ச்22

வளர்ந்த நாடுகள் அளித்துவரும் ஏற்றுமதி மானியத்தை 5ஆண்டுகளுக்குள் நிறுத்தவேண்டும். உள்நாட்டு விவசாயத்துக்கு அளிக்கப்படும் சலுகைகளைக் குறைக்கவேண்டும் என வளரும் நாடுகளைக் கொண்ட ஜி-20 அமைப்புக் கோரியுள்ளது.

இந்தியாவின் புதுடில்லி நகரில் நடந்த ஜி-20 நாடுகளின் அமைச்சர்கள் மாநாட்டின் முடிவில் இந்தப் பிரகடனம் மேற்கொள்ளப்பட்டது.

இதுகுறித்து இந்திய வர்த்தகத்துறை அமைச்சர் கமல்நாத் கூறியதாவது:-

வளர்ந்த நாடுகளில் அளிக்கப்படும் ஏற்றுமதி மானியம் காரணமாக வளரும் நாடுகள் பாதிப்புக்குள்ளாகின்றன. ஆகவே, அந்த மானியம் நிறுத்தப்படவேண்டும்.

நாடுகளின் வளர்ச்சி நிலையைக் கருத்தில் கொண்டு, அனைத்து நாடுகளுக்கும் சமமாக, நியாயமான முறையில் விதிமுறைகள் வகுக்கப்படவேண்டும்.

பொதுக்கருத்தின் அடிப்படையில்தான் புதிய உலக வர்த்தக நடைமுறையை உருவாக்க முடியும். ஒரு நாடோ, சில நாடுகளைக் கொண்ட குழுவோ மற்ற அனைத்து நாடுகளையும் கட்டுப்படுத்துவதை ஏற்க முடியாது என்றார்.

ஜி-20 அமைப்பு நாடுகளுக்குள் சில விஷயங்களில் கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனால், அது மலைபோல உறுதியாக இருக்கிறது. வேற்றுமையில் ஒற்றுமை காண்கிறோம் என ஜி-20 ஒருங்கிணைப்பாளரும் பிரேசில் வெளியுறவு அமைச்சருமான செல்சோ அமோரிம் கூறினார்.

வளரும் நாடுகளுக்குள் மேலும் எவ்வித பிரிவினையையும் ஏற்படுத்தாமல், அதேசமயம் தற்போதைய பிரச்சினைகளுக்கும் தீர்வு காணவேண்டும் எனப் பலநாட்டு அமைச்சர்களும் வலியுறுத்தினர்.

வரிக் குறைப்பு சம்பந்தமான நடைமுறைகளில் வெளிப்படையான அணுகுமுறை தேவை என வளர்ந்த நாடுகளை இக்கூட்டம் வலியுறுத்தியுள்ளது.

## ஆப்கானில் வெள்ளம்: 220 பேர் உயிரிழப்பு!

காபூல்,மார்ச்22

ஆப்கானிஸ்தானில் கடும் மழையாலும், உருகும் பனியாலும் ஏற்பட்ட பெரும் வெள்ளப் பெருக்குக்காரணமாக 220 பேருக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர். வெள்ளத்தால் உருஸ்கான் பிராந்தியம் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. அங்கு ஆயிரக்கணக்கான வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன என்றும் - மேலும் பலர் காணாமற்போயுள்ளனர் எனவும் மாநிலத்தின் ஆளுநர் தெரிவித்தார்.

# கொலம்பியா விண்கல விபத்தில் உயிருடன் தப்பிய நுண்புழுக்கள்

ஹிஸ்டன்,மார்ச்22

கொலம்பியா விண்கலம் வெடித்துச் சிதறியதில் உயிருடன் தப்பிய நுண் புழுக்களைக் கொண்டு எதிர்காலத்தில் விண்வெளி வீரர்களின் பாதுகாப்பை மேம்படுத்துவது குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையமான நாஸாவால் அனுப்பப்பட்ட கொலம்பியா விண்கலம் 2003 பெப்ரவரி முதலாம் திகதி விண்ணில் வெடித்துச் சிதறியது.

அதில் பயணம்செய்த இந்திய விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா உள்ளிட்ட 7 விண்வெளி வீரர்கள் மரணம் அடைந்தனர்.

ஆனால் விண்கலத்தில் ஆராய்ச்சிக்காக கொண்டுசெல்லப்பட்ட நுண்புழுக்கள் பாதிக்கப்படவில்லை இந்த நுண்புழுக்கள் தப்பிய தன் சாத்தியங்களை ஆராய்ந்து, அதன் அடிப்படையில் விண்வெளி வீரர்களின் பாதுகாப்பை மேம்படுத்துவது குறித்து நாஸா விஞ்ஞானிகள் ஆராய்து வருகின்றனர்.

# ஆப்கானிஸ்தான் பொதுத் தேர்தல் செப்ரெம்பர் 18 இல் நடத்தப்படும்

ஆப்கானிஸ்தான் பொதுத்தேர்தலை செப்ரெம்பர் மாதம் 18ஆம்திகதி நடத்தத் தேர்தல் ஆணையகம் தீர்மானித்துள்ளது என ஆப்கானிஸ்தான் தேர்தல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் மே மாதம் பொதுத்தேர்தல் நடைபெறமாட்டாது என ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீட் கர்சாய் அறிவித்து மூன்று நாள்களுக்கு பின்னரே இந்தப்புதிய திகதி அறிவிக்கப்பட்டது என அந்நாட்டு தேர்தல் ஆணையகத் தலைவர் பிஸ்மில்லாஹ் பிஸ்மில் செய்தியாளர் மாநாடொன்றில் தெரிவித்தார்.

அவர் செய்தியாளர் மாநாட்டில் மேலும் தெரிவித்ததாவது:-

ஆரம்பகாலத்தில் அறிவிக்கப்பட்ட பொதுத் தேர்தல் திகதியை விடவும் தற்போது அறிவித்துள்ள திகதி காலதாமதமானது.

ஆப்கானின் குடியுரிமை பெற்ற அனைத்து பொதுமக்களும் மாவட்ட ரீதியாக வாக்களிக்கவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அமெரிக்க வெளி விவகார அமைச்சர் ரைஸின் திட்டப்படியே புதிய திகதி அறிவிக்கப்பட்டது.

அவர் ஆலோசனை கூறும் வரையில் மேமாதம் நடத்தவிருந்த தேர்தலை மாற்றும் திட்டம் எமக்கு இருக்கவில்லை.

தற்போது எமது நாட்டு ஜனாதிபதியும் தேர்தலுக்கான திகதியை உறுதி செய்துள்ளார் என்று பிஸ்மில்லாஹ் தெரிவித்தார்.






அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள கீவெஸ்ட் நகரில் சங்கு ஊதும் போட்டி நடந்தது. 40 பேர் இந்தப் போட்டியில் பங்கேற்றனர். நீண்டநேரம் ஊதுவது, சத்தமாக ஊதுவது, புதுமையாக ஊதுவது ஆகிய பிரிவுகளின் கீழ் இந்தப் போட்டி நடந்தது. அதில் ஒரு காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிக்கொடியை அகற்றும் முயற்சி கைவிடப்பட்டது

பொதுநிகழ்வில் ஏற்றப்பட்ட புலிக்கொடியை இறக்க பொலீஸார் மேற்கொண்ட முயற்சி பொதுமக்களின் எதிர்ப்பினால் கைவிடப்பட்டது.

அராலி கிழக்கு அண்ணா விளையாட்டுக் கழகத்தின் வெள்ளி விழாவை யொட்டி நடத்தப்பட்ட உதைபந்தாட்டத்தின் இறுதிப்போட்டி இடம்பெற்றது. இந்தப் போட்டியையொட்டி தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்பட்டிருந்தது. அவ்வேளை, வட்டுக்கோட்டைப் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலீஸ் அணியினர் மைதானத்துக்கு வந்தனர். அவர்கள் அங்கு ஏற்றப் பட்டிருந்த தமிழீழத் தேசியக்கொடியை அகற்றும்படி கூறினர். அங்கு நின்ற பொதுமக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனையடுத்து கொடியை அகற்றும் முயற்சியை பொலீஸார் கைவிட்டனர். அதன்பின் நிகழ்ச்சிகள் அமைதியாக நடந்து முடிந்தன. (ஒ-86)

## கட்டடத்திறப்பு விழா

அராலி, வட்டுக்கோட்டை சமுர்த்தி வங்கிச் சங்கப் புதிய கட்டடத் திறப்பு விழா நாளை புதன்கிழமை பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது. வலி.மேற்குப் பிரதேச செயலர் சி.ஏ.மோகனராஸ் தலைமையில் நடைபெறவுள்ள இத்திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷும் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் தி.மகேஸ்வரகுமார் தமிழீழ விடுதலைப் புலிகளின் வலி.மேற்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் அ.அன்பு ஆகியோரும் கலந்துகொள்கின்றனர். (ஒ-161-175)


**Save the Children in Sri Lanka**
**VACANCY NOTICE**

Save the Children in Sri Lanka is seeking Candidates to fill the following positions at its Jaffna Office.

- Shelter Field Officer
- Finance Assistant
- Livelihood Officer
- Livelihood Field Officer
- Driver / Mechanic

Please submit C.V. to the office of Save the Children in Sri Lanka, Jaffna as addressed below not later than the 25th of March and include contact details. Selected candidates will be called for interviews from the 3rd of April 2005.

**Emergency Programme Manager,**
**Save the Children in Sri Lanka.**
146, Temple Road,
Nallur, Jaffna.
Tel. No.: 021-222-5078 (C-41635)(21-16-18)



**வருடாந்த பொருள்காட்சி – 2005**

வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தான
நிர்வாகத்தின் கீழ் இயங்கும்

**காமாக்ஷி முன்பள்ளி**

958/12, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி,
பொருள்காட்சி ஒன்றை நடத்துகின்றது.

காலம்: 22, 23, 24-03-2005
காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை

- கணனி, தொலைக்காட்சியில் முன்பள்ளி சிறார்களுக்கான கல்விசார் நிகழ்ச்சிகளும் காண்பிக்கப்படவுள்ளன.
- பாலர்கள் கல்வி சம்பந்தமான ஆக்கங்கள் இடம்பெறவுள்ளன.

☞ இப்பொருள்காட்சிக்கு சகல முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

முன்பள்ளி ஆசிரியர்கள்,
மாணவர்கள், பெற்றோர்கள்,
ஆலய தர்மகர்த்தா சபையினர்

மேலதிக விவரங்களுக்கு: T.P.: 0776983646, 07777 33847.

*விளம்பர அனுசரணை:*

**க.அப்பன் ஆட்ஸ்**

ஓவிய வேலைகள், திரைச்சீலை, விளம்பரப்பலகை எழுதுதல் மற்றும் கோயில் அலங்காரவேலைகள், வீட்டு வர்ணவேலைகள், திருமணப் பந்தல் வர்ண, ஓவிய வேலைகள் அனைத்தும் சிறந்த முறையில் செய்து கொள்ளலாம்.
576, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

**காயத்திரி நகைத் தொழிலகம்,**
**காயத்திரி வீடியோ விஷன்**

அசல் 22 கரட் தங்க நகைகளை நவீன டிசைன்களில் குறித்த தவணையில் செய்துகொள்ளவும்.
பழைய, புதிய தமிழ் சினிமா படப்பிரதிகளை சீடியிலிருந்து நேரடியாகப் பதிவு செய்து கொள்ளவும்.
637,கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
☎0712 707359, 0777 111024

**லதீப் ஜுவல்**

அழகிய தங்க நகைகளைக் குறித்த தவணையில் ஓடர் செய்து பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்.
579, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
T.P.: 077 9004535
(43376)(42-21-16-18)


## நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,மார்ச்22

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட 8 இடங்களில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றும்போது "உள்ளூராட்சி சபையினால் வழங்கப்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான அட்டை" பெற்றிருத்தல் வேண்டும்.

இந்த அட்டையில்லாத நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படமாட்டாது.

வளர்ப்பு நாய்களுக்கான அட்டை உப அலுவலகங்கள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு பிரதேச சபை செயலாளர் தெரிவித்துள்ளார்.

வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசிகள் போடப்படும் நாள், நேரம் மற்றும் இடங்கள் வருமாறு:-

எதிர்வரும் 24ஆம் திகதி காலை 9 மணிக்குச் சண்டிலிப்பாய் கல்வளை சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11 மணிக்கு ஆலங்குளம் சனசமூக நிலையத்திலும் பிற்பகல் ஒரு மணிக்கு சிவசக்தி சனசமூக நிலையத்திலும் பிற்பகல் 3 மணிக்கு மணிமேகலை சனசமூக நிலையத்திலும் -

எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 9 மணிக்கு நவாலி அட்டகிரி சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11 மணிக்கு நவாலி வடக்கு சனசமூக நிலையத்திலும் முற்பகல் ஒரு மணிக்கு நவாலி தெற்கு மதியொளி சனசமூக நிலையத்திலும் பிற்பகல் 3 மணிக்கு நவாலி கண்ணகை அம்மன் வீதியிலுள்ள பொது மண்டபத்திலும் நாய்களுக்குத் தடுப்பூசி போடப்படும். (ஒ-185-204)

☆ ☆ ☆

வட்டுக்கோட்டை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி போடப்படுகின்றது.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வட்டுக்கோட்டை காந்திஜி சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11 மணிக்கு கற்பகச் சோலை சனசமூக நிலையத்திலும், முற்பகல் ஒரு மணிக்கு ஜனசக்தி சனசமூக நிலையத்திலும் நாய்களுக்குத் தடுப்பூசி போடப்படவுள்ளது. (ஒ-28-204)


**பழைய கட்டடம்**
**விற்பனைக்கு**

மல்லாகம் சந்தியில் அமைந்துள்ள பழைய கட்டடம் விற்பனைக்கு உண்டு. விசாலமான பழைய வீடு உடைத்து அகற்றி அதன் பாகங்களையும் கொள்வனவு செய்வதற்கு ஆர்வமுள்ளோர் தொடர்பு கொள்ளவும்.

இல: 22, கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.
(43382) (35-21-16-18)

**உடன் விற்பனைக்கு**

நவீன முறையில் பிஸ்கட் உற்பத்தி செய்யும் புதிய இயந்திரம் விற்பனைக்கு உண்டு. மாக் குழைக்கும் இயந்திரம் மற்றும் அச்சு அவன், பக்கிங் இயந்திரம் உட்பட உண்டு.
தொடர்புகளுக்கு:
(43367) 0777 112918 (21-16-18)

**தேவை**

மர அரிவு ஆலையில் வேலை செய்வதற்கு 'மேயின்வாஸ்' தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்க்கலாம். தூர இடமாயின் தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 0777 112918 [43368] [21-16-18]

**யாழ்ப்பாணம் → கொழும்பு → யாழ்ப்பாணம்**

சகல விமான சேவைகளுக்குமான விமானப் பயணச் சீட்டுக்களை எந்நேரமும் விசேட கழிவில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**சந்து ரவல்ஸ்,**
புதிய உயர் கல்லூரி வளாகம்,
95, ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
T.P.NO.: 021-222-3208,
077-3144358
(21-16-18-39) 077-3144762 (43381)


### இவரைக் காணவில்லை

ஸ்ரீ பரமானந்த ஆச்சிரமத்தின்
வதிரி, கரவெட்டியில் வசித்தவரும்
வீமன்காமம் வடக்கு, தெல்லிப்பழை
வாசியுமான

**திருமதி ஆறுமுகம் இலட்சுமிப்பிள்ளை**

என்பவரைக் காணவில்லை. 19.03.2005 ஆம் திகதி ஆலயத்துக்குச் சென்றவர் திரும்பி வரவில்லை. வயது 73. யாழ்ப்பாணம், இல.84, செட்டித்தெருவைச் சேர்ந்த திரு. செ.திருநாவுக்கரசு என்பவர் உறவு முறையானவர். தயவுசெய்து இவரைக் கண்டவர்கள் T.P.: 226 3136 இலக்கத்துடன் தொடர்புகொண்டு அறியத்தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

டாக்டர் என்.பத்மநாதன்,
தலைவர்
ஸ்ரீ பரமானந்த ஆச்சிரமம்
வதிரி,
கரவெட்டி.
20. 03. 2005 (சி-41637)(21-16-18-39)


**யாழ். கிறீன் கிங்ஸ் விளையாட்டுக்கழகம்**

40ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு மாபெரும்
சைக்கிள் ஓட்டப்போட்டி
(40 கிலோமீற்றர்)
விண்ணப்ப முடிவுதிகதி: 26-03-2005
விண்ணப்பப்படிவங்கள் பெற்றுக்கொள்ளும் இடங்கள்:


| | |
|---|---|
| **சதா அன் சுதா** | **அல்லின் வீடியோ மூவிஸ்** |
| T.V., டெக் திருத்தகம் | 60/4, சொலமன் வீதி, |
| 284, ஸ்ரான்லி வீதி, | சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். |
| (யாழ். விகாரை முன்பாக), | செயலாளர், |
| யாழ்ப்பாணம். | கிறீன் கிங்ஸ் விளையாட்டுக்கழகம். |

(43379) (24-21-16-18)


### மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
04 – 05 – 1917

மறைவு
25 – 03 – 2002



**அமரர்**
**நாகமணி நடராசா**
திதி : 22.03.2005
என்றும் நீங்காத நினைவுகளுடன்...

அரியாலை,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

### துயர் பகிர்கின்றோம்

எமது கழகத்தின் அங்கத்தவரும் துடுப்பாட்டத்தின்
இலக்கணமாக இருந்து சகலதுறை நாயகனாகவும் விளங்கிய
அமரர்
**ஜெகசோதி துஷ்யந்தன்**
அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு அதிர்ச்சியடைவதுடன் அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கேற்றுக்கொள்கின்றோம்

நண்பர்களும் அங்கத்தவர்களும்
(சி41636) (24-21-16-18) யங் ஸ்ரார் விளையாட்டுக் கழகம்.

## மரண அறிவித்தல்கள்

### சதாசிவம் சதானந்தன்

*(தேசிய தொழிற்பயிற்சிப் பரிசோதகர், N.A.I.T.A. யாழ்ப்பாணம்).*

அராலியைப் பிறப்பிடமாகவும் பண்ணாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் சதானந்தன் அவர்கள் 20.03.2005 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் தம்பதிகளின் அன்பு மகனும் அமிர்தாம்பிகை (ஆசிரியை - கல்வியங்காடு இ.த.க. பாடசாலை) அவர்களின் அன்புக் கணவரும் கோபிகா, நிவேஜன், சபேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ம.ஸ்ரீமுருகவேள் (கிராம அலுவலர்), ம.சிவநாதன் (தொழில்நுட்ப அலுவலர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சதானந்தி சீவரட்ணம் (கனடா), புஷ்பானந்தி, றஞ்சிதானந்தி (கொழும்பு), ஜீவானந்தன், பிறேமானந்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சீவரட்ணம் (கனடா), தருமராஜா (கொழும்பு), குகராஜா, ஸ்ரீதரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2005) செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருவடிநிலை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி அமிர்தாம்பிகை (மனைவி),
பிள்ளைகளும், சகோதரரும்,
மைத்துனர்களும்.
*பண்ணாகம்.*
(43369) (24-16-18-21)

### வாமதேவன் இராஜரட்ணம்



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வாமதேவன் இராஜரட்ணம் 20-03-2005 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் திரு.திருமதி வாமதேவன் தம்பதிகளின் அன்பு மகனும் ரஞ்சிதமலரின் அன்புமிகு கணவரும் றஜனி (நோர்வே), ஜீவராஜா (நோர்வே), குமுதா (நோர்வே), கீதா (யாழ். பல்கலைக்கழக கலைப்பீட இறுதிவருட மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் அருள் மோகன், விசாகன், நளாயினி ஆகியோரின் மாமனாரும் அக்சாயினி, லாசன், அக்ஷன், மீரா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திருநெல்வேலி மாரியம்மன் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இன்று (22.03.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்று, தகனக் கிரியைக்காகப் பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*மாரியம்மன் வீதி,*
*திருநெல்வேலி.* (43377) (24-16-18)
தகவல்:
ஜீவராஜா (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# அம்பலத்துக்கு வருகிறது அரசின் சதி நாடகம்

கருணா குழு தொடர்பாகக் கூறப்பட்டு வந்த சில தகவல்களை உண்மை என அம்பலப்படுத்தும் செய்திகளை கொழும்பு ஆங்கில வார இதழான 'த சண்டே லீடர்' வெளியிட்டு, விடயங்களைப் புட்டுப் புட்டு வைத்திருக்கின்றது.

புலிகள் அமைப்பிலிருந்து விரட்டப்பட்ட தனி மனிதப் பிறழ்வாகக் கருணா திகழ்கின்றார். அவரையும் அவரது பெயரையும் பயன்படுத்தி ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான மாற்று சக்தி ஒன்றை - வலுவும் பலமும் மிக்க குழு ஒன்றை - உருவாக்க இலங்கை அரசு கங்கணம் கட்டிச் செயற்படுகின்றது, அதற்காகத் திரை மறைவில் சதி, நாசகார வேலைகள் நடக்கின்றன என்றெல்லாம் இப்பத்தியில் பல தடவைகள் தெரிவித்து வந்தோம். அவற்றை ருசுப்படுத்தியிருக்கின்றன 'த சண்டே லீடர்' வெளியிட்ட திடுக்கிடும் தகவல்கள். கருணா குழுவின் பெயரில் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் முகாம்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன என்ற குற்றச்சாட்டை ஏற்கனவே புலிகள் வெளியிட்டு வந்தனர். அதனை அரசும் அரசின் பாதுகாப்பு வட்டாரங்களும், இராணுவமும் அடியோடு மறுத்து வந்தன. அப்படி மறுப்பது அவற்றின் வழமையான போக்குத்தான்.

இப்போதும் கூட 'த சண்டே லீடர்' அம்பலப்படுத்திய - கருணா குழு பற்றிய - செய்திகளை அரசுத்தரப்பு மறுத்துரைக்கும் என்பது எதிர்பார்க்கப்படும் ஒன்றுதான்.

எண்பதுகளின் முற்பகுதியில் ஈழத் தமிழ் இளைஞர்களை - பல்வேறு இயக்கங்களைச் சேர்ந்தோரை - இந்தியா தனது மண்ணில் வைத்துப் பராமரித்து, பயிற்சி முகாம்களை ஆரம்பித்து அவர்களுக்கு இராணுவப் பயிற்சிகளை வழங்கிய சமயம் இப்படியான செய்திகள், தகவல்கள் என்பன வெளியாகின என்பதும் -

'இங்கு (இந்தியாவில்) ஈழத் தமிழர்களின் அகதி முகாம்கள்தாம் இருக்கின்றன. ஆனால், இராணுவப் பயிற்சி முகாம்கள் ஏதும் இல்லவே இல்லை' - என்று இந்தியத் தரப்பு முழுப்பூசனிக்காயைச் சோற்றில் மறைப்பது போலத் தொடர்ந்து கதைவிட்டுக்கொண்டிருந்ததும் - பலருக்கும் நினைவிருக்கலாம்.

அதுபோலவே, கருணா குழுவை முகாம் அமைத்து, பயிற்சி கொடுத்து, தனது கூலிப்படையாகத் தான் இயக்கி வருவதை அப்பட்டமான பொய் எனக் கூறி இலங்கை அரசுத் தரப்பு மறைக்கும்; மறுக்கும்.

ஈழத்தமிழர்களின் போராட்ட சக்தியை - வலிமையை - பலத்தை - சிதறடிக்க வைக்கும் எண்ணத்தில் தான் வகுத்த தந்திரோபாயத் திட்டம் இப்போது அம்பலமானதால் எரிச்சலுறும் இலங்கை அரசு, இந்த விடயத்தின் உண்மையை மறைக்கும் விதத்தில் மறுப்புரைகளை விடுப்பதோடு மட்டும் அமையுமா அல்லது உண்மையை அம்பலப்படுத்தி, பகிரங்கப்படுத்திய செய்தி நிறுவனம், செய்தியாளர்கள் போன்ற தரப்புகள் மீதும் பாயுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து விசாரித்து உண்மையைக் கண்டறிவதற்காக மேல் நீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகளைக் கொண்ட ஜனாதிபதி ஆணைக் குழு ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியமித்திருக்கின்றார். அந்த விசாரணைக் குழுவின் அமர்வுகள் இன்னும் ஒரு வார காலத்தில் ஆரம்பமாக இருக்கையில் கருணா குழுவினர் அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதியில் முகாம் அமைத்து ஆயுதங்களுடன் இயங்குகிறார்கள் என்பது பற்றிய செய்திகள், காத்திரமான தகவல்கள் மற்றும் படங்களுடன் வெளிவந்திருக்கின்றன. ஆணைக் குழுவின் விசாரணைக்கு ஆக்கபூர்வமான பல தகவல்களை இந்தச் செய்தி வழங்கியிருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இ.கௌசல்யன் ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புபட்டவர் எனக் கருதப்படும் மங்களன் மாஸ்டர் என்பவரின் கீழேயே கருணா குழுவின் மேற்படி முகாம் இயங்குவதாகக் கூறப்படுவதும் ஆணைக்குழுவினால் கவனிக்கப்படவேண்டிய விடயமாகும்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் - அரசின் உதவி, ஒத்தாசை, வழிகாட்டல், ஆசீர்வாதம், பின்புல ஆதரவு போன்றவற்றோடு - இயங்கி வரும் கருணா குழுவில், சிறுவர்களும் உறுப்பினர்களாக இணைக்கப்பட்டு, ஆயுதபாணிகளாகச் செயற்படுகின்றனர் என்ற தகவல் சர்வதேச சமூகத்துக்குச் சமர்ப்பணம்.

அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தப்படி -

இராணுவத்துடன் இயங்கும் தமிழ்க்குழுக்கள், துணைப்படைகள், கூலிப்படைகள் என்பன வடக்கு - கிழக்குக்கு அப்பால் கொண்டுசெல்லப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், கிழக்கை அண்டிய பிரதேசத்திலேயே கருணா குழுவை நிலைநிறுத்தி, முகாம் அமைத்து, அரசுத்தரப்பு இயக்கிவருவது புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பான அரசுத் தரப்பின் நம்பகத் தன்மையைக் கேள்விக்குள்ளாக்கி இருக்கின்றது.

இதற்குப் பின்னரும் அரசுத் தரப்பும் அதன் படைகளும், அவற்றின் புலனாய்வுப் பிரிவினரும் இதுவிடயத்தில் தங்களைத் திருத்தி, நிலைமையைச் சீர்செய்துகொள்ள முன்வராவிட்டால் விளைவுகள் விபரீதமாகும். விரும்பத்தகாத நிகழ்வுகள் நேரும் அபாயமும் உண்டு. அரசுத் தரப்புத் தன்னைத் திருத்திக்கொள்ளுமா?

## யாழ். - கண்டி வீதியில் பயணிக்கும்போது

# மிருசுவில், தாண்டிக்குளம் பகுதிகளில் அடிப்படை வசதியின்றி பயணிகள் அவதி

தென்மராட்சி,மார்ச்22

ஏ-9 வீதியில் மிருசுவில் மற்றும் தாண்டிக்குளம் பகுதியில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை என்றும் -

சோதனை சாவடிகள் திறக்கும் வரை காத்திருக்கும் வேளையில் இதனால் தாம் அவதிப்படுவதாகவும் -

பொதுமக்கள் தரப்பில் கூறப்படுகின்றது. யாழ். - கண்டி வீதி ஊடான பொதுப் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டு சுமார் மூன்று வருடங்களாகின்றன. இந்த வீதியூடாகக் காலையில் யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் வாகனங்கள் மிருசுவிலிலும், வவுனியாவிலிருந்து வரும் வாகனங்கள் தாண்டிக்குளத்திலும் சோதனைச் சாவடிகள் திறக்கும் வரை தரித்துநிற்கின்றன. இதேவேளை மாலை 5.30 மணிக்கு சோதனைச்சாவடிகள் மூடப்பட்ட பின்னர்- இப்பகுதிகளுக்கு வரும் வாகனங்கள் மறுநாள் காலை வரை காத்திருக்க நேரிடுகிறது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி இரவு புறப்படும் வாகனங்கள் அதிகாலையில் தாண்டிக்குளம் வந்து சேர்ந்து விடுகின்றன. இவற்றில் வருபவர்கள் - குறிப்பாகப் பெண்கள் அங்கு மலசல கூடம், குடிதண்ணீர் போன்ற வசதிகள் இன்றிச் சிரமப்படுகின்றனர் என்று கூறப்படுகின்றது. தினமும் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இவ்விடத்தில் தரித்துச் செல்கின்றனர். இவர்களின் தேவைகளை நிறைவேற்ற அரச நிறுவனங்களோ அல்லது அரசசார்பற்ற நிறுவனங்களோ முன்வர வேண்டும் என்று பொதுமக்கள் தரப்பில் எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ-117)

# புதுவையின் கவிதை நூல் வெளியீட்டு விழா லண்டனில்




யாழ்ப்பாணம்,மார்ச்22

விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரையின் 'பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்' என்ற கவிதை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை லண்டனில் நடைபெறவுள்ளது லண்டன் ரூற்றிங் முத்துமாரி அம்மன் கோயில் சிவயோக மண்டபத்தில் சட்டத்தரணி ந.சிறீக்கந்தராசா தலைமையில் வெளியீட்டு விழா இடம்பெறும்.

வைத்திய கலாநிதி திருமதி ஆனந்தி கருணைலிங்கம் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார். இதில் அ.நா.சோமஸ்கந்தசர்மா, ச.ஸ்ரீரங்கன் ஆகியோர் வாழ்த்துரையும் விரிவுரையாளர் ஆ.யோ.பற்றிமாகரன் சிறப்புரையையும் ஊடகவியலாளர் பொ.ஐங்கரநேசன் வெளியீட்டுரையையும் பி.பி.ஸி. தமிழோசையின் திருமதி ஆனந்தி சூரியப்பிரகாசம், ஊடகவியலாளர் ஒ.சி.தாசீசியஸ், எஸ்.கருணானந்தராசா ஆகியோர் மதிப்பீட்டுரையையும் நிகழ்த்துவர்.

லண்டன் முத்துமாரியம்மன் தேவஸ்தானத் தலைவர் நா.சீவரத்தினம் நூலின் முதற்பிரதியை வழங்க என்பீல்ட் நாகபூஷணி அம்மன் ஆலயகுரு ர.கமலநாதக் குருக்கள் பெற்றுக்கொள்வார். (ஒ)

# இந்திய ஜனாதிபதியின் தாய் மாமன் காலமானார்

கொழும்பு,மார்ச்22

இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமின் தாய்மாமனார் மர்ஹூம் சுல்தான் இப்ராஹிம் சிலாபத்திலுள்ள அவரது வீட்டில் கடந்த புதனன்று காலமானர்.

ஜனாதிபதி அப்துல் கலாமின் தாயாரின் சகோதரரான இப்ராஹிம் இலங்கையில் - சிலாபத்தில் வசித்து வந்தார். ஏழு பிள்ளைகளுக்குத் தந்தையான இவருக்கு மரணிக்கும்போது 84 வயது. நாடாளுமன்ற விவகார அமைச்சராக முன்னர் பதவி வகித்த ஏ.எச்.எம்.அஸ்வர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமைச் சந்தித்தபோது இலங்கையில் இருக்கும் தனது தாய் மாமனைப் பார்ப்பதற்குதான் மிகவும் ஆவல் கொண்டிருக்கிறார் என ஜனாதிபதி அபதுல் கலாம் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐந்து விவசாய வங்கிகள் முதற்கட்டமாக அமைப்பு

அச்சுவேலி,மார்ச்22

யாழ்.மாவட்டத்தில் முதற்கட்டமாக புத்தூர், நல்லூர், உடுவில், சாவகச்சேரி, புலோலி ஆகிய கமநல சேவைப் பிரிவுகளில் விவசாய வங்கிகள் செயற்படவுள்ளன.

புத்தூர் கமநல சேவை நிலையத்திலும், நல்லூர் கமநல சேவைநிலையத்திலும் விவசாய வங்கிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. ஏனைய உடுவில், சாவகச்சேரி, புலோலி பிரதேசங்களுக்கான விவசாய வங்கிகள் கூடிய விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளன.

ஏனைய எட்டுக் கமநலசேவை நிலையங்களிலும் இரண்டாம் கட்டமாக விவசாய வங்கிகள் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகக் கமநலசேவை திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 13 கமநல சேவைப் பிரிவுகளிலும் விவசாய வங்கிகளை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆயினும் வங்கிகளின் செயற்பாட்டிற்கான ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதால் முதற்கட்டத்தில்5 கமநலசேவை நிலையங்களிலும் இரண்டாம் கட்டமாக ஏனைய 8 கமநலசேவை நிலையங்களிலும் விவசாய வங்கிகள் செயற்படவுள்ளன. 13 கமநலசேவை நிலையங்களிலும் இந்த வருடம் நடுப்பகுதிக்கு முன்னர் விவசாய வங்கிகள் செயற்படுத்தப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-11)

# தீவகக் கல்வி வலயத்தில் சுயதொழில் பயிற்சிகள்

யாழ்ப்பாணம்,மார்ச்22

தீவகக்கல்வி வலயத்தின் முறைசாராக் கல்வி அலகு சுயதொழில் பயிற்சிகளை வழங்க உள்ளதாக முறைசாரா உதவிக் கல்விப் பணிப்பாளர் க.கணபதி தெரிவித்தார்.

கணனிப் பயிற்சிகள் நெடுந்தீவு மகா வித்தியாலயத்திலும் உடையமைத்தல் பயிற்சிகள் ஊர்காவற்றுறை புனித மரியாள் பெண்கள் பாடசாலையிலும் உணவு பதனிடல் பயிற்சிகள் கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகாவித்தியாலயத்திலும், கண்ணாடி பிறேம் போடுதல் பயிற்சிகள் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

இப்பிரதேசத்தில் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்திய வேலைவாய்ப்பு இல்லாத யுவதிகள் இப்பயிற்சி நெறியில் இணைந்து கொள்வதன் மூலம் சுயதொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளலாம்.

இப் பயிற்சி நெறிகள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-204)

# 'சுப்றா' தரத்தைச் சேர்ந்த எழுதுநர்கள் உள்ளூராட்சிச் செயலர்களாக நியமனம்

தென்மராட்சி,மார்ச்22

உள்ளூராட்சி சபைகளின் செயலாளர் பதவிகளுக்கு எழுதுநர் சேவை அதிசிறப்புத் தரத்தைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எழுதுநர் சேவை அதிசிறப்பு (சுப்றா) தர அலுவலர்கள் பற்றாக்குறை காரணமாக, எழுதுநர் சேவை தரம் 1 ஐச் சேர்ந்த அலுவலர்களே செயலாளர்களாக கடமையாற்றி வந்தனர். அந்தச் சபைகளுக்கு எழுதுநர் சேவை அதிசிறப்புத்தர அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பிரதேச சபைச் செயலாளர்களாக நியமிக்கப்பட்டவர்களின் பெயரும் நியமனம் பெற்ற பிரதேசசபை பற்றிய விவரமும் வருமாறு:-

இ.இராசதுரை (வலிகாமம் தெற்கு பிரதேச சபை).

ஞா.அகஸ்ரின் (மன்னார், நானாட்டான் பிரதேச சபை)

ஏ.கணேசானந்தராஜா (யாழ். மாநகர சபையின் நிர்வாக செயலாளர்)

க.பாலசுப்பிரமணியம் (சாவகச்சேரி பிரதேச சபை )

கு.அமிர்தலிங்கம் (வலி.மேற்கு பிரதேச சபை)

த.நடராசா (வலி.கிழக்கு பிரதேச சபை).

(எ-13-117-185)

## நாளை

பங்குனி 10
புதன்கிழமை
23.03.2005
திதி : திரயோதசி
பின்னிரவு 1.37 வரை.
நட்சத்திரம் : மகம்
முன்னிரவு 9.33 வரை.
பிரதோஷ விரதம்
சுபநேரம் : 04.46 - 06.16
[illegible] : 12.16 - 1.46
[illegible]

# 'பொறுப்பனோ யான்' நூல் வெளியீடு வட்டுக்கோட்டையில் நாளை நடக்கும்

வட்டுக்கோட்டை பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன் எழுதிய 'பொறுப்பனோ யான்' நாடகநூல் வெளியீட்டுவிழா நாளை புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் வள்ளியம்மை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பேராயர் கலாநிதி சு.ஜெபநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.மேற்குப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் மூதறிஞர் பண்டிதர் க.நாகலிங்கம், புனிதபத்திரிசியார் கல்லூரி அதிபர் கலாநிதி ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் அடிகள், ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் ஆகியோரின் ஆசியுரைகளும் -

திருமதி கல்யாணி சுந்தரேசன், செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், கவிஞர் சோ.பத்மநாதன் ஆகியோரின் வாழ்த்துரைகளும் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து வெளியீட்டுரையைக் கலாபூஷணம் சைவப்புலவர் சு.செல்லத்துரையும் மதிப்புரைகளை யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி சி.சிவலிங்கராசா, யாழ்.பல்கலைக் கழகக் கல்வித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி, யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்துறை விரிவுரையாளர் ஈ.குமரன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

இந்நூலின் முதற் பிரதியை கலாசார உத்தியோகத்தர் கா.க.ரஜனி வெளியிட்டு வைப்பார்.

இந்நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக புனிகாலாண்டுச் சஞ்சிகையின் அறிமுகமும் இடம்பெறவுள்ளது. (3-175-203)

## உதயவாக்கு

மனிதன் குறையுடையவன் மட்டுமல்ல; குறை காண்பவனுமாவான். பிறர் குறையைக் காண்பவன் அரை மனிதன். தன் குறையைக் காண்பவன் முழுமனிதன்.

- சாக்ரடீஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகர் கூறும் நற்சிந்தனை நல்வாழ்வுக்கான வழிகாட்டி



**ஆழி** சூழ் உலகில் பல அவதார புருஷர்களும் சீவன் முத்தர்களும் ஞானிகளும் தோன்றி மறைந்துள்ளார்கள். அவர்களில் சிலர் சிறந்ததொரு குரு பரம்பரையையே தோற்றுவித்துள்ளார்கள். அவ்வாறு குரு - சீட மரபில் வந்தவர்கள் கடையிற் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள் என் போா இவர்களில தவத்திரு யோகர் சுவாமி பல அடியார்களைத் தமது அரவணைப்பில் வைத்திருந்தார். அவ்வடியார்களில் சிலர் யோகர்சுவாமிகளது வழிகாட்டல்களையும், ஆத்மநுபவங்களையும் உள்வாங்கிச் சைவம் தழைத்தோங்கவும், ஆன்மாக்களை ஈடேற்றவும் வாழ்ந்துள்ளார்கள்; வாழ்ந்தும் வருகிறார்கள்.

உண்மையில் யோகர் ஒரு ஞானியா? சீவன முத்தரா? அவதார புருடரா? அன்றிக் கடவுள் தானா? எனப் பற்பலவிதமாக அடியார் கதைப்பதுண்டு. அவர் தாம் யார் என்பதைக் காட்டிக் கொள்ளவில்லை. ஆனால், தாம் பெற்ற இன்பத்தை ஆன்மாக்களும் பெறவேண்டுமென்ற விருப்பங்கொண்டார். அதற்காகச் 'சிவதொண்டன்' மாத சஞ்சிகையைத் தொடக்கினார். சிவதொண்டன் நிலையங்களை நிறுவி வடக்கிலும் கிழக்கிலும் வளர்த்தார். இவ்வாறு சைவசமயம் தழைத்தோங்க அவர் எடுத்த நடவடிக்கைகள் பற்பல.

கடவுள் எல்லோருக்கும் பொதுவானவர். அதேபோல யோகர் சுவாமிகளும் எல்லோருக்கும பொதுவானவராகவே திகழ்ந்தார். அவருக்கு ஏழை, எளியவர், பணக்காரன், பெரியவன், சிறியவன் என்ற வேறுபாடுகள் கிடையாது.

பல சமயத்தவரும் பல நாட்டினரும் பலபல படிகளில் நின்றவர்களும் சுவாமிகளின அடியவரானார்கள். அவரவர்க்கு அதுவதுவாய் நிற்கும் தெய்வம் போல் சுவாமிகளும் அடியவர்களுக்குக் காட்சியளித்துள்ளார். யோகர் சுவாமிகளது அணுக்கத் தொண்டர்களுள் ஒருவரான மார்க்கண்டு சுவாமிகள் பின்வருமாறு கூறியுள்ளார்.

"சுவாமிகள் இருக்குங்காலத்தில் ஒரு மருந்தைத்தான் எல்லோருக்கும் கொடுத்தார். ஆனால், அனுமானங்களையும் பத்திய பாகங்களையும் மாற்றிக்கொடுத்தார். இப்போது சுவாமிகள் இல்லை. ஆனால், அவர் மருந்தை 'நற்சிந்தனை' என்னும் நூலில் அடக்கிவைத்துள்ளார். நீங்கள் அதனுள் புகுந்து உங்களுக்குத் தேவையான மருந்தைத் தேடி உண்ணுங்கள்'.

நற்சிந்தனை நூலுருப்பெற்றமைக்கு ஒரு வரலாறுண்டு. யோகர் சுவாமிகள் பரமவேதாந்தி. ஆயினும், அடியவருக்குரியவாறு பல சித்தாந்தக் கருத்துக்களையும் கூறியுள்ளார். தமது ஆத்மனுபவ சிந்தனைகளை அடியார்களுக்குப் பரப்புவதற்காக ஒரு பத்திரிகையை வெளியிட எண்ணினார். பவ வருடம் (1934 ஆம் ஆண்டு) மார்கழி மாதம் முதல் இதழ் வெளியாறிற்று. இப் பத்திரிகையின் தோற்றம் பலருக்குப் பெரிய புதிராகவிருந்தது.

கட்டுரை எழுதுவோருடைய பெயரில்லை; விளம்பரங்களில்லை, மேளதாளமில்லாமலே

**யோகர் சுவாமிகளின் 40 ஆவது குரு பூசைத் தினம் இன்றாகும். அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

சிவதொண்டன் வளரத் தொடங்கினான். இப்பத்திரிகையில் வருவன நற்சிந்தனையும், நல்ல சமயமும் விற்பனமாக விளங்கும் யோகமும் சொற்பொருட் சுவைசேர் சூடாலை சரிதமும் இன்னும் பல இனிய கட்டுரைகளும் தான். திங்கள் தோறும் வெளிவந்த 'சிவதொண்டன்' இதழின் நற்சிந்தனை என்னும் பகுதியில் சுவாமிகளால் இயற்றப்பெற்ற பாக்கள் வெளிவந்த வண்ணமிருந்தன. சிவதொண்டன் சபையால் இவை பின்னர் 'நற்சிந்தனை' என்னும் நூல் வடிவில் 1959ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது. தற்போது 5ஆவது பதிப்பாக இவ்வரிய நூல் உள்ளது.

இவர் பாடல்களில் தேவாரம்,திருவாசகம், திருவருட்பா ஆகிய பாடல்களின் அமைப்பும் தாயுமான சுவாமிகள், குதம்பைச் சித்தர் முதலியோர் பாடல்களின் யாப்பும் பொருந்தி அமைந்துள்ளதைக் காணலாம். இவற்றைவிடப் பலவகையான பாக்களையும் பாவினங்களையும் பயன்

**யோகசித்தன்**

படுத்திப் பாடியிருப்பது நற்சிந்தனையின் சிறப்பு.

வெண்பா யாப்பில் குறள்வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா என்னும் வகைகளை இவர் பாடியுள்ளார். குறள் வெண்பாக்கள திருக்குறள் போலவும், ஔவையின் ஞானக் குறள், சுத்தானந்த பாரதியாரின் யோக சித்தியைப் போலவும் உமாபதி சிவாச்சாரியாரின திருவருட்பயன் போலவும் அமைந்துள்ளன.

கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை, இல்வாழ்க்கை போற்றித்தெளி, உயிர் வகுக்கக் குறள், திருவாய் மொழி, பத்தரேயாவார், பணிமறவாதே என்பன சிவயோக சுவாமிகள் பாடிய சில குறள் வெண்பாக்கள்.

பல நேரிசை வெண்பாக்கள் இவரால் பாடப்பெற்றவை. இவற்றுள் அநேகமானவை அந்தாதித் தொடையில் அமைந்தவை. இலங்கைத் தமிழ் மக்களை விழித்து வெண்பா வடிவிலான பாடலொன்று பின்வருமாறு:-

*"அச்சம் ஒழியும் அவமிருந்துத் தான் ஒழியும்*
*இச்சை ஒழியும் இடுக்கணொடு - பச்சை மலை*
*உச்சியினின் நாறொழுகு மோங்கிலங்கை நன்னாட்டீர்*
*நித்தியரா மென்றுணர்வீர் நீர்"*

*'இலங்கை நம் நாடு'* என்னும் தலைப்பில் சில இன்னிசை வெண்பாக்களும் உள்ளன.

ஆசிரியப்பா யாப்பிலும் இவர் பல பாடல்களை இயற்றியுள்ளார். "ஏத்துக பொன்னடி...., நின்றும இருந்தும்...., நடந்தும் நினைமின்..." போன்றன நிலைமண்டல ஆசிரியப்பாக்கள்.

'முத்திக்கு வழி..., சிவதொண்டர்க்கு வேண்டுகோள்' முதலியன இணைக் குறளாசிரியம்.

கலிப்பா யாப்பில் பொன்னடியைப் போற்றுதுமே, கண்டபத்து என்னும் பதிகப் பாடல்கள் நாலடித் தரவு கொச்சகம்.

'திருவம்மானை' என்னும தலைப்பிலமைந்த ஐந்து பாடல்களும் ஐந்தடியினால் வந்த தரவு கொச்சகம்.

கட்டளைக் கலிப்பா யாப்பிலும் சில பாடல்கள் அமைந்துள்ளன.

சிவயோக சுவாமிகளின் அருட் பாடல்களில் கீர்த்தனைகள் மிக உன்னதமானவை. எவ்வாறு சங்கீத மும்மூர்த்திகளின் அடியொற்றிப் பாவநாச சிவன் தமிழில் கீர்த்தனைகள் இயற்றினாரோ அவ்வாறே பாடல்களை நற்சிந்தனையில் சுவாமிகள் தந்துள்ளார்.

நல்லைக் கந்தன் மேல் பலகீர்த்தனங்களைப் பாடியுள்ளார். பிலஹரி இராகத்தில் அமைந்த 'என்நாளும் நல்லூரை வலம்வந்து வணங்கினால் இடர்களெல்லாம் போமே'. என்ற கீர்த்தனை பிரசித்தமானது.

மேலும் 'நல்லூரான் கிருபை வேண்டும்... (சுருட்டி), நல்லூர் வாசனே... (பேகட), நல்ல மருந்தொரு, குருமருந்தை.. (மோகனம்) போன்றன சிறந்த உதாரணங்களாகும்.

கவிகளுக்கு இசையறிவும் இருந்து விட்டால படைப்பு இரட்டிப்பாகிறது. அதேபோல அருட் கவியாகிய யோகர் சுவாமிகளின் கர்நாடக இசையறிவுக்கு இக்கீர்த்தனங்கள் சான்று பகர்கின்றன. சிவதொண்டன் சபையார் இக்கீர்த்தனங்களைத் தொகுத்து 'நற்சிந்தனைக் கீர்த்தனைகள்' என்னும் நூலாகவும் வெளியிட்டுள்ளார். இவற்றுக்குச் சென்னை மாம்பலம் ஸ்ரீ ஓம் ஆனந்தாச்சிரமத்தைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ ஆனந்ததீர்த்த சுவாமிகள் சுர தாளக் குறிப்புக்களை வழங்கி இசையமைத்துள்ளார்.

இவ்விசைப் பாடல்கள் உட்பட சுவாமிகளது நற்சிந்தனைப் பாடல்களைச் சங்கீத ஞானமுள்ள அவரது அடியார்கள் சிவதொண்டன் நிலையத்தில் நடைபெறும் நித்திய விசேட பூசைகளின் போது இசைப்பர். இந்தியாவின் திருவையாற்றில் சத்குரு தியாகராஜ சுவாமிகள இசையாராதனை இராம நவமித் தினத்தில் நடைபெறுவது போல இங்கும் யோகசுவாமிகளது குருபூசைத் தினமாகிய பங்குனித்திங்கள் ஆயிலிய நட்சத்திரத்திற்கு முன்னைய மூன்று தினங்களில் 'நற்சிந்தனை பூரண' பாராயணம் நடைபெறுகின்றது. கடந்த முப்பது வருடங்களாக இப்பாராயணம் நடந்து வருகிறது. இவ்வரிய இசை ஆராதனையில் பங்குபற்றும் அடியவர் ஆச்சிரம வாழ்வைக் கடைப்பிடித்து ஆசார சீலராய் நற்சிந்தனை என்னும் நல்ல முதைப் பருகுவர். ☆

---


## இரவுக் காவலாளிகள் தேவை

**வர்த்தக சங்கம்**

**அச்சுவேலி**

அச்சுவேலிப் பகுதியில் வர்த்தக நிலையங்களில் பாதுகாப்புத் தொடர்பான கடமைகளை மேற்கொள்வதற்கு இரவுக் காவலாளிகள் தேவை. சுய விவரங்கள் உள்ளடங்கிய விண்ணப்பத்துடன் 27.03.2005 ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் நேரில் சமுகந்தரவும்.

தொடர்பு:

**வே.ஸ்ரீகுமார்**

செயலாளர்

**கல்பனா ஸ்ரோர்ஸ் அன் பேக்கரி**

(சி-41625) பிரதான வீதி, அச்சுவேலி. (21-18-16)


## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 - 05 - 1926



மறைவு 15 - 03 - 1992

**அமரர் காசிப்பிள்ளை சபாரத்தினம்**

**(திதி : 22.03.2005)**

**அன்பு நிறைந்த பப்பாவே!**
**அன்பு என்ற சொல்லுக்கே வாழ்வில்**
**உயிர் கொடுத்தீர்களே!**
**அன்புக்கும் அரவணைப்புக்கும் ஆயிரம்**
**உறவுகள் இருந்தாலும்**
**"பப்பா" ! என்று அழைக்க உறவுகள் தான்**
**இனி ஏது?**

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

சுன்னாகம் தெற்கு, சுன்னாகம். (43343)(21-18-16)

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,மார்ச்22

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 25ஆம திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இதனையொட்டி நாளை மறுதினம் வியாழக் கிழமை காலை 8மணி தொடக்கம் எண்ணெய்க காப்புச் சாத்தலும், மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.15 மணிக்கு மஹா கும்பாபிஷேகமும் மாலை விசேட பூசையுடன் வீதியுலாவும இடம்பெறும். இதனையொட்டி இடம்பெறும் தெய்வீகப் பேருரைகளில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 7 மணிக்கு 'மனம் போல வாழ்வு' என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக மாணவன் கு.பாலசண்முகனும் நாளை புதன்கிழமை மாலை 7 மணிக்கு 'உலகெலாம்' என்னும் தலைப்பில் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி ஆசிரியர் கி.கேசவனும் உரையாற்றுவர். நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 7 மணிக்கு சங்கீத நாதசேகரம் ஆர்.கேதீஸ்வரன் குழுவினரின் சிறப்பு நாதஸ்வரக் கச்சேரி இடம்பெறும்.

எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை கும்பாபிஷேக நிகழ்வுகளில் ஆஸ்தான வித்துவான் எஸ்.ரி.சுந்தரேசன் குழுவினர், பிச்சையப்பா ரஜீவன் குழுவினர் ஆகியோரின் நாதஸ்வரக் கச்சேரி இடம்பெறும். மாலை 7 மணிக்கு 'தமிழ்க்குழவி' என்னும் தலைப்பில் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி ஆசிரியர் ச.லலீசன் உரை நிகழ்த்துவார். (ஓ-202)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம், மார்ச்22

மிருசுவில் ஸ்ரீ ஞானதுர்க்கை அம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேக விழா எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு நாளை புதன்கிழமை காலை 6 மணிக்குக் கிரியைகள் ஆரம்பமாகும். நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 6மணிக்கு விசேட சாந்தி, யாகபூஜை, எண்ணெய்க் காப்புச் சாத்தல் என்பன இடம்பெறும.

மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9.16 மணிக்கு கும்பாபிஷேகமும் நண்பகல் 12.30 மணிக்கு மகா அபிஷேகமும் இடம்பெறும்.

மாலை வசந்தமண்டபப் பூஜையைத் தொடர்ந்து அம்பாளின் திருவீதியுலா இடம் பெறும். (ஓ-15-202-203)

## தியான மண்டபத் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,மார்ச்22

கரவெட்டி ஸ்ரீ பரமானந்த ஆச்சிரம நிறுவநர் ஸ்ரீ பரமானந்த சுவாமியின் 10ஆவது ஆண்டு குருபூஜை தின விழாவும் நிறுவுநர் நினைவு தியான மண்டபத் திறப்பு விழாவும் இன்று நடைபெறவுள்ளன.

இன்று முற்பகல் 11 மணிக்கு ஆச்சிரம தர்ம கர்த்தாக்கள் சபை உபதலைவர் டாக்டர் எம். யோகீஸ்வரதேவன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் தியான மண்டபத்தை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா திறந்து வைப்பார். (ஓ-202)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 13 - 05 - 1955



மறைவு 15 - 03 - 2003

அமரர்

**நல்லதம்பி இராஜகுலசிங்கம் (வவா)**

**பாசத்தின் திருவிளக்கே - எங்களை**
**பாரினிலே வளர்த்தெடுத்த - தெய்வமே!**
**ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்தும் - உன்**
**அன்பு முகம் மறையவில்லை - எம் மனதில்**
**இறைவனிடம் தினம் வேண்டி நிற்கின்றோம் - நீ**
**மீண்டும் எம்முடன் பிறந்து வர வேண்டும் - என்று**

உசன், மிருசுவில். (43338)(21-16-18)

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

**குமாரவேலு வைகுந்தவாசன்**

**(வைகுந்தன்)**



மண்டைதீவு, 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ் அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலு - வைகுந்தவாசன் (வைகுந்தன்) 20.03.2005 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரவேலு - இலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை, வெற்றிவேலு ஆகியோரின் மருமகனும தங்கலட்சுமியின் சிறிய மகனும் சுவர்ணலிங்கம் (ரங்கன்- கனடா), பரமலிங்கம் (கண்ணன்-கனடா), பரமேஸ்வரி (பரா-ஆசிரியை, சென். மேரிஸ் வித்தியாலயம்), ஸ்ரீரங்கநாயகி, செந்தமிழ்ச்செல்வி, திலகவதி (ஆசிரியை, யா/இந்து ஆரம்பப் பாடசாலை), நிர்மலா ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுரேனுகா, ஸ்ரீநிகேதன், லவன் ஆகியோரின் ஆசை மாமாவும் பிரஷாந்தன், ஆரணி (கனடா) ஆகியோரின் ஆசைச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2005) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு இல.35, வைமன் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*35, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.* (43351)(21-16-18)

குமாரவேலு பரமேஸ்வரி (ஆசிரியை)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரச, அரசசார்பற்ற அமைப்புகள் விஞ்ஞான சங்கத்துக்கு உதவவேண்டும்

விஞ்ஞான அறிவினை மேம்படுத்தும் நோக்கமாக 1991ஆம் ஆண்டு பங்குனி மாதம் முதலாம் திகதி காலஞ்சென்ற பேராசிரியர் அ.துரைராஜா அவர்களினால் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பேராசிரியர் அ.துரைராஜா அவர்களின் தலைமையினைத் தொடர்ந்து, பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் (1992-1993), பேராசிரியர் சி.சிவஞானசுந்தரம் (நந்தி) (1993-1994), பேராசிரியர் எஸ்.மகேஸ்வரன் (1994-1995), பேராசிரியர் எ.நவரட்ணராஜா (1995-1997), பேராசிரியர் எல்.வி.பரமேஸ்வரன் (1997 - 1998), பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் (1998-1999), பேராசிரியர் பி.பாலசுந்தரம்பிள்ளை (1999-2000), பேராசிரியர் கே.பாலசுப்பிரமணியம் (2000-2001), வைத்திய கலாநிதி என்.சிவராஜா (2001-2002), ஏ.பஞ்சலிங்கம் (2002-2003), பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல் (2003-2004) போன்றோர் தமது தலைமைத்துவத்தினாலும் தன்னலமற்ற சேவையினாலும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தினை வளர்ச்சிப் பாதை மாணத்தினை நோக்கி நடைபயில வழிவகுத்துள்ளனர்.

பேராசிரியர் சி.சிவஞானசுந்தரம் (நந்தி), பேராசிரியர் குணரட்ணம், கலாநிதி கு.மிகுந்தன் ஆகியோரின் முயற்சியால் உருவான யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் இலச்சினை சக்கரத்தினையும் நடுவே அணுவின் மூலக் கருவினையும் நெல்மணிகளையும் மீனினையும் சுடர் விடும் சுட்டி விளக்கினையும் கொண்டுள்ளது. இவற்றுள் சக்கரம் விஞ்ஞானப் புரட்சியையும் அணு நவீன காலத்தினையும் நெல் மணிகளும் மீனும் யாழ்.குடாநாட்டின் பிரதேச வளத்தினையும் சுட்டிவிளக்கு கலாசாரத்தினையும் குறித்து

## அதன் சாதனைகள் தொடர்வதற்கு சமூகத்தின் பங்களிப்பு அவசியம்

ஒருங்கே எமது மண்ணின் வளம், கலாசாரம், அறிவு மூன்றினையும் பிரதிநிதிப்படுத்துவதாக அமைகின்றது. (ஆதாரம்: கலாநிதி நா.சிவயோகனின் 2002ஆம் ஆண்டு தினக்குரலில் வெளிவந்த கட்டுரை)

தூய விஞ்ஞானப் பிரிவு, பிரயோக விஞ்ஞானப் பிரிவு, மருத்துவ விஞ்ஞானப் பிரிவு, சமூக விஞ்ஞானப் பிரிவு ஆகிய 4 பெரும் பிரிவுகளினைக் கொண்டுள்ள யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் வருடா வருடம் எம் மண்ணின் நன்மை கருதி ஆய்வுக்கட்டுரை அமர்வுகள், பொதுக்கருத்தரங்குகள், செயல்முறைப் பயிற்சிப்பட்டறைகள் போன்றவற்றை நடத்தி வருகின்றது. தனது செயற்பாட்டினைப் பாடசாலை மட்டத்தினை நோக்கியும் விரிவுபடுத்திய இச்சங்கம் ஆரம்பகாலம் முதற்கொண்டே விஞ்ஞான வினாவிடைப்போட்டி (Quiz contest), விஞ்ஞான பேச்சுப் போட்டி (Oratorical contest) என்பவற்றை நடத்தி வந்துள்ளது.

அதனைத் தொடர்ந்து 1999ஆம் ஆண்டு கண்காட்சிப் போட்டியினையும் (Exhibition contest), 2000 ஆம் ஆண்டு கட்டுரைப் போட்டியினையும் (Essay contest) ஜி.சீ.ஈ. சாதாரண தரம், உயர்தரம் மாணவர்களிடையே நடத்தி வருவதன் மூலம் பாடசாலை மாணவர்களின் விஞ்ஞான அறிவினை மெருகூட்டி வருகின்றது.

இந்நிகழ்வின் நிறைவாக வருடாந்த அமர்வு (Annual Sessions) நடைபெறும். இதன்போது ஆராய்ச்சிக் கட்டுரைகள் (Research Paper Presentation), பகுதித் தலைவர்களின் உரைகள் (Sectional Charirmen Address), கருப்பொருள் விவாதம் (Theme Seminar), பிரசித்தமான உரை (Popular Talks), மதிப்பீட்டுரை (Review Talks), தலைவர் உரை (President Address) என்பன நடைபெறும்.

இதனைத் தவிர, சங்கத்தினால் எமது சமூகத்தின் தேவையை நிறைவுசெய்யும் பொருட்டு அறிவுச் சஞ்சிகைகளும் நூல்களும் காலம் காலமாக வெளியிடப்பட்டு வருகின்றன. இவ்வாறு தன்னலம் கருதாது செயற்பட்டுவரும் இந்நிறுவனத்திற்குச் செயற்பாடுகளினை விரிவுபடுத்தப் போதிய பண வசதியோ, நிரந்தரக் கட்டட வசதியோ இல்லாமை ஒரு பெருங்குறையாகவே அமைகின்றது என்பது மறுக்கப்படமுடியாதவோர் உண்மையாகும். காலத்தின் தேவையை உணர்ந்து அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் அல்லது மக்களின் உதவிகள்

**செல்வி சுமதி சின்னத்தம்பி**
உதவிப் பொதுச் செயலாளர்,
யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம்.

கிடைக்குமிடத்து யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் தனது சேவையை மேலும் விரிவுபடுத்தித் தொடர்ந்தும் மக்களுக்கான சேவையை ஆற்றும் என உறுதியாகக் கூறலாம். ☆

# அருகிவரும் நிலத்தடி நீர்வளம்....!

**இன்று உலக தண்ணீர் தினம் ஆகும். உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்பட்டுவரும் இந்த நாளில் யாழ்ப்பாணத்தில் நீர்வளப் பயன்பாடு தொடர்பாக இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

பண்டைய மன்னர்கள் குளங்களைக் கட்டியும் கால்வாய்களை அமைத்தும் நீர்ப்பாசனத் துறையை அபிவிருத்தி செய்ததைக்கொண்டு அன்றைய காலகட்டத்தில் நீர் வளத்தில் எவ்வளவு அக்கறை கொண்டிருந்தனர் என்பதைத் தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றது. ஆனால், இன்று அதாவது இருப்பதோராம் நூற்றாண்டின் ஆரம்பப்பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கும் எம்மவர்களின் அக்கறை மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

நாம் இந்நூற்றாண்டில் எதிர்நோக்கப் போகின்ற பாரிய பிரச்சினையாக நீர் பற்றாக் குறை இருக்கின்றது. இலங்கையில் உள்ள இடங்களில் 2025ஆம் ஆண்டு நீர்ப்பற்றாக் குறை நிலவும் என சூழலியல் ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இயற்கை அன்னையின் ஒரு வரப்பிரசாதமாக நிலத்தடி நீர் (Ground Water) இருக்கின்றது. இருந்தபோதிலும் இவற்றின் அளவும் படிப்படியாகக் குறைந்துகொண்டு வருகின்றது. அதாவது பெரும்பாலான நன்னீர் வளமானது உவர்நீராக மாறி வருவதால் பாவனைக்குரியதல்லாததாக இருக்கின்றது.

யாழ்.மாவட்டதில் வருடாந்தம் 1000-1250 மிலலிமீற்றர் மழைவீழ்ச்சி கிடைக்கின்றது. இவ்வாறு கிடைக்கின்ற மழைவீழ்ச்சியில் ஒருபகுதி மேற்பரப்பினூடாகச் சென்று கடலையடைகின்றது ஒரு பகுதி நிலத்தினூடாக வடிந்து நிலத்தடி நீரைச் சென்றடைகின்றது. ஏனெனில், வனமையான படை போன்ற முருகைக் கற்பாறை (Lime stone) அமைப்பும் வடிந்தோடக் கூடிய மண்ணின் கட்டமைப்பும் பெரும்பங்காற்றுகின்றது.

அளவுக்கதிகமாக நீர் இறைத்தல் (over pumping) நிலத்தடி நீர் வளம் குறைந்து செலவதற்கு ஒரு காரணமாக இருக்கின்றது. இவ்வாறு தொடர்ந்து செய்வதால் நீரின்தரம் அதிகரித்தாலும் ஈற்றில் அது உவர்த்தன்மையாக மாற்றமடைந்து எதற்கும் உபயோக மற்றதாக மாறுகின்றது. இது மீண்டும் நன்னீராக மாற்றமடைவது என்பது நினைக்க முடியாததொன்றாகும்.

☆ பெரும்பாலும் விவசாய நிலங்களாக இருப்பதனால் அதிகளவு நைதரசன் செறிவு கொண்ட உரங்களை அளவுக்கதிகமாக பாவிப்பதனால், நிலத்தடிநீரில் நைத்திரேற்று செறிவு அதிகரித்துச் செல்கிறது. இதனால் நீர்வளம் பாதிப்படைகின்றது.

☆ தற்போது நடைபெறுகின்ற புனர்நிர்மாண வேலைகளுககாக கடற்கரையோரங்களிலுள்ள மணல் அகழ்ந்தெடுக்கப்படுவதனால் கடல்நீர் உட்புகுதல் நிகழ்கின்றது. இது நிலத்தடி நீருடன் கலப்பதனால் உவர்த்தன்மையாக மாற்றமடைகின்றது.

எனவே, இதுபோன்று இன்னும் பல்வேறு காரணங்களினால் நீரின்வளம் குறைவடைந்து செல்கின்றது -

**காந்தன்**
**விவசாயபீடம்**

'ஒரு துளி மழைநீரேனும் வீணே கடலைச் சென்றடைய விடமாட்டேன்' என்ற பண்டைய மன்னர் பராக்கிரமபாகுவின் கூற்றுக்கமைய தூர்ந்துபோன குளங்களைப் புனரமைத்து வீணே கடலைச் சென்றடையும் மழைநீரைச் சேமிப்பதனமூலம் நீரின் வளத்தை அதிகரிக்கச் செயலாம்.

மழைகாலங்களில் மழைநீரைச் சேமித்து அந்நீரை விவசாயத் தேவைகளுக்குப் பயன்படுத்துவதன் மூலம் நிலத்தடிநீரைப் பாதுக்காக்கலாம். விவசாய நிலங்களில் அளவுக்கதிகமான நீர் வீண்விரயத்தைத் தடுப்பதற்கு புதிய உத்திகளைக் கையாளல்.

I. சொட்டுமுறை நீர்ப்பாசனம்
II. தூறல் முறை நீர்ப்பாசனம்

உரப்பாவனையின் போது நிர்ணயிக்கப்பட்ட அளவுகளில் பயன்படுத்துவதன் மூலம் நிலத்தடி நீர்வளம் பாதிப்படையாமல் பாதுகாக்கலாம்.

● யாழ்.நகரப்பகுதியை எடுத்துநோக்கின் குடிசன அடர்த்தி கூடுதலாகக் காணப்படுகின்றது. எனவே, இங்கு மலசலகூடக்குழிகள் கிணறுகளுக்கு அண்மையாக அமைக்கப்படுவதனால் நீரின்வளம் பாதிப்படைகின்றது.

● தூர்ந்த நிலையிலுள்ள அராலி, தொண்டைமானாறு, அரியாலை, உப்பாறு போன்ற இடங்களிலுள்ள அணைக்கட்டுக்கள் காரணமாகக் கடல் நீர் உட்புகுவதனால் அவ்விடங்களில் நிலத்தடி நீர் (நன்னீர்) உவர்நீராக மாறிவருகின்றது.

நகரப்பகுதியிலுள்ள மலசலகூடக்கழிவுகளை குழாய்கள் மூலமாக கொண்டு சென்று மீதியின்றி அழிவடையக் கூடிய வகையில் ஆழ கிருமி நீக்கம் செய்து கடலில் கொட்டுதல். அராலி, தொண்டைமானாறு, அரியாலை, உப்பாறு போன்ற இடங்களிலுள்ள அணைக்கட்டுகளை புனரமைத்தல். இதனால் கடல்நீர் உட்புகுவதை தடுப்பதன் மூலம் நிலத்தடி நீரைப் பாதுகாக்கலாம்.

எனவே வந்த பின் யோசிப்பதைவிட வருமுன் காத்து எமது எதிர்காலச் சந்ததியின் வாழ்வை வளமாக்குவோமாக. ☆

# இலங்கைக்கு நவீன 'ரடார்' வழங்கும் பாக். திட்டத்தால் இந்தியா அதிருப்தி

கொழும்பு,மார்ச்22

இலங்கை விமானப் படையினருக்கு நவீன 'ரடார்' உபகரண வசதிகள் கொண்ட பாதுகாப்புக் கட்டமைப்பை அமெரிக்காவின் அனுசரணையுடன் செய்து கொடுக்க பாகிஸ்தான் முன்வந்திருப்பது குறித்து இந்தியா அதிருப்தி கொண்டுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இந்தியாவின் தேசிய பாதுகாப்புத்துறை ஆலோசகர் நாராயணன் இந்த விவகாரம் குறித்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு அறிவுறுத்தியிருக்கிறார் எனவும் -

பாகிஸ்தான் மற்றும் அமெரிக்காவின் அடுத்த கட்ட நகர்வுகளை புதுடில்லி வெகு உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் -

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் கடமையாற்றும் பெயர் குறிப்பிட விரும்பாத உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தமொன்றைச் செய்துகொள்வதில் ஒருபுறம் சிரத்தையுடன் செயற்பட்டு வரும் இலங்கை அரசு, மறுபுறம் தனது பாதுகாப்புக் கட்டமைப்புக்களை மேம்படுத்த பிராந்தியத்தின் ஏனைய நாடுகளின் உதவியைப் பெறுவது குறித்து புதுடில்லி பாதுகாப்புத்துறை ஆலோசகர்களும் அதிருப்தி தெரிவித்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

இதேவேளை, அண்மையில் இலங்கை வந்த பாகிஸ்தான் கடற்படையின் பிரதம அதிகாரி கலீம் சதாத் மேற்படி 'ரடார்' விடயம் குறித்து இலங்கையின் முக்கியஸ்தர்களுடன் நடத்திய பேச்சு மற்றும் இதர விவரங்கள் கொண்ட அறிக்கையொன்றை கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் புதுடில்லிக்கு அனுப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில், இந்தமாத இறுதியில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள இருந்த இந்தியப் பிரதமரின் விஜயம் பிற்போடப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-க)

# அரச ஊடகங்களில் மறுசீரமைப்பு விரைவில்

கொழும்பு,மார்ச்22


அரச ஊடகங்களை மறுசீரமைக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் திட்டங்கள் வெகுவிரைவில் அமுல்படுத்தப்படவுள்ளன என்று தெரிகிறது. இதன்போது அரச ஊடகங்களில் உயர் பதவிகளை வகிக்கும் பலர் மாற்றப்படுவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீனத் தொலைக்காட்சி நிறுவனம் ஆகியவற்றில் பணியாற்றும் முக்கிய புள்ளிகள் இந்த மறுசீரமைப்பின்போது வேறு இடங்களுக்கு மாற்றப்படுவார்களென்று ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

அரச ஊடகங்களில் லேக்ஹவுஸ், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகிய இரண்டைத் தவிர இதர அரச ஊடகங்கள் ஜே.வி.பியினருக்கு சார்பான முறையில் செயற்படுகின்றன என்று ஜனாதிபதி சந்திரிகா கருதுகிறார். மறு சீரமைப்புச் செயற்பாட்டில் குறிப்பிட்ட ஊடகங்கள் குறித்து தீவிரமாகக் கவனஞ்செலுத்தப்படுமென்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை -

கடந்த வார இறுதியில் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற அரச ஊடகங்களின் தலைவர்களுக்கான விசேட கூட்டமொன்றிற்கு இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் அழைக்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (எ-க)



தொழிற்றிறன் அமைச்சினால் தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட தொழிற்றிறன் போட்டிகளில் யாழ்.தொழில் நுட்பக்கல்லூரியைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் தேசிய நிலையில் அதிகூடியபுள்ளிகளைப் பெற்று வெள்ளிப் பதக்கங்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டனர். பதக்கம்பெற்ற மாணவர்களான எம்.இராசகுமார், எஸ்.சுரேஷ்குமார் ஆகியோரும் மாகாணமட்டத்தில் சான்றிதழ்பெற்ற எம்.சங்கரன் மற்றும் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி அதிபரும் பிரதிப் பிராந்தியப் பணிப்பாளருமான என். யோகராஜன், யாழ்.தொழில்நுட்பக்கல்லூரி விரிவுரையாளர்களும் இணைந்து தொழிற்பயிற்சி அமைச்சர் பியசேன கமகேயுடன் எடுத்துக்கொண்ட படம். *(படம்-சாவகச்சேரிச் செய்தியாளர்)*

# கிளைமோர்களுடன் சிங்களக் கிராமவாசி கைது!

கொழும்பு,மார்ச் 22

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலில் 13 கிலோ நிறையுள்ள இரண்டு கிளைமோர் கண்ணிவெடிகளை மறைத்து எடுத்துவந்தார் எனக் கூறப்படும் சிங்களக் கிராமவாசியொருவர் பொலன்னறுவைப் பொலீஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார்.

பொலன்னறுவை கதிரவெவ பகுதியில் தமிழ்ப் பெண்ணொருவரைத் திருமணம் செய்திருக்கும் சிங்களக் கிராமவாசியே இவ்வாறு கிளைமோருடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிளைமோர்களைக் கடத்திவரப் புலிகள் இந்த கிராமவாசியைப் பயன்படுத்தி இருக்கக் கூடும் என்று பொலீஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். பொலன்னறுவைப் பொலீஸார் இது குறித் துத் தீவிர விசாரணை நடத்திவருகின்றனர். (எ-க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனிலா சுவையூட்டப்பட்டது

# Action

Nutritional Food Drink

போஷாக்கு நிறைந்த பானம்

**பிள்ளைகள்**
சக்தி, புரதம், கல்சியம், இரும்புச்சத்து, விட்டமின் B, மற்றும் ஏனைய அத்தியாவசிய போஷனைகள்.



**வாலிபர்**
சக்தி, புரதம், கல்சியம், இரும்புச்சத்து, சின்க், மற்றும் ஏனைய அத்தியாவசிய போஷனைகள்.



**வயது வந்தவர்கள்**
புரதம், கல்சியம், இரும்புச்சத்து, சின்க், அன்டி ஒக்ஸிடன் மற்றும் ஏனைய அத்தியாவசிய போஷனைகள்.



**கர்ப்பிணி/பாலூட்டும் தாய்மார்கள்**
சக்தி, புரதம், கல்சியம், (ƒ)போலிக் அமிலம், விட்டமின் B12, இரும்புச்சத்து, மற்றும் ஏனைய அத்தியாவசிய போஷனைகள்.



**போஷாக்கின் வாழ்க்கை வட்டம்.**

27 அத்தியாவசிய போஷனைப்பதார்த்தங்கள்

தகுந்த சின்க் இரும்புச்சத்து விகிதம்.

தகுந்த கல்சியம் பொஸ்பரசு விகிதம்.

**வயோதிபர்**
புரதம், விட்டமின் B, அன்டி ஒக்ஸிடன் மற்றும் ஏனைய அத்தியாவசிய போஷனைகள்.



450 கிராம்
ரூ.460/=




Manufactured by :

Astron

**Astron Limited,**
688, Galle Road, Ratmalana, Sri Lanka.
Tel: 2636741, 5566741 Fax: 2636173
E-mail: astron@astron.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னலம் கருதாது சேவை புரிபவர்களை அவர்கள் வாழும் காலத்திலேயே கௌரவிக்க வேண்டும்

## மல்லாகம் மாவட்ட நீதிவான் தெரிவிப்பு

வலி.தெற்கு,மார்ச்21

நலிவுற்ற மக்களுக்கும், கஷ்டப்படும் ஏழைகளுக்கும் தன்னலம் கருதாமல் அர்ப்பணிப்புடன் சேவையாற்றிவரும் ஆறு.திருமுருகன் போன்ற நல்லிதயம் கொண் டோரை அவர்கள் வாழும் காலத்திலேயே பாராட்டி கௌரவிக்காது போனால் தமிழ் இனம் நன்றி மறந்த இனமாகவே மதிக்கப்படும்.

மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் மேற்கண்டவாறு கூறினார்.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனுக்கு அவரது பொதுப்பணியைப் பாராட்டி சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினர் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் விழா நடத்தினர். சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் த.அரியரத்தினம் தலைமையில் விழா இடம்பெற்றது.

.மாவட்ட நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

பிறர் வாழ்வில் இன்பம்காணும் பொதுச் சேவை மனம் படைத்தவர்கள் இக்காலத்தில் மிகவும் குறைவாகவே உள்ளனர். பொதுப் பணிகளில் ஈடுபடும் ஆறு.திருமுருகன் போன்ற ஒருசிலரின் சேவைகளை நாம் நன்றியுடன் பாராட்ட வேண்டும். பொருள்கள் இருப்பினும் அவற்றை ஏனையோருக்கு வழங்கி அவர்களின் துயர் துடைக்கவேண்டும் என்ற எண்ணம் எம்மில் பலருக்கு இருப்பதில்லை ஆனால், ஆறு.திருமுருகன் தன்னிடம் பொருள்இல்லாதபோதும் வெளிநாடுகளில் மேற்கொள்ளும் ஆன்மீகப்பிரசார பணிகள் மூலம் கிடைக்கும் உதவிகளையும் பணத்தினையும் இங்குள்ள நலிவுற்ற மக்களுக்கும் ஏழைகளுக்கும் வழங்கி அரும் பணியாற்றுகின்றார். இவர் போன்ற பொதுப்பணியாளர்களை நாம் நன்றியுடன் பாராட்டவேண்டும் என்றார்.

விழாவில் தலைமை வகித்த லயன்.த.அரியரத்தினம் தமது உரையில்:-

சுன்னாகம் லயன்ஸ் கழகம் தற்போது அதன சேவைகளை விஸ்தரித்துள்ளது. சேவைகள் அதிகரிப்புக்கேற்ப மக்களின் தேவைகளும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. எமது சேவைகளை குறைவின்றி நிறைவேற்ற எமக்கு ஒரு நிரந்தர கட்டடம் இருக்கவில்லை ஆறு.திருமுருகன் கந்தரோடையில் ஒரு காணியுடன் கூடிய கட்டடத்தை எமது தேவைகளுக்கென வழங்கியுள்ளார். இதன்மூலம் எதிர்காலத்தில் பல இடங்களில் வைத்திய முகாம்களை நிறுவி இலவச கண் பரிசோதனைகளை மேற்கொண்டு மூக்குக்கண்ணாடிகள் வழங்கவும் சலம், இரத்தப் பரிசோதனைகளை மேற்கொள்ளவும் முடியும்.

சுனாமி கடலலையால் பாதிப்புற்ற மக்களுக்கு உதவிகள் வழங்கியும் ஏழைப் பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவுவது போனற பல பணிகளை விஸ்தரித்து செயற்படுத்த முடியும் என்றார்.

ஆறு.திருமுருகன் தமது பதிலுரையில் கூறியதாவது:-

எனக்கு கிடைக்கும் பணத்தினை பொதுப் பணிகளில் செலவிடுவதில் ஆத்ம திருப்தி அடைகிறேன். வெளிநாடுகளில் வசிக்கும் நம்மவர்களில் பலர் இங்குள்ள ஏழைமக்களுக்கு உதவிசெய்ய ஆவல் கொண்டு காத்திருக்கிறார்கள். அவர்களின் உதவிகளைப் பெற்று இங்குள்ள ஏழைகளுக் கும் ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் நிச்சயம் உதவுவேன். சமூகப்பணி எனக்கு மன அமைதியையும் திருப்தியையும் தருகின்றது - என்றார்.

(ப-152-204)




### பெண்களுக்கான சமூக அபிவிருத்தி மன்றம்

## சுனாமியால் பாதித்த மக்களுக்கு ரூ.2 லட்சம் பெறுமதியான பொருள்கள் விநியோகம்

வலி.தெற்கு,மார்ச்22

யாழ்ப்பாணம் சமூக அபிவிருத்தி மன்றம் பெண்களுக்கான ஓர் அரச சார்பற்ற நிறுவனமாக விளங்குகின்றது. விதவைகளும் விவசாயிகளுமே இதில் கூடிய பங்கு வகிக்கின்றனர். சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எமது அமைப்பு 2 லட்சம் ரூபா பெறுமதியுடைய பொருள்களை வழங்கியுள்ளது என யாழ். சமூக அபிவிருத்தி மன்றத்தின் தலைவி என்.ஜெகதீசன் தெரிவித்தார்.

யாழ். நல்லூரடியில் உள்ள பாரதியார் சிலைக்கருகில் புதிதாகத் திறந்து வைக்கப்பட்ட காரியால்யத்தில் யாழ். சமூக அபிவிருத்தி மன்றத்தின் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு தலைமை வகித்து உரையாற்றிய திருமதி என்.ஜெகதீசன் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

20 வருடங்களுக்கு முன் அமரர் ஞானப்பிரகாசம் தொடக்கி வைத்த இந்த நிறுவனம் இன்று வடக்கு - கிழக்குப் பகுதிகளில் 150 கிளைகளுடன் இயங்கிவருகின்றது. 20 ரூபா பணத்தோடு ஆரம்பித்து இன்று 19 லட்சம் ரூபா நிதி சேமிப்பில் வைக்கப்பட்டுள்ளது. எமது நிலைய உறுப்பினர்களுக்கு இந்த நிதியில் இருந்து ஐந்தாயிரம் ரூபா தொடக்கம் ஒரு லட்சம் ரூபாவரை சுழற்சிமுறைக்கடன் வழங்கி வருகின்றோம்.

பெண்களால் இயக்கப்பட்டு வரும் இந்த நிறுவனத்தின் வளர்ச்சிக்கு சகலரும் ஒத்துழைப்பும் உதவியும் தரவேண்டும். சுனாமி கடலலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை-வல்வெட்டித்துறை மக்களுக்கு எமது மன்றம் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை வழங்கி உள்ளது. மற்றொரு பொருள் தொகுதி விரைவில் வழங்கப்படவுள்ளது என அவர் கூறினார்.

சமூக அபிவிருத்தி மன்ற இணைப்பதிகாரி சி.பொ.வ.ம.க.முதலியார் உரையாற்றுகையில்:-

இந்த மன்றம் வியாபார நோக்கமின்றி பொதுச்சேவைகளில் பணியாற்ற பல திட்டங்களை முன்வைத்துள்ளது. பெண்களுக்கு வேலைவாய்ப்புக்கருதி தையல் தெரிந்த பெண்கள் மூலம் ஆடைகள் தைத்து விநியோகிக்கின்றோம். ஆடை தைக்கும் தொழிற்சாலை, தேநீர்- உணவுச்சாலை, என்பனவற்றை அமைக்கவும், குரக்கன், தினை போன்றவற்றை மாவாக்கி பொதிசெய்யவும், பலகாரங்கள் செய்து விற்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இம் மன்றத்துக்கென தனியானதொரு கொடிதேவை. இம்மன்றத்தின் இயங்காத கிளைகளை இயங்கவைத்து சுயமாகச் செயற்பட உதவி செய்ய வேண்டும்- எனக் கூறினார்.

திருமதி பற்றிக் நவதீசனும் உரையாற்றினார். திருமதி என்.ஜெகதீசன் மன்றத்தின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டதோடு ஒன்பது நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ப- 152)

## இனத்தின் உன்னத நிலையைப் பிரதிபலிப்பது கலை இலக்கியப் படைப்புகள் தான்



ஒரு இனம் உன்னதம் பெற்ற தேசிய இனமாக வளர பரதம் போன்ற கலைப்படைப்புகள் உருவாக வேண்டும். தென்னாசியாவிலே சிறந்த கலைப்பொக்கிஷமாகத் திகளும் இந்தியக் கலைப் பண்பாட்டின் மரபு சிறப்பானது.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் கூறினார்.

செல்வி இந்திரா பிரியதர்சினியின் பரத நிருத்திய அரங்கேற்றம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்குத் தலைமைவகித்துப் பேசிய பேராசிரியர் சிவச்சந்திரன் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:-

இந்தியாவில் இக்கலையானது இன்னமும் குருகுலக் கல்வி முறையிலேயே இருந்து வருகின்றது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இருந்தாலும் இத்துறையில் பட்டதாரிகளை உருவாக்கும் நிலையில் யாழ்ப்பாணக் பல்கலைக்கழகமே இருக்கிறது. ஏறத்தாழ 300 இற்கும் அதிகமான பட்டதாரிகளை உருவாக்குகின்றோம்.

எமது பிரதேசத்தில் இரண்டாயிரம் பாடசாலைகள் வரை உண்டு. இது போன்ற கலைகளைக் கற்பிப்பதற்கு அரங்குகளும் போதிய ஆசிரியர்களும் இல்லை. அழகியற் கலைக்கென ஒரு பாடசாலைக்கு இரண்டு ஆசிரியர்களை நியமிக்க முடியும் என வலயக் கல்விப் பணிப்பாளருடன் உரையாடியதில் அறியமுடிந்தது. அதன்படி சுமார் 4000 பட்டதாரி ஆசிரியர்கள் தேவைப்படுகின்றார்கள் இந்தக் குறை நீங்கும் போது எமது கலைகளை உலக அரங்கில் வளர்த்தெடுக்கும் வாய்ப்புக்கள் அதிகமாகக் கிடைக்கும்.

சைவப் பாரம்பரியமும் கலைகளைப் போற்றிடும் பாரம்பரியமும் கொண்ட பெற்றோரின் வழிகாட்டலில் நடனம் மட்டுமன்றி இசைத் துறையிலும் ஆர்வம் கொண்டவராக இந்திரா பிரியதர்சினி விளங்குகிறார். உயர்ந்த கலைப்படைப்பாக விளங்கும் பரதக்கலையை உற்சாகத்துடன் பயின்று, அரங்கேற்றம் காணும் இவர் அரங்கேற்றத்துடன் ஓய்ந்துவிடாது தொடர்ந்தும் இக்கலையின் சிறப்பை ஏனையோரும் உணரக்கூடிய செயல்களை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பேசும்போது கூறியதாவது:-

எமது கலாசார பண்பாட்டு விழுமியங்கள் பேணப்படவேண்டும் எனின் அழகியற்கலைகளில் நம்மை ஈடுபடுத்திக்கொள்ளவேண்டும். ஒரு கணிதத்துறை மாணவியான இவர் கலைகளில் நாட்டம் கொண்டு அவற்றைப் பயிலுவது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு சிறந்த குருவினால் பயிற்றப்பட்டு நடனத்தின் நுணுக்கங்களை முழுமையாகப் புரிந்து கொண்டு இந்த அரங்கேற்றத்தின் ஊடாக தனது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளார் செல்வி இந்திரா பிரியதர்சினி என்றார். (11-204)

## பாப்பா பாட்டுக்கள் மூலம் இனமொழி உணர்வை ஊட்டலாம்

நல்லூர் சிறார்களை முதலாளித்துவச் சிந்தனையுடைய சின்னத்திரை விழுங்கிக் கொண்டிருக்கிறது. இந்த நிலைமையிலிருந்து மீண்டு எழ சமூக தேசிய மொழி உணர்வுகள் ஊட்டப்பட வேண்டியது அவசியம். அவை பாலர் பாடல்களாலேயே முடியும்.

இவ்வாறு கூறினார் கலை பண்பாட்டுக்கழகத் துணைப் பொறுப்பாளர் வளநாடன்.

கல்வயல் வே.குமாரசாமியின் பாப்பாப்பா சிறுவர் பாடல் நூல் வெளியீட்டு விழா கோப்பாய் ஆசிரியர்கலாசாலை மண்டபத்தில் யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெற்றது.

விழாவில் தொடர்ந்து பேசிய வளநாடன் கூறியதாவது:-

தமிழ்த் தேசம் விடுவிக்கப்பட்ட பிரதேசமா விடுதலை பெற்ற பிரதேசமா என்று பலர் நினைக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் எல்லா வசதியும் உள்ளது. எனவே, அது விடுதலை பெற்றபிரதேசம் என்று நினைக்கிறார்கள்.

சிறுவர்களுக்கு அறத்தை, அன்பை விளக்கும் பாடல்கள் தேவையாக இருப்பினும் இன்றைய கால கட்டத்தில் தேசப்பற்றும் சமூக சுதந்திர மொழிப் பற்றுக்களை எமது பண்பாட்டு விழுமியங்களை ஊட்டக் கூடிய பாடல்களும் தேவை. சரியான மேய்ப்பர்கள் இன்றிப் பிள்ளைகள் தடுமாறுகிறார்கள். நம்மை முதலாளித்துவ சிந்தனையுடைய சின்னத்திரை விழுங்கிவிட்டது. அது எமது பிள்ளைகளை உளரீதியாகப் பாதிக்கிறது.

பிள்ளைகளுக்கு அடிப்படைகளைச் சொல்லிக்கொடுத்தால் அவர்களின் எதிர்காலம் நல்ல முறையில் அமையும். இந்தப் பாடல்கள் அனைத்துமே உரியமுறையில் அமைந்துள்ளதால் குழந்தைகள், சுலபமாகப் படிக்கக் கூடியதாக உள்ளனர் என்றார்.

கலாநிதி க.குணராசா தனது தலைமையுரையில் கூறியதாவது:-

கவிஞ்ஞரின் இலக்கிய உலகம் மிகப் பரந்தது யாழ்.இலக்கிய வட்டத்தின் மூத்த உறுப்பினர் பல மூத்த கவிஞ்ஞர்களுடன் இணைந்து பட்டி தொட்டிகளில் எல்லாம் கவியரங்குகளில் கவி மழை பொழிந்துள்ளார். அந்தக் காலத்திலேயே தனக்கென ஒரு முத்திரை பதித்தவர் கவியரங்கங்களினூடாக இளம் வயதிலேயே மக்களின் உற்சாகமான வரவேற்பைப் பெற்றவர்.

இந்திய இராணுவம் இங்கு ஆதிக்கம் செலுத்திய காலத்தில் குறியீடாக அவரது கவிதைகள் வந்துள்ளன. குறியீடாக கவிதையிட வேறு எவரும் இல்லை.

ஈழத்தில் குழந்தைக் கவிதைகளை ஆக்கிய பரம்பரை உண்டு. நவாலியூர் சோமசுந்தரப் புலவர், பண்டிதர் வேந்தனார் போன்றவர்களின் வழியில் இன்று இந்தப் பாப்பாப்பா மூலம் குமாரசாமிக்கும் உரிய இடம் கிடைக்கிறது. ஒரு ஆறு வயதுப் பையன் கூட இசையுடன் பாடக் கூடியதாக அவரது பாடல்கள் அமைந்துள்ளன. நாம் இயற்கையை மறந்துவிட்டோம் அதற்கு முரணாக மாறியுள்ளோம். அண்மையில் ஏற்பட்ட சுனாமிகூட அதற்கு ஒரு எடுத்துக்காட்டு என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பராமச்சார்ய சுவாமிகள் தனது ஆசியுரையில்:-

தனது கவிதையூடாக குழந்தைகளை மட்டுமன்றி பெரியவர்களையும் மகிழ்விக்கக் கூடிய ஆற்றல் கவிஞ்ஞரிடம் இருப்பதை அறிய முடிகின்றது. தமிழகத்தில் இருந்துவரும் குழந்தைகளுக்கான படைப்புகள் போன்று ஓவியங்களின் மூலம் எமது மண்ணிலும் சிறந்தமுறையில் குழந்தைகளுக்கான பாடல்களை நூலாக உருவாக்கமுடியும் என்பது இந்த நூலின் சிறப்பால் தெளிவாகிறது. இன்றைய தேவையை உணர்ந்து இதனை வெளியிட்டுள்ளார். நாளைய சமுதாயத்தை உருவாக்கும் ஆசிரியர் சமுதாயத்தின் மத்தியில் இது வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது என்றார்.

பண்டிதர் ந.சச்சிதானந்தம், கவிஞர் இ.முருகையன், ஆசிரியர் கலாசாலையின் உப அதிபர் எஸ்.செந்தில்மாறன், நூலாசிரியர் வே.குமாரசாமி ஆகியோரும் பேசினார்கள். (ப-111-204)

## வசதிகளற்ற பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் பாராட்டப்பட வேண்டும்

நல்லூர்,மார்ச்21

எல்லா வளங்களும் வாய்ப்புகளும் பெற்ற பிரபல பாடசாலைகளில் கற்பிப்பதைவிட கற்பித்தலுக்கான வசதிகளற்ற பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களே பாராட்டப்பட வேண்டியவர்கள்.

இவ்வாறு நல்லூர் நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையின் மெய்வல்லுநர் போட்டிகளில் பேசிய முன்னாள் ஆரம்பக் கல்வி உதவிப் பணிப்பாளர் செ.மகேசு கூறினார்.

வித்தியாலய அதிபர் சு.சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மகேசு தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

வளங்களற்ற பாடசாலைகளில் கற்கும் மாணவர்களின் எதிர்காலத்தைத் தமது சிந்தையுள இருத்தி அவர்களின் உயர்வுக்காகத் தங்களை அர்ப்பணிப்பவர்கள் இது போன்ற பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்கள் வளங்களை வசதிகளைத் தேடிக் கற்பிப்பதற்காக அவர்கள் கடினமாக உழைக்கிறார்கள். அந்த வகையில், இந்தப் பாடசாலையின் ஆசிரியர்கள் இங்கு பயிலும் மாணவர்களுக்கு மகத்தான தொண்டைச் செய்துவருகின்றார்கள்.

ஏனைய பாடசாலை மாணவர்களைப் போன்று இந்தப் பாடசாலை மாணவர்களும் இந்தப் போட்டிகளில் கலந்துகொண்டு தமது திறமையை வெளிக்காட்டியுள்ளனர். கல்வி மனிதனுடைய எதிர்காலத்துக்கு எவ்வாறு முக்கியத்துவம் மிக்கதோ அதேயளவு உடற் பயிற்சிகளும் முக்கியமானது. உடல் நலனும் திடகாத்திரமும் கொண்ட சந்ததிகளாக அறிவு நிறைந்த தலைமுறையாக எமது இளைஞர்கள் உருவாகவேண்டிய தேவை இன்று எமக்கு இருக்கிறது. அதனை நிறைவுசெய்யும் பொறுப்பில் ஆசிரிய சமூகம் முன்னிலை வகிக்க வேண்டியுள்ளது என்று கூறினார்.

அதிபர் சிவபாதசுதந்தரம் தனது தலைமையுரையில்:-

பாடசாலையின் வளர்ச்சி பெற்றோர்களதும் பழைய மாணவர்களினதும் ஒத்துழைப்பில்தான் தங்கியுள்ளது. இந்தக் கிராமத்தின் கல்விக்கான செயற்பாடுகளில் முன்னின்று உழைத்து கிராமத்திற்கு பெருமை சேர்க்கும் பொறுப்பு இப் பாடசாலைக்குரியது. ஆசிரியர்கள் அதனை நன்கு உணர்ந்து கொண்டு பணியாற்றுவதால் எதிர்காலம் நம்பிக்கை மிக்கதாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை என்றார்.

போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ப-111)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தென்மராட்சியில் ஓய்வூதியர் சங்கம் அங்குரார்ப்பணம்

தென்மராட்சி,மார்ச்22

தென்மராட்சிப் பிரதேச ஓய்வூதியம் பெறுவோர் சங்கம் நேற்றுமுன்தினம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பெருமளவு ஓய வூதியர்கள் கலந்துகொண்டனர்.

சங்கத்தின் தலைவராக த.சபாநாயகமும் செயலாளராக இ.சரவணமுத்துவும் பொருளாளராக காசித்தம்பியும் உபதலைவராக தி.துரைராசாவும் உபசெயலாளராக யோ.யோண்பிள்ளையும் நிர்வாக உறுப்பினர்களாக இ.கந்தையா, திருமதி ந.பொன்னம்பலம் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

பிரதேச செயலக பிரதி பிரதேச செயலர் (நிதி) கியூபேட் குணம சங்கத்தின் செயற்பாடுகள் குறித்து உரையாற்றினார். (3-117)

## ஈரவிழிகளுடன் ஈராண்டு நினைவில்



**சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை** (மூப்பர்)

உதயம் 07-02-1920 | அஸ்தமனம் 22-03-2003

நந்தவனத் தென்றலும் தந்திடாத சுகந்தமதை
உங்கள் பாசத்தால் தந்திட்ட தெய்வம்
நீங்கள் ஐயா!
சூரிய சுடரொளியும் சுட்டெரித்திடாமல் – எம்மை
உங்கள் நிழலில் நடத்திட்ட ஆலமரம்
நீங்கள் ஐயா!
எம்மைவிட்டு உடலால் நீங்கள் பிரிந்தாலும்
ஒவ்வொரு நினைவுகளும் என்றும் எம்நெஞ்சில்
அழியாத ஓவியங்களே ஐயா!
மீண்டும் ஒரு முறை இறவா வரம் பெற்று
எம்மீது தோன்றிட வேண்டுகின்றோம்
இறைவனையே ஐயா!

என்றும் உங்கள் நினைவுடன்:

**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(43337)(46-18-26)

## கனகம்புளியடி ஊடாக புதிய பஸ்சேவை ஆரம்பம்

தென்மராட்சி,மார்ச்22

தென்மராட்சித் தனியார் சிற்றூர்திச் சேவைகள் சங்கத்தினர் மேலும் ஒரு மினிபஸ் சேவையினை ஆரம்பித்துள்ளனர்.

கொடிகாமத்திலிருந்து காலை 7.30 மணிக்குப் புறப்படும் மினிபஸ் புத்தூர் சந்தி, கனகம் புளியடிச் சந்தி, பன்றித்தலைச்சி அம்மன் கோயிலடி, முகறி, மட்டுவில் தெற்கு, கைதடி - நுணாவில் வைரவர் கோயிலடி ஊடாக யாழ்ப்பாணம செல்லும்.

இந்த மினிபஸ் மாலை 5.30 மணிக்கு யாழ்ப் பாணத்திலிருந்து புறப்பட்டு இதே மார்க்கமாகக் கொடிகாமம் செல்லுமெனத் தெரிவிக் கப்பட்டுள்ளது. (3-117)

## 30 வீடுகள் கையளிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்22

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் வடமராட்சி கிழக்கின் கேவில் பகுதியில் அமைக்கப்பட்ட 30 வீடுகள் கொண்ட குடியிருப்பு மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

சுனாமி இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப பட்ட வடமராட்சி கிழக்குப் பகுதியில் தற்காலிக வீடுகள் கொண்ட குடியிருப்புகளைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அமைத்து வருகின்றது.

அந்த வகையில் 14 குடியிருப்புக்களில் அமைக்கப்பட்டுவரும் 758 தற்காலிக வீடுகள் உரியவர்களுக்குக் கையளிக்கப்படவிருக்கின்றன. (3-202)

## விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்

வெங்காயத்தில் "குமிழ் அழுகல்" நோய்த்தாக்கம் பெருமளவில் காணப்படுவதால் விதை வெங்காயம் கொள்வனவு செய்யும் விவசாயிகள் மிகவும் அவதானத்தோடு விதை வெங்காயத்தைக் கொள்வனவு செய்யுமாறு புத்தூர் கமநல சேவைநிலைய பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.சந்தியேந்திரன் விவசாயிகளைக் கேட்டுள்ளார்.

அறுவடை செய்து களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள வெங்காயத்தில் ஏற்பட்டுள்ள பற்றீரியாத் தாக்கத்தினால் குமிழ் அழுகல் நோய ஏற்பட்டுள்ளது. குறுகிய காலத்தில் முழு வெங்காயமும் அழுகிப் பழுதடைந்து விடுகின்றது.

சிறுபோக வெங்காயச் செய்கைக்காக விதை வெங்காயத்தைக் கொள்வனவு செய்யும் விவசாயிகள் குமிழ் அழுகல் நோய்த்தாக்கம் உள்ள வெங்காயத்தைக் கொள்வனவு செய்து நடுகைக்குப் பயன்படுத்துவது பற்றீரியாத் தாககத்தினால் வெங்காயச் செய்கை நிலம் உட்படப் பயிர்களும் பாதிப்படையும். எனவே, நோய்த்தாக்கம் இல்லாத வெங்காயத்தைக் கொள்வனவு செய்யவேண்டும் என அவர் அறிவுறுத்தியுள்ளார். (3-11)

## கண்ணீர் அஞ்சலி



**அரியரத்தினம் சிவகுலரத்தினம்**

*(சார்ஜன்ட், பாதுகாப்புப் பகுதி, இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்)*

இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் யாழ். பாதுகாப்புப் பகுதியில் கடமையாற்றிய சார்ஜன்ட் அரியரத்தினம் சிவகுலரத்தினம் அவர்களின் திடீர் மறைவு அறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாதுகாப்புப் பகுதியினர் - யாழ்ப்பாணம்**
**இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்.**

(சி-41624)
(24-18-26)


**யாழ்.மாவட்ட மாணவர்களுக்கு**
சர்வதேச ரீதியிலான
**வங்கியியல் கற்கைநெறிகள்**

**B.Sc. (Hons) Degree & ACIB**
**DBF, ACBF, CBF (CIB/IBSL)**

University of Manchester (UMIST)
Chartered Institute of Bankers, London (CIB)
Institute of Bankers of Sri Lanka (IBSL)

Five (5) Internationally recognized Professional Qualifications over 3years **Wish To Register?**

Register With the IBSL Through JAFFNA COLLEGE

Do you Have G.C.E. (A/L) 2 passes and G.C.E.(O/L) 6PASSES WITH 5 Credits including Maths/Commerce & Accounts and Language (Tamil/ English)

CBF Certificate in banking & Finance (6Months)

ACBF Advanced Certificate in banking & Finance(6Months)

DBF Diploma in Banking & Finance (6Months)

B.Sc. (Hons) (UMIST) with ACIB (London) (6Months)

Upto DBF Study - sit Exam in TAMIL or ENGLISH

Exams Held Twice a year March & September



விண்ணப்பமுடிவு திகதி: 24-03-2005

INQUIRIES/REGISTRATION
DIRECTOR
**JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPT.**
464, Hospital Road, Jaffna. (சி-41411)(26-18)


உ
சிவமயம்





# புங்குடுதீவு மேற்கு பெருங்காடு கிராஞ்சியம்பதி

## திருவருள்மிகு ஸ்ரீமீனாக்ஷியம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வரர் திருக்கோயில்

## மதுரையம்பதி சிவன் தேவஸ்தானம்

உத்தமோத்தம பக்ஷ (33) குண்டங்களோடு கூடிய 100 தம்பங்களைக் கொண்ட

# புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக சிறப்புமலர்

**25-03-2005 வெள்ளிக்கிழமை காலை 09.19 – 10.45**

**கிரியைகள் ஆரம்பம்:**

17-03-2005 வியாழக்கிழமை – காலை 6.00 மணி முதல்

21-03-2005 திங்கட்கிழமை – ஸ்தூபிஸ்தாபனம், தீபஸ்தாபனம், பிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம்.

22-03-2005 செவ்வாய்க்கிழமை – யாகபூஜை, ஹோமம், தீபாராதனை, திருமுறைப்பாராயணம்.



23-03-2005 புதன்கிழமை – காலை 8.00மணிக்கு ஸ்ரீமுத்துமாரியம்பாள் தெப்பக்குளத்தில் விசேடசாந்தி

**காலை 10.00மணிக்குப் பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்துதல்**

24-03-2005 வியாழக்கிழமை – ரக்ஷாபந்தனம், ஸ்பர்சாகுதி தீபாராதனை, ஆசார்யபூஜை.

25-03-2005 வெள்ளிக்கிழமை – காலை 6.00மணிக்கு யாகபூஜை.

**காலை 9.20மணிக்கு ஸ்தூபிகள் அபிஷேகம், கும்பங்கள் வீதிப் பிரதக்ஷணம் தொடர்ந்து மகாகும்பாபிஷேகம் நடைபெறும்.**

*பிரதிஷ்டா பிரதம குரு, பிரதிஷ்டா வித்தகர், கிரியா பூஷணம், சிவாகம கிரியா சிரோமணி பிரதிஷ்டாதிலகம்*

**சிவஸ்ரீ ஸ்ரீநிவாச நாகேந்திரக் குருக்கள்.**

சர்வபோதகம் – சிவஸ்ரீ நா.மகாதேவக் குருக்கள் | சிவஸ்ரீ நைலை வாமதேவக்குருக்கள்
சிவஸ்ரீ ஜெ.மகேஸ்வரக் குருக்கள் | சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள்
ஆயைஸ்தானிகர் – சிவஸ்ரீ நா.அருணோதயக் குருக்கள் | யாகஸ்தானிகர் – பிரம்மஸ்ரீ சி.தினேஷ் சர்மா

**இவர்களுடன் ஐம்பது குருமணிகளும் இருபத்தைந்து சிவாச்சார்யர்களும் பங்குபற்றி கும்பாபிஷேகத்தை சிறப்புற நடத்திவைப்பார்கள்.**

☞ *கும்பாபிஷேகத் தினத்தன்று அன்னதானம் வழங்கப்படும்.*

*45 நாள்கள் மண்டலாபிஷேகம் செய்யவிரும்பும் அன்பர்கள் ஆலயத்தில் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.*

குறிப்பு: நிதியுதவி புரிய விரும்பும் அடியார்களும் சரீர உ [illegible] பாபிஷேகத்தில் பங்குபற்றி திருவருளைப் பெற்றுய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**புங்குடுதீவு.** (43162)(46-18-26) **சிவஸ்ரீ ஸ்ரீநிவாச நாகேந்திரக் குருக்கள், தர்மகர்த்தா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலா செய்துள்ள ஆளுமை மதிப்பீடு தமிழ் உலகிற்கு மிகவும் புதியது

## 'போரும் சமாதானமும்' ஆய்வுரையில் திருமாஸ்டர்



கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய போரும் சமாதானமும் என்ற நூலைப் பற்றிப் பேசுவதென்பது தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பற்றிப் பேசுவதாகும். விடுதலைப் போராட்டத்தைப் பற்றிப் பேசுவது என்பது இலங்கை - இந்திய உறவைப் பற்றியும் அவற்றின் அடிப்படையிலான சர்வதேச உறவைப் பற்றியும் பேசுவது என்பதுதான். இவை அனைத்தையும் ஒன்றிலிருந்து ஒன்றாகப் பிரித்து நாம் ஒருபோதும் நோக்கமுடியாது.

இந்தநூல் அதிகம் இராஜதந்திர விடயத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பதனால் உங்கள் முன்பு தமிழ் மரபில் வந்த ஒரு முதலாவது இராஜதந்திரப் பாரம்பரியம் என்ற வகையில் இதனை முற்றிலும் ஓர் இராஜதந்திரக் கண்ணோட்டத்தோடு விவரிக்க விரும்புகிறேன்.

கம்பத்தில் ஏறிநின்று சாகசங்கள் புரிந்தாலும் 50 பணம் வாங்கத தரைக்குத்தான் இறங்க வேண்டும். வரலாறு என்பது மனித வரையறைகளைப் பற்றிய ஒரு விஞ்ஞானம்தான். மனிதன் எவ்வளவு தூரம் வரலாற்றில் நாயகர்களானாலும், அவன் வரலாற்றின் போக்குக்குக் கட்டுப்பட்டவன்தான். ஆயினும்கூட, கம்பத்தில் ஏறி சாகசம் புரிகின்ற சாகச வித்தைகளில் ஆளுக்காள் வேறுபடுவதுண்டு.

இந்தவகையில், கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எவ்வளவு தூரம் இராஜதந்திரப் பாரம்பரியத்தில் முதல் அடியைத் தமிழ் மக்கள் பொருட்டு எடுத்துவைத்திருக்கிறார் என்பதையும் உலக அரசியல் இராஜதந்திரப் பாரம்பரியத்தில் இதற்கு உரிய இடம் இல்லை என்பதைப் பற்றியும் கூறிவைக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

### அரசியல் பாரம்பரியம்

குறிப்பாக, தமிழ்மக்களுக்கு ஆகிவந்த பாரம்பரியம் என்பது, அரச நிறுவனத்தோடு ஐந்து நூற்றாண்டுகளுக்கு மேல் அற்றே போய்விட்டது. ஆனால், தமிழ்மக்களை விடவும் சிங்கள மக்களுக்கு 2500ஆண்டுகள் தொடர்ச்சியான ஓர் அரசியல் பாரம்பரியம் உண்டு.

ஆனால், தமிழ்மக்களின் வரலாற்றில் ஓர் அரச கட்டுமானத்தை உருவாக்கத் தொடங்கிய தமிழீழ விடுதலைப் போராட்டத்தோடு தான் இராஜதந்திரம் என்கின்ற ஐந்து நூற்றாண்டுகளுக்கு மேல் அறுந்த பகுதியின் தொடக்கம் உருவாகின்றது. அதில் முதல் நபர் அன்ரன் பாலசிங்கம்.

இவற்றை விளங்குவதற்கு இராஜதந்திரக் கற்கை பற்றிய ஒருசில விடங்களை நோக்க வேண்டும். இவை சற்றுக் கடினமானவை. எனினும், முடிந்த வரையிலான இலகுவான பகுதிகளுக்கூடாக நாம் நோக்குவோம்.

இராஜதந்திரம் என்கின்ற வடமொழிப் பதத்தைப்போல 'டிப்ளோமற்றிக்' (Diplomatic) என்கின்ற ஆங்கிலப் பதத்தின் அர்த்தம் அமைந்திருக்கவில்லை. ஆனால், இராஜதந்திரம் என்கின்ற வடமொழிப் பதமானது 2,500 ஆண்டுகளுக்கு மேற்பட்ட இலக்கிய வளத்துடனும், அறிவியல் சாணக்கியத்துடனும் கல்வித்துறை வளர்ச்சியுடனும் இந்தியாவில் வளர்ச்சி பெற்றிருந்தது.

குறிப்பாக, ஐரோப்பாவிலே இந்த இராஜதந்திரம் மிகப் பிற்காலத்தில் பல நூற்றாண்டுகளுக்குப் பின்புதான் உருவாகப்போகின்றது. அது 'டிப்ளோமா' என்கின்ற சொல்லில் இருந்து உருவாகப்போகின்றது. குறிப்பாக, 'டிப்ளோமா' என்கின்ற சொல் இலத்தீன் - கிரேக்க மூலத்தில் இருந்து ஆங்கிலத்திற்குப் பயிற்சிக்கூடாக வருகிறது.

'மடிக்கப்பட்ட பத்திரம்' என்ற அர்த்தத்திலேயே அந்தப் பதம் இலத்தீன் கிரேக்க மூலத்தில் பிரயோகிக்கப்பட்டது.

அதாவது, மன்னன் தனது நம்பிக்கைக்குரிய தனது பிரதிநிதியை இன்னோர் அரசிற்கு அனுப்பிவைக்கும்போது ஒரு மடிக்கப்பட்ட பத்திரத்தைக் கொடுத்து அந்தப்பத்திரத்தின் மூலம் இவர் தனது 'டிப்ளோமற்' என்கின்ற அறிமுகத்தைச் செய்துவைக்கிறார்.

இதிலிருந்துதான் மேற்குலகத்தின் 'டிப்ளோமற்' என்கின்ற பதம் உருவாகியது.

### தமிழரின் இராஜதந்திரி

ஆங்கில அர்த்தத்தில் அப்படியே பார்த்தால் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதலாவது 'டிப்ளோமற்' என்கின்ற தகுதியை நிச்சயம் அன்ரன் பாலசிங்கம்தான் பெறுகிறார். இவர் தொடர்ச்சியாக 27 ஆண்டுகள் விடுதலைப் புலிகள் இயக்கத்தோடு இருந்தவர்.

விடுதலைப் புலிகளோடு தலைவரின் ஆலோசகர் என்றவகையில் இருவருக்குமிடையில் நெருங்கிய நட்பும் பரஸ்பரமான உரையாடல்களும் நிகழ்ந்திருப்பதையும், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துப் பேசியிருப்பதையும் ஒருவருக்கொருவர் அனுசரித்துப் போயிருப்பதையும் இந்தநூல் எமக்குத் தெளிவாகக் காட்டுகிறது.

அப்படிப்பட்ட ஓர் அனுசரிப்பின்கீழ்தான் கால் நூற்றாண்டுகளுக்கும் மேல் ஒருவர் அந்தப் பதவியில் இருந்திருக்க முடிகின்றது.

உண்மையிலேயே மிகநீண்டகாலம் இராஜதந்திரப் பாரம்பரியத்தை அன்ரன் பாலசிங்கம் வகித்திருப்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விடயம்தான்.

நீண்டவரலாற்றையும் அதற்கு ஒவ்வொரு செயல்களிலும் நடைமுறைசார்ந்த நுணுக்கமான நடவடிக்கைகளையும் இவர் எவ்வாறு கொண்டிருந்தார் என்பதை நாம் இந்த நூலுக்கூடாகப் பார்த்துக்கொள்ளலாம். ஆனால், இவை எலலாவற்றையும் பார்ப்பதற்கு அடிப்படையாகச் சர்வதேச அரசியல் பற்றிய - இராஜதந்திர அரசியல் பற்றிய ஒரு சிறு அடிப்படை விளக்கத்திற்கு நாம் முதலில் போயேயாகவேண்டும்.

இராஜதந்திரத்தில் மூன்று காலகட்டங்களை நாம் இனங்காணமுடியும்.

ஒன்று பனிப்போர்க் காலம், இரண்டாவது பனிப்போருக்குப் பின்னான காலம், மற்றையது பில்லேடனுக்குப் பின்னான காலம். இந்த மூன்று காலமும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டுக் காணப்படுகின்றது. அளவுக்கு அதிகமாக நாம் பல்வேறுபட்டவையைக் கற்பனை செய்கின்றோம். பழக்கப்பட்டுப்போன அரசியல் சிந்தனைகளுக்குள்ளும் பனிப்போர் அரசியல் சிந்தனைக்குள்ளும் நாம் சிறைப்பட்டுள்ளோம். இவற்றை உடைத்துக்கொண்டு அடுத்த காலமும் அதனையும் உடைத்துக்கொண்டு பின்லேடனுக்குப் பின்னான காலமும் வந்துவிட்டது.

இந்த மூன்று கால கட்டத்தையும் ஊடுருவி அன்ரன் பாலசிங்கம் நிற்கின்றார். அப்படியென்றால், இந்த மூன்று காலகட்டங்களையும் பற்றிய அறிவு எமக்கு அவசியமானது.

பனிப்போர்க் காலத்தின் அரசியலில் பல முழுவீத உண்மைகள் இருப்பதாகக் கற்பனை செய்து கொண்டவர்களுக்குத்தான் இப்போதைய காலகட்ட அரசியல் பற்றிய பிரச்சினைப் பனிப்போருக்குள்ளாகப் பார்க்கவேண்டிய துரதிர்ஷ்டம் உண்டு.

நிச்சயமாக நாங்கள் ஒன்றைக் கூறலாம், அமெரிக்க - இந்திய உறவுகள் சந்திக்கும் மையத்தில்தான் இலங்கையினுடைய வடிவம் பிறக்கிறது. அங்குதான் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையே பிறக்கின்றது.

பனிப்போர்க் காலத்தில் இது வேறுவிதமாகக் காட்சியளித்தது. அந்தக் காலகட்டத்தில் இலங்கை பற்றிய - இந்தியாவின் நிலைப்பாடு பற்றிய பல எண்ணங்கள் தமிழ் மக்களின் மத்தியில் இருந்தது. ஆனால், அன்ரன் பாலசிங்கம் இந்த நூலில் கூறுகிறார்.

"திம்புப் பேச்சுக்குச் செல்ல முன்பு புலிகள் இந்தியா பற்றிய தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். இந்தியா தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்காத ஒரு நிலைப்பாட்டை எடுக்கும் என்பதை நாங்கள் விளங்கியிருந்ததன் அடிப்படையிலேயே இந்திய அரசியலை நாங்கள் கையாளத் தொடங்கினோம்" என்று அன்ரன் பாலசிங்கம் இதனைத் தெளிவாகக் கூறுகிறார்.

அந்தத் தீர்மானம் - அந்தத் தெளிவான பார்வைதான் இந்தியாவை அடுத்த கட்டத்தில் அவர்களால் கையாளமுடிந்தது. குறிப்பாக, டிக்ஸிற்றும் ஏனைய இந்திய இராஜதந்திரிகளும் "விடுதலைப் புலிகள் கலைக்கப்படமுடியாத ஒரு தேசியத் தன்மையை தங்களுக்கெனத் தனித்துவமாகக் கொண்டிருக்கிறார்கள் அதனால் அவற்றினைக் கையாள்வது கடினமானது" என்று சொன்னார்கள்.

இந்தநிலையில்தான், அன்ரன் பாலசிங்கம் ஒவ்வொரு பிரச்சினைகளையும் கையாளும் போது தமது அடிப்படையான கொள்கைகளிலிருந்து இந்திய இராஜதந்திரிகளையும் இந்திய அரசியல்வாதிகளையும் அவர் எதிர்கொண்டார்.

### ஆளுமை மதிப்பீடு

ஒவ்வோர் இராஜதந்திரிகளைப் பற்றியும் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் ஓர் ஆளுமை மதிப்பீட்டைச் செய்தார். அது தமிழுக்கு முற்றிலும் புதியது. இந்திராகாந்தியைப் பற்றியும் பார்த்தசாரதியைப் பற்றியும் ரொமெஷ் பண்டாரியைப் பற்றியும் மிகவும் தெளிவாக - கூர்மையாக - இலகுவான ஆங்கிலச் சொல்களுக்கு ஊடாகவும் அவர் ஆளுமை மதிப்பீடு செய்திருக்கின்றார். அது இந்த நூலின் மிகுநத சிறப்பம்சம் ஆகும். அந்த ஆளுமை மதிப்பீட்டுக்கு ஊடாகவே அவர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

தமிழ்மக்களின் தேசியப் பிரச்சினை பற்றியும் - சர்வதேச அரசியல் உறவு பற்றியும் காணப்படுகின்ற முக்கியமான இடைவெளி ஒன்று காலப்பிளவாய் இப்போது உள்ளது.

இதனைக் கடந்து ஒரு தமிழ்த்தேசியப் போராட்டத்தை வளர்த்தெடுக்க வேண்டிய ஓர் அடிப்படைத் தீர்மானத்தில் நின்றுகொண்டு இந்தப் பிரச்சினையை அன்ரன் பாலசிங்கம் அணுக முற்பட்டிருக்கிறார்.

அந்தவகையில் இந்த நூலானது முற்றுமுழுதாக சுமார் கால்நூற்றாண்டு காலத்தைக் கொண்ட தமிழ்மக்களின் அரசியல் ஏடாக அமைந்திருக்கிறது.

### தமிழீழத்தை நோக்கி...

அன்ரன் பாலசிங்கம் அவர்கள் முதன்முதலில் எழுதிய நூல் 'தமிழீழத்தை நோக்கி' என்பதாகும். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றி விஞ்ஞான ரீதியில் எழுதப்பட்ட முதலாவது நூல் அதுதான்.

தமிழீழம் சரியா? பிழையா? என்கின்ற வாதப் பிரதிவாதங்கள் நிகழ்ந்துகொண்டிருந்த காலத்தில் - தமிழ்மக்கள் பிரிந்துசெல்லும் சுயநிர்ணய உரிமை உடையவர்கள் என்ற கருத்தை மிகத் தெளிவாக முன்வைத்த முதலாவது நூல் இதுதான்.

அது 1979ஆம் ஆண்டு வெளிவந்திருந்தது. அந்த நூலோடுதான் அன்ரன் பாலசிங்கம் கோட்பாட்டு ரீதியாக விடுதலைப் புலிகள் அமைப்புகளும் பிரவேசிக்கின்றார்.

தனது கல்வியை ஒரு நடைமுறைப் போராட்டத்தோடு இணைக்கின்றமைக்கு அடியெடுத்து வைத்த முதலாவது நபர் என்ற வகையில் அன்ரன் பாலசிங்கம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முன்னோடியாவார். அந்த மதிப்பை அவருக்கு வரலாற்றில் என்றுமே தமிழ்மக்கள் கொடுத்தே ஆகவேண்டும்.

கேலிக்கூத்தான விதண்டாவாதக் கோட்பாடுகள் இருந்த காலகட்டத்தில் முதல் நபராக முன்வந்து அவர் தனது கருத்தை முன்வைத்தார். பாலசிங்கம் வெல்லும் பக்கம் போகவில்லை. தோல்விகளைக் கண்டு அஞ்சி ஓடவில்லை. பற்றைக்குள்ளும், கடல் நீரிலும் தரையிலும் ஈருடக ஜீவனாக வாழத் தயாராகத்தான் அவர் பேனாவை எடுத்தார்.

அவ்வாறு அறிஞர்கள் தமது அறிவைத் தமது சமூகத்துக்குப் பயன்படுத்துவது மிகவும் முக்கியமானது.

ஆய்வுகளும் ஏடுகளும் சமூகத்தின் முன்னேற்றத்துக்கு உதவத் தவறினால் அவை ஆய்வுகளாக இருக்கமுடியாது. சமூகத்தின் யதார்த்தத்தை மதிப்பீடு செய்யவும், மதிப்பீட்டின் அடிப்படையில் சமூகத்தை உந்திச் செல்வதற்குத்தான் வாழ்வை அர்ப்பணிக்கவும் அதன் பொருட்டு வெல்லும் பக்கம் போகாமல் வெற்றியோ தோல்வியோ தனது கொள்கைப் பற்றில் உந்துதல் உள்ள சமூகத்தின் முதல் பிரதிநிதியாக அவர் இருக்கவிரும்பினார்.

அவருக்கு என்றொரு கொள்கை இருக்கிறது - அறிவியல் இருக்கிறது. அதில் அவர் தன்னை அர்ப்பணித்திருக்கிறார்.

தலைவருக்கு நெருக்கடி வந்தநேரங்களிளெல்லாம் தலைவருக்கு எடுத்துரைப்பதும், இருவரும் முரண்படாமல் ஒருமுகமாகச் செயற்படுவதும் மிகவும் அழகாக இருக்கும். அவை மிகவும் சுவையான இடங்களாகும்.

அன்ரன் பாலசிங்கம் அவர்கள் ஒரே நேரத்தில் ஓர் ஆய்வாளனாகவும் இராஜதந்திரியாகவும் செயற்படவேண்டியிருந்தது.

### இந்தியாவின் தோல்வி

பல சந்தர்ப்பங்களில் இந்திய இராஜதந்திரிகம் வெற்றியடைந்திருந்தாலும் சில விடயங்களில் அது தோல்வியடைந்திருக்கிறது. குறிப்பாக, இலங்கை விவகாரத்திலும் ஆப்கானிஸ்தான் விவகாரத்திலும் இந்திய இராஜதந்திரம் படுதோல்வி அடைந்திருக்கிறது.

அவ்வாறு இலங்கை விடயத்தில் இந்திய இராஜதந்திரிகளின் தோல்வியில் பிரபாகரனுக்கும் அன்ரன் பாலசிங்கத்துக்கும் தனித்துவமான பங்குகள் இருக்கின்றன.

நாங்கள் வெளியிலிருந்து அரசியலைப் பார்க்கின்றபோது எங்களுக்குச் சில புரியாத இடங்கள் இருக்கலாம்.

இந்தியப் படையோடு சண்டை தொடங்கிவிட்டது. அப்போது பிரபாகரன் முதலாவது கடிதத்தை - சமாதானத்தைக் கோரி - ராஜீவ் காந்திக்கு அனுப்பிவைக்கிறார். ஒருசில தினங்களுக்குள் இரண்டாவது கடிதத்தை அனுப்பிவைக்கிறார். பின்னர் மூன்றாவது கடிதத்தையும் - சமாதானம் கோரி - அனுப்பிவைத்தார்.

ஆனால், இந்தியர்களிடம் தாங்கள் எஜமானர்கள் என்றும் நாங்கள் அடிமைகள் என்றும் எங்களைக் கையாள்வதற்கான மனப்பாங்கு இருந்தது. அவர்கள் ஒரு தீர்வுக்கு வர எப்போதுமே தயாராக இருக்கவில்லை.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் எழுதப்பட்டுவிட்டது. பிரபாகரனும் பாலசிங்கமும் ராஜீவோடு கதைத்துக்கொண்டிருக்கிறார்கள். ராஜீவ் வாக்குறுதிகளை வழங்குகிறார்.

"நாங்கள் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைப் போல ராஜீவ் - பிரபா ஒப்பந்தம் ஒன்றைச் செய்வோம்" என்றார் அவர்.

அப்போது பாலசிங்கம் சொன்னார் "அந்த ஒப்பந்தத்தை எழுத்தில் வைத்திருப்போம்" என்று. அதை அவர்கள் சிரித்துச் சமாளித்துவிட்டு அந்த இரகசிய ஒப்பந்தத்தை எழுதத் தவறுகிறார்கள்.

தமிழீழ மக்களை ஏமாற்ற நினைத்தார்கள் - எதையுமே விளங்கமுடியாத முண்டங்கள் என்று நினைத்தார்கள் - எங்களை அவமதித்தார்கள். இதனையெல்லாம் இந்த நூலில் அன்ரன் பாலசிங்கம் மிகவும் அழகாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

பிரபாகரனும் பாலசிங்கமும் எப்படி மிகவும் கூர்மையுடனும் விட்டுக்கொடுப்பு இன்றியும் புரிந்துணர்வுடனும் தங்களுடைய தீர்மானங்களை இந்திய அரசுடன் கையாண்டார்கள் என்பது இந்த நூலில் தெரிகிறது.

ஒருமுறை பிரபாகரன் இந்தியர்களைப் பார்த்து "நாங்கள் வித்தியாசமானவர்கள் என்பதை நீங்கள் உணர்வீர்கள்" என்று சொன்னார். உண்மையிலேயே எங்களிடம் ஒரு வித்தியாசமான சுபாவம் இருக்கிறது. அது எமது பிரதேசத்தோடு சேர்ந்த - தேசியத்தோடு சேர்ந்த விடயம்தான். அது யதார்த்தபூர்வமானது.

இத்தகைய சமூகப் போக்குகளும் எமது அரசியல் சிந்தனையையும் எதிரொலிக்கும் வகையில் இந்த நூலின் அமைப்பு உள்ளதை நீங்கள் காணலாம்.

தமிழ்மக்களை ஒடுக்குவதற்காக இலங்கை அரசு வெளிநாடுகளிடம் அடிபணிய வேண்டியிருக்கிறது. தமிழ்மக்களை ஒடுக்குவதற்காக எடுத்த ஒவ்வொரு நடவடிக்கையும் சிங்கள மக்களையும் ஒடுக்குவதில் போய் நிற்கிறது. தமிழ் மக்களின் விடுதலையில்தான் சிங்கள மக்களின் விடுதலையும் உண்டு.

இல்லையேல் இந்த நாட்டை உலக நாடுகள் அனைத்திடமும் சிங்கள அரசு அடகு வைத்துவிடும். இப்படிப்பட்ட ஒரு சிங்கள இராஜதந்திரத்துக்குச் சொந்தமாகத் தமிழ் இராஜதந்திரம் தன்னை வடிவமைக்க வேண்டியிருக்கிறது.

(த-7-86-203-204)

(வளரும்)




**தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் அறிமுகவிழா கடந்த சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.**

**அந்த நிகழ்வில் கலந்துகொண்டு அரசறிவியலாளர் மு.திருநாவுக்கரசு (திருமாஸ்டர்) ஆற்றிய ஆய்வுரையின் முதற்பகுதி இங்கு தரப்படுகின்றது. இதன் மிகுதிப் பகுதியும் ஏனையோரின் உரைகளும் தொடர்ந்து வெளிவரும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## நாய்கள் விற்பனைக்கு

எம்மிடம் ஒன்றரை வயது, நான்கு மாதங்கள் நிரம்பிய பொமேரியன் பெண் நாய்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: முகுந்தன் வைத்தீஸ்வரன், மானிப்பாய் (ஆண்கள்) இந்துக்கல்லூரிக்கு முன்பாக. (பகல் 12மணிக்குப் பின்னர் பார்வையிடலாம்). (43359)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான நம்பர் - 1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் (23-03-2005) மாலை விநியோகிக்கப்படும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. மதுரா, கால்நடைத் தீவன விற்பனை நிலையம், 221, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தாரகை முதலாம் கட்டை, பருத்தித்துறை, P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. றஞ்சித், 517, ஸ்ரான்லி றோட். T.P.: 222 - 3529. (43332)

## வாடகைக்கு

இல.11, நாவலர் வீதி (ஐந்து சந்தி), யாழ்ப்பாணத்தில் 3 பரப்புக் காணியுடன் கடை வாடகைக்குண்டு. தொடர்பு: நேரில் த.சபேசன் (நேரம் காலை 6.00 - 7.00 வரை மதியம் 1.00 - 2.00 வரை). (43321)

## தவறிவிட்டது

திரு.நாக.தமிழிந்திரன் ஆசிரியருடைய 3315 இலக்கம் Motor Cycle keyயும் வேறு மூன்று திறப்புகளும் யாழ். மத்திய கல்லூரிக்கும் உரும்பிராய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ். மத்திய கல்லூரிலே ஒப்படைத்துதவவும். (43336)

## வீடு வாடகைக்கு

கச்சேரியடியில் சகல வசதியுடன் கூடிய ஆறு அறைகளைக் கொண்ட வீடு அரச அல்லது தனியார் காரியாலயங்களுக்கு வாடகைக்குக் கொடுக்கப்படும். தொடர்பு: ஆசீர்வாதம் P.M., 61, பாரதி வீதி, சுண்டுக்குளி, யாழ்பாணம். T.P.: .077 3024470. (43370)

## மணமகள் தேவை

யாழ்இந்து கௌரவ குடும்பம், 75ஆம் ஆண்டு, அவிட்ட நட்சத்திரம், கும்பராசி, செவ்வாய்த் தோஷமற்ற லண்டனில் வசிக்கும் மணமகனுக்கு அழகிய, கல்வியறிவுள்ள, 24 வயதிற்குட்பட்ட மணமகள் தேவை. தொடர்பு: 021 222 6902 மாலை 5இற்கு பின் (0777 041313). (43352)

## திருமண சேவை

சீதனம் இல்லாமல் திருமணம் செய்யா திருப்பவர்கள், கொடுத்துச் செய்யக்கூடியவர்கள், சீதனம் கொடுக்க வசதியில்லாது திருமணஞ் செய்யாதிருக்கும் பெண்களை மனம் விரும்பி ஏற்கும் ஆண்கள் எங்களிடம் வெளிநாட்டு ஜாதகங்கள் உள்ளன. நேரிலோ, தபால் மூலமோ தொடர்புகொள்ளவும். ஸ்ரீநாக பூசணி அம்மன் திருமணமாலை. இல.289A, பட்டாணிச்சூர், மன்னார் றோட், வவுனியா. T.P.: 024 4588410, 0776 630207. (43302)

## திருமணக் கார்

குளிரூட்டப்பட்ட கார் திருமணத் தேவைகளுக்கு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:
0776904577. (43358)

## சாரதி தேவை

கொழும்பிலே தங்கியிருந்து வான் ஓட்டுவதற்குச் சாரதி ஒருவர் தேவை. ஏற்கனவே சாரதித் தொழிலில் அனுபவமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

(43360) T.P..0777 393827.

## விற்பனையாளர் தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ள விற்பனையாளர்கள் தேவை. வேலை பழக விரும்புபவர்களும் தேவை.

தொடர்பு:

**த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்**

44, 42, பெரியகடை வீதி,
(43360) யாழ்ப்பாணம். ☎ ..3879

## HOUSE FOR RENT/ LEASE

WANTED IMMEDIATELY, FOUR BED ROOMED HOUSE WITHIN MUNICIPAL LIMITS FOR AN INTERNATIONAL DEMINING OFFICE. CONTACT:

R.RAJARAM J.P.
SUTHUMALAI RD.,
THAVADY, KOKUVIL,
MOBILE BETWEEN 4p.m. - 6p.m.
(43348) 0777 238528, 077 9037404.

## செந்தமிழ் செம்மல் நா.க நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,மார்ச்22

"செந்தமிழ் செம்மல் நா.கதிரவேற்பிள்ளை" நூல் மீள்பதிப்பு வெளியீடும் 2004ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் முகமாக தர்மகுலசிங்கம் நினைவு நிதிப் பரிசளிப்பும் பருத்தித்துறை தம்பசிட்டி சதாவதானி நா.கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய மண்டபத்தில் நாளை புதன்கிழமை நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

பிற்பகல் 4 மணிக்கு ந.தங்கராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் சிறப்புரைகளை திருமதி பொ.இரத்தினசோதி, சி.கெங்காதரன் ஆகியோர் நிகழ்த்துவர். (ஒ-12)

## நாதோபாஸன ஆராதனை

வலி.தெற்கு,மார்ச்22

இணுவில் அமரர் மா.த.ந.வீரமணி ஐயரின் பௌர்ணமி தின நாதோபாஸன ஆராதனை விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு மகாவித்துவானுடைய இணுவில் இல்லத்தில் நடைபெறும்.

மூத்த பத்திரிகையாளர் லயன் செல்லப்பா நடராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த ஆராதனை நிகழ்வில் சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தானத்தைச் சேர்ந்த கலாநிதி சிவஸ்ரீ நா.சோமாஸ்கந்த சிவாச்சாரியார் ஆசியுரை வழங்குவார்.

இசை நிகழ்வாக வேல்விழி சுப்பிரமணியத்தின் பாட்டுக் கச்சேரி நடைபெறும். (3-152)

## வெளிநாடுகளுக்குப் பொருள்களை அனுப்புவதற்குத் துரித சேவை

வெளிநாடுகளில் உள்ள உங்கள் உறவினர்களுக்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும் ஆவணங்களையும் குறைந்த செலவில் விமானமூலம் அனுப்பவேண்டுமா?

**இஷா ரெக்,**
கொடிகாமம் வீதி, நெல்லியடி.
தொலைபேசி: 077 3115873. (சி-41609)

## வாழ்த்துகின்றோம்



தெய்வீகப் பேருரைகளால் மக்களை நல்லாற்றுப்படுத்தும், சைவத் தமிழ்த்தொண்டன்

சிவத்திரு வ.குமாரசாமி ஐயா

அவர்களின் அகவை அறுபதில் நாம் ஒன்றிணைந்து வாழ்த்துகிறோம். அகவை அறுபதினை நிறைவுசெய்யும் எமது பெருமதிப்புக்கும், பேரன்புக்கும் உரிய ஐயா அவர்களுக்கு எமது தேவஸ்தானத்தினரும் நல்லாசிகளைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றனர். 23.03.2005 அன்று ஐயா அவர்களின் 60 ஆவது ஜனனதினத்தில், ஐயா அவர்கள் நல்லாரோக்கியம்பெற்று, தம் தெய்வீகப் பணிகளை மேன்மேலும் தொடர்ந்து, பல்லாண்டு, பல்லாண்டு, நீடூழி வாழ வேண்டுமென வாழ்த்துகிறோம்.

"இயற்கையிலே இறைஞானம் பெற்றவனே
"ஆன்மீகத்தில் மூழ்கித் திளைப்பவனே!
"அருள்ஞானத்தை உணர்ந்து அனுபவிக்கிற பெருமகனே! "அருளாளர்களையும், ஞானிகளையும், ஞானத்தால் உணர்ந்தவனே"
"போற்றுவார் போற்றட்டும், தூற்றுவார் தூற்றட்டும் என் கடன் பணி செய்து கிடப்பது என்று நினைப்பவனே"
"நீ பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு ஏழேழு பிறவிக்கும் நன்றியுடைவனாய் இருப்பவனே"
"அஞ்சாத நெஞ்சுடையோய்!
"அன்னையின் அருளையும், அன்பையும் பெற்ற அன்பனே"

பல்லாயிரமாண்டு நீ இப்புவியில் வாழ்ந்து எம் மக்களை சீர்திருத்துகின்ற, எழுச்சி கொள்ளச் செய்கின்ற, விழிப்படையச் செய்கின்ற பல்லாயிரம் சொற்பொழிவுகளை நிகழ்த்தவேண்டும்.

(43289)(50-11-34-26)

அம்மன் அவர்கள்,
ஸ்ரீ வசந்தநாக பூஷணி அம்பாள் தேவஸ்தானம், ஏழாலை,

## நெஞ்சகலா நினைவலைகள்



**திருமதி பரிமளகாந்தி நாகரட்ணம்**

திதி: ஏகாதசி 21-03-2005

அன்பும் பாசமும் பரிவும் காட்டி
தன்னைக் கரைத்து எம்மை வழிநடத்தி
மண்ணில் நிலைநிறுத்தி மகிழ்ச்சியுற்ற தெய்வமே!
இன்றுடன் நான்கு ஆண்டுகள் மறைந்திடினும்
உம் நன்றி ஏழு பிறவியிலும் மறவோம்!

அற்கின்சன் வீதி,
வட்டுக்கோட்டை. (சி-41630)(26-11-18) - மகள்.

## துன்பத்தில் துணையாவோம்

### தவக்காலச் சிந்தனை

### நாற்பத்தோராம் நாள்

தவக்காலத்தில் நாம் உடலை வருத்தி ஒறுத்தல்கள் மற்றும் பாவசங்கீர்த்தனம் செய்து, தானங்கள் புரிந்து எம் பாவங்களுக்குப் பரிகாரம் பண்ணுகின்றோம். ஆனால், கிறிஸ்தவ வாழ்வு தனிமனித மீட்பு மட்டுமல்ல, மாறாக ஒன்றுபட்ட சகோதரத்துவ மீட்பு.

இன்றைய சூழலில் ஆயிரக்கணக்கான மக்கள் உறவுகளை, உடைமைகளை இழந்து மனமுடைந்து பரிதாப நிலையில் வாழ்கிறார்கள். உறவுகளை இழந்த அனைவருமே உள்ளம் குமுறுகிறார்கள். ஈடுசெய்யமுடியாத இழப்புகளால் அனைவருமே அதிர்ந்து போயுள்ளார்கள்.

இவர்கள் மட்டில் எம் கவனத்தைத் திருப்பவும் துன்பத்தில் துணையாய் இருக்கவும் அழைக்கிறது இத்தவக்காலம். உடல் ரீதியாக முடியாவிட்டாலும், துன்புறும் இயேசுவிடம் அவர்களின் மீட்பிற்காய் விரைவான விடிவிற்காய் ஜெபிப்போம். துன்பகரமான கல்வாரிப் பயணத்தில் இயேசுவிற்குப் பலர் துணையானவர்கள்.

இறைமகனுக்கு இத்தனை துணையாயின், எம் மனித உறவுகளுக்கு எத்துணை உதவி தேவை? சிந்திப்போம், செயற்படுவோம் - அவர்களும் புதுத்தெம்புடன் சிறப்பாய் வாழ வழிசெய்வோம்.

சகோ. ச.யேசுதாசன் OMI

# மாவைக்கந்தன் ஆலயத்தில் பிள்ளையார், லஷ்மி கும்பாபிஷேகம் வெள்ளிக்கிழமையன்று நடக்கும்

யாழ்ப்பாணம்,மார்ச்22

பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் உள்பிரகாரத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள விக்னேஸ்வரன், மஹாலக்ஷ்மி திருக்கோயில்களின் கும்பாபிஷேகம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கும் 11.14 மணிக்கும் இடையேயுள்ள சுபவேளையில் இடம்பெறவுள்ளது.

அன்று முற்பகல் 10.30 மணிக்கு கும்பாபிஷேகம், மகாபிஷேகம், விசேஷ பூசைகள் ஆகியன இடம்பெறவிருக்கின்றன.

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளால் சேதமடைந்த இவ்விரு திருக்கோயில்களும் மீளப்புனரமைக்கப்பட்டுள்ளன.

கும்பாபிஷேக நிகழ்வுகளில் பங்கு கொள்ளுமாறு ஆலய ஆதீனகர்த்தா மஹாராஜஸ்ரீ சு.து. ஷண்முகநாதக் குருக்கள் கேட்டுள்ளார்.

## புதிய பணத்தாள்கள்

இலங்கை மத்திய வங்கி புதிய பணத்தாள்களை வெளியிடவுள்ளது. 10 ரூபா, 20 ரூபா, 50 ரூபா, 100 ரூபா, 500 ரூபா, 1000 ரூபா மதிப்புக் கொண்டவையாக இந்தப் பணத்தாளகள் வெளியிடப்படவுள்ளன என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இலங்கையின் பாரம்பரியங்களுடன் தொடர்புபட்ட காட்சிகள் இந்த நாணயத் தாள்களில் அச்சிடப்பட்டுள்ளன என்று - நிதியமைச்சர் சரத் அமுனுகம, மத்திய வங்கி ஆளுநர் சுனில் மென்டிஸ் ஆகியோரின் கையெழுத்துகள் இவற்றில் பொறிக்கப்பட்டுள்ளன என்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-12)

## ஆளணி விவரம் சேகரிப்பு

சாவகச்சேரி,மார்ச்22

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளில் தற்பொழுது பணிபுரியும் ஆளணி தொடர்பான விவரங்களை அனுப்பிவைக்குமாறு உள்ளூராட்சி ஆணையாளர் சம்பந்தப்பட்ட சபைகளின் செயலாளர்களைக் கேட்டுள்ளார். (ஒ-31)

## துயர் பகிர்வு

எமது பாடசாலை ஆசிரியை
**செல்வி குமாரவேலு திலகவதி**
அவர்களின் அன்புச் சகோதரர்

**குமாரவேலு வைகுந்தவாசன்**

அவர்களின் மறைவிற்கு வருந்துகின்றோம். பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
(43378) (26-11-18) யா/யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி சீவரத்தினம்

No. 4, யலான்டற்ரோ கிளான, மலேசியா சிரம்பான்னில் வசித்த Dr.சின்னத்தம்பி சீவரத்தினம் அவர்கள் நேற்று (21-03-2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் மகனும் (ஓய்வுபெற்ற வெளிவிவகார அமைச்சர்) இராசரத்தினத்தின் சகோதரரும் விஜயலட்சுமியின் அன்புக் கணவரும் Dr.விஜயரத்தினம், யோதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-03-2005) செவ்வாய்க் கிழமை சிரம்பான்னில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சின்னையா சிவப்பிரகாசபிள்ளை
(குண்டுமணி மாஸ்டர்)

K.K.S.வீதி,
றொட்டியாலடி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.
(43366) (26-11-18)

## திருமதி அன்னம்மா இராசையா

(நல்லமுத்து)



தாழையடியைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா இராசையா 19-03-2005 சனிக்கிழமை ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப்பு - மேரிப்பிள்ளையின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஸ்ரனிஸ்லஸ் இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அருட்சகோதரி மேர்சி அஞ்சலா (A.C.) மற்றும் றோசலீன் (செம்பியன்பற்று), அமிர்தநாயகம் (ஜேர்மனி), காலஞ்சென்ற ஜீவரட்ணம் (டென்மார்க்) மற்றும் ஜெறோம் (ஆஸ்திரேலியா), மரியதாஸ் (ஆஸ்திரேலியா),அசந்தா (பிரான்ஸ்), பேர்ப்பெத்துவா (டென்மார்க்), தவசீலி (ஆஸ்திரேலியா), கிறேசியன் (பிரான்ஸ்) ஆகியோரின் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஸ்ரீபன் வெண்டகோண் (மருமகன் - ஓய்வுபெற்ற கிராம அலுவலர், செம்பியன்பற்று).

செம்பியன்பற்று.
(43364) (26-11-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யங்கென்றீஸ், காளியம்பாள் அணிகள் இலகுவான வெற்றியைப் பெற்றன

வலி.வடக்கு,மார்ச்22

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ்.மாவட்டப் பிரிவின் ஆதரவுடன் உதயன் ஊடக அனுசரணையுடன் வலிகாமம் லீக்கால் நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் நடந்த இரு ஆட்டங்களிலும் இளவாலை யங்கென்றீசியன்ஸ் வி.கவும் காளியம்பாள் வி.கவும் இலகுவாக வெற்றிபெற்றன.


சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானததில் இடம்பெற்ற இந்த ஆட்டங்களில் முதலாவது ஆட்டத்தில் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த இளவாலை யங்கென்றீசியன்ஸ் வி.கவும் பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த கலைமதி வி.கவும் மோதின.

இளவாலை அணி 5:0 என்ற கோல் கணக்கில் இலகுவான வெற்றியைப் பெற்றது.

இரண்டாவது ஆட்டத்தில் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த காளியம்மன் வி.கவும் யாழ்.லீக்கைச் சேர்ந்த எவரெஸ்ற் வி.கவும் மோதின. இந்த ஆட்டத்தில் காளியம்மன் வி.க. 5.0 கோல் கணக்கில் இலகுவான வெற்றியைப் பெற்றது.

(3-86)

# முரளி – மதிமலர் திருமணம்



சென்னை,மார்ச்22

இலங்கை கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன் சென்னை மலர் மருத்துவமனை நிர்வாக இயக்குநர் மதிமலா திருமணம், எழும்பூர் ராணி மெய்யம்மை திருமண மண்டபத்தில் நேற்றுக்காலை 9 மணிக்குச் சிறப்புற நடைபெற்றது.

இத்திருமண நிகழ்வில் இலங்கை அணியின் முன்னாள் கப்டன் அர்ஜுன ரணதுங்கா மற்றும் தற்போதைய கிரிக்கெட் வீரர்கள் சனத் ஜயசூரியா மற்றும் சமிந்தா வாஸ், முன்னாள் இந்திய வீரர்கள் ராபின்சிங், டி.ஏ. சேகர், ஆஷிஷ் கபூர் உள்ளிட்டோர் கலந்துகொண்டு வாழ்த்துத் தெரிவித்தனர்.

ஒரு மாதத்திற்கு முன்பு முரளிதரன் - மதிமலர் திருமணம் நிச்சயிக்கப்பட்டது.

முரளிதரன் தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். திருச்சியைப் பூர்வீகமாகக் கொண்ட அவரது குடும்பத்தினர் இலங்கையில் குடியேறி அங்கேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டனர்.

மணப்பெண் மதிமலர் மறைந்த டாக்டர் எஸ். ராமமூர்த்தியின் 2ஆவது மகள். மலேசியத் தமிழக் குடும்பத்தைச் சேர்ந்த இவர்களது குடும்பம் சென்னையில் நிரந்தரமாகக் குடியேறிவிட்டது. (3)

# யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவர் அணி வெற்றி

யாழ்ப்பாணம்,மார்ச்22

வடக்கின் பெரும் போர் துடுப்பாட்டத்தைத் தொடர்ந்து யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் அணிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் அணிக்கும் இடையே இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியில் யாழ.மத்திய கல்லூரி பழைய மாணவர் அணியினர் வெற்றி பெற்றனர்.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் அணியினர் 25.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 120 ஓட்டங்களை மட்டும் பெற்றனர்.

இதில் சிறீதரன் 24 ஓட்டங்களையும் அகிலன் 23 ஓட்டங்களையும் சஞ்சீவ் 20 ஓட்டங்களையும் ஆககக்கூடிய ஓட்டங்களாகப் பெற்றுக்கொண்டனர்.

பந்து வீச்சில் யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் அணியைச் சேர்ந்த பிரசாத் 4 ஓவர்கள் பந்துவீசி 13ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் பிரகாஸ் 7ஓவர்கள் பந்து வீசி 27 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கமல்ராஜ் 4.4 ஓவர்கள் பந்து வீசி 13 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

121 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் அணியினர் 24.2 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 122 ஓட்டங்களைப்பெற்று வெற்றியை அடைந்தனர்.

இதில் தனுஷ்காந் 18 ஓட்டங்களையும் கார்த்தீபன் 19 ஓட்டங்களையும் பிரகாஷ் 22 ஓட்டங்களையும் ஆகக் கூடிய ஓட்டங்களாகப் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் லலேந்திரா 9.2 ஓவர்களில் 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 20 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் கௌரிபாகன் 3 ஓவர்கள் பந்துவீசி 7 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (3-86-190)

# மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,மார்ச்22

மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆரம்பப் பிரிவின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி சு.ஜெயவீரசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைச் செயலாளர் த.பஞ்சலிங்கம், ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மாதவகுமார் ஆகியோரும் -

கௌரவ விருந்தினர்களாக ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் வ.குகவேள், கல்லூரியின் முன்னாள ஆங்கில ஆசிரியை திருமதி ப.திருச்செல்வம் ஆகியோரும் கலந்துகொள்வர்.

(3-202)

☆☆☆

கோப்பாய்,மார்ச்22

கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் இ.அருணாசலம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் செல்வி சறோஜினி வேதநாயகம் கலந்துகொள்வார்.

(3-72)

☆☆☆

கோண்டாவில்,மார்ச்22

கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி த.கமலராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய முன்னாள ஆரம்பக் கல்வி உதவிப் பணிப்பாளர் திருமதி கமலா சுப்பிரமணியமும் சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளர் வ.கேதீஸ்வர சர்மாவும் கலந்துகொள்வர். (3-49)

*உதயன் ஊடக அனுசரணையுடன் நடைபெறும்*

# எல்லைப்படை மாவீரர் கிண்ண உதைபந்தாட்டம்; திருமகள் – பொமேர்ஸ் அணிகள் இன்று மோதல்

எல்லைப்படை மாவீரர் நினைவுக் கிண்ணத்துக்காக தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ்.மாவட்டப் பிரிவின் ஆதரவில் வலிகாமம் லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த திருமகள் வி.கவும் பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த பொமேர்ஸ் வி.க.வும் இன்று மோதுகின்றன.

'உதயன்' ஊடக அனுசரணையுடன் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடக்கும் ஆட்டத்திலேயே இந்த அணிகள் மோதுகின்றன.

பிற்பகல் 4.30 மணிக்கு நடக்கும் மற்றோர் ஆட்டத்தில் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த விக்னேஸ்வரா வி.கவும் யாழ்ப்பாணம் லீக்கைச் சேர்ந்த யூனியன் வி.கவும் மோதுகின்றன.

(3-86-190-203)

# ‘சம்பியன்ஸ்’ கிண்ணப் போட்டியில் எட்டு நாடுகளே பங்கேற்கும்

*சர்வதேச கிரிக்கெட் சபைத் தலைவர் தகவல்*

கொல்கத்தா,மார்ச்22

இந்தியாவில் அடுத்த வருடம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் சம்பியன்ஸ் கோப்பைப் போட்டியில் எட்டு நாடுகளே விளையாடும என சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் தலைவர் ஈசான் மணி தெரிவித்துள்ளார்.

இந்தியா, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே கொல்கத்தாவில் நடைபெற்றுவரும் 2ஆவது கிரிக்கெட் டெஸ்டின் 5ஆம் நாள் ஆட்டத்தைப் பார்க்க வந்த ஈசான்மணி செய்தியாளரிடம் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

சம்பியன்ஸ் கோப்பை என்ற பெயரைக் கருத்தில் கொண்டு முன்னிலையில் உள்ள 8 நாடுகள் மட்டுமே பங்கேற்கும் விதமாக இப்போட்டி மாற்றியமைக்கப்படுகிறது.

போட்டியை நடத்தும் நாட்டுடன் முன்னிலையில் உள்ள 4 நாடுகள் நேரடியாக சம்பியன்ஸ் கோப்பை போட்டியில் விளையாடும். தகுதிப் போட்டியின் அடிப்படையில் மற்ற 3 நாடுகள் தேர்வு செய்யப்படும்.

அதாவது மற்ற நாடுகள் அனைத்தும் பங்கேற்கும் விதமாக ஒரு போட்டி நடத்தப்பட்டு, முதல் 3 இடங்களைப் பெறும் நாடுகள் சம்பியன்ஸ் கோப்பைப் போட்டிக்கு முன்னேறும்.

அரசு வரிவிலக்கு அளிக்க வேண்டும் என்ற அடிப்படையில் 2006 சம்பியன்ஸ் கோப்பை போட்டி இந்தியாவில் நடத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. வரிவிலக்கு முடிவு குறித்து இந்திய அரசின் முடிவை அறியக் காத்திருக்கின்றோம்.

ஒரு வேளை இந்திய கிரிக்கெட் வாரியம் அந்த வரி விலக்கை பெறத் தவறும் பட்சத்தில் சம்பியன்ஸ் கோப்பை போட்டி பாகிஸ்தானில் செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களில் நடததப்படும்.




வரிவிலக்கு அளிப்பது குறித்து மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரத்துடன் கடநத மாதம் ஆலோசனை நடத்தினேன். அவரும் அரசு இணக்கமாகவே உள்ளதாகத் தெரிவித்தார் என்றார் ஈசான் மணி. (3)

*யாழ். கோட்டக் கரபந்தாட்டம்*

# சென்.ஜோன்ஸ் கல்லூரி மூன்று பிரிவுகளிலும் முதலிடம்

யாழ்.கோட்ட மட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளின் 15,17,19 வயது அணிகளுக்கு இடையில் நடத்தபபட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி மூன்று பிரிவுகளிலும் முதலிடம் பெற்றது.

இசுற்றுப் போட்டியின் முடிவுகள் வருமாறு:-

**15 வயதுப் பிரிவு**

சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, புனித ஜோசப் வித்தியாலயம்.

**17 வயதுப்பிரிவு**

சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, சென்.சாள்ஸ் மகாவித்தியாலயம்.

**19 வயதுப் பிரிவு**

சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, சென்.சாள்ஸ் மகாவித்தியாலயம்.

(3-190)




கொல்கத்தாவில் நடைபெற்ற பாகிஸ்தான் இந்தியா அணிகளுக்கிடையிலான ரெஸ்ட் போட்டியில் வெற்றிவாகை சூடிய இந்திய அணிவீரர்கள் 'கேக்' வெட்டி கொண்[illegible] லாம். இந்த ஆட்டத்தில் இந்தியா 195 ஓட்டங்களால் வெற்றிபெற்[illegible] 7 விக்கெட்டுகளைக் கைப்பற்றி புரிந்த சாதனையே இந்தியாவின் வெற்றிக்குக் காரணமாகும்.

# தலைமைப் பதவியிலிருந்து லாரா ‘அவுட்’; புதிய தலைவராக சந்தர்போல் நியமனம்

தென்னாபிரிக்க தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணியிலிருந்து லாரா, சர்வான் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் நீக்கப்பட்டனர். அணியின் புதிய தலைவராக சந்தர்போல் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்கிந்தியக் கிரிக்கெட்டில் விளம்பரதாரர் ஒப்பந்தம் தொடர்பாகப் பிரச்சினை வெடித்தது. இதனால் சில வீரர்களின் தனிப்பட்ட விளம்பர ஒப்பந்தத்தை ரத்துச் செய்யும்படி மேற்கிந்தியக் கிரிக்கெட் சபை உத்தரவிட்டது. இதை ஏற்க மறுத்த லாரா, சர்வான், கெய்ல, எட்வட்ஸ், [illegible], ஸ்மித், ரவிராம் போல் [illegible] வீரர்கள் அணியிலிருந்து நீக்கப்பட்டனர்.

இதையடுத்து தென்னாபிரிக்கத் தொடருக்கு சந்தர்போல் தலைமையிலான இளம் வீரர்களைக் கொண்ட மேற்கிந்திய அணி அறிவிக்கப்பட்டது. இவ்விரு அணிகள் மோதும் முதல் டெஸ்ட் எதிர்வரும் 31ஆம் திகதி கயானாவில் தொடங்குகின்றது.

முதல் போட்டிக்கான 14 பேர் கொண்ட மேற்கிந்திய அணி வீரர்களின் விவரம் வருமாறு:

சந்தர்போல் (அணித்தலைவர்), கோர்ட்னி பிரவுன் (உபதலைவர்), ஹின்ட்ஸ், டெவோன் ஸ்மித, டொணவன் பேகன், நர்சிங், டியோ நரைன, டேரன் கங்கா, ரியான் ஹின்ட்ஸ், கொலிமோர், பெடரோ கொலின்ஸ், வாஷிங்டன் டேரன் பவல், ஜெரோம் டெய்லர், ரியான்கிங். (க-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்ஸ் தனியார் நிறுவனத்தால்

# நிவாரணமாக வழங்கப்பட்ட மீன்பிடிக் கப்பலை ஆழ்கடல் ரோந்துக் கப்பலாக மாற்றுகிறது கடற்படை

கொழும்பு,மார்ச்22

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணமாக பிரான்ஸ் தனியார் நிறுவனம் ஒன்று வழங்கிய ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடக்கூடிய சிறிய ரகக கப்பலை இலங்கைக் கடற்படை ஆழ்கடல் ரோந்துக் கப்பலாக மாற்றி வருகிறது என்று தகவல்கள் தெரிவித்தன.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உதவும் நோக்குடன் 54 மீற்றர் நீளமுடைய இந்த மீன்பிடிக் கப்பலை பிரான்ஸ் தனியார் நிறுவனம் ஒன்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் அன்பளிப்பாகக் கையளித்திருந்தது.

இலங்கை மீனவர்கள் தொழிலில் ஈடுபடுத்தும் படகுகளை விட அது பாரிய கப்பலாக இருந்ததால் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அதனைத் கடற்படையினிடம் கையளித்தார். அவர்கள் அதனை இப்போது ஆழ்கடல் ரோந்துக் கப்பலாக மாற்றி வருகின்றனர்.

54 மீற்றர் நீளமுடைய இந்தக் கப்பலில் ஒரே நேரத்தில் 45 பேர் வரை பயணிக்கக் முடியும் கடந்த 18ஆம் திகதி காலித்துறை முகத்தை வந்தடைந்த இந்தக் கப்பல் கடற்படையினிடம் ஒப்படைக்கப்பட்டது. அதனை மீளமைத்து சுடுகலன்களைப் பொருத்தும் பணிகளைக் கடற்படையினர் இந்த வாரம் ஆரம்பிக்கவுள்ளனர்.

இதேவேளை, அமெரிக்காவினால் இலங்கைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட கரேஜஸ் கப்பலும் அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளது. இந்தக்கப்பல் தற்போது எகிப்து கடற்பரப்பில் நங்கூரமிட்டுள்ளது. 65 மீற்றர் நீளமுடைய கரேஜஸ் கப்பலில் 60 பேர் வரை செல்ல முடியும். 'கரேஜஸ்' கப்பலில் ஹெலி கொப்டர்களை இறக்கக்கூடிய வசதிகளும் உண்டு.

இந்த இரு கப்பல்களையும் கொண்டு ஆழகடல் ரோந்துப் பணியைத் தீவிரமாக்கக் கடற்படை திட்டமிட்டுள்ளது. புலிகள் நாட்டுக்குள் ஆயுதங்களைக் கடத்தி வருவதைத் தடுக்கவும் கடலில் அவர்களின் நடமாட்டங்களைக் கண்காணிக்கவும் இந்தப் புதிய கப்பல்கள் பணியில் ஈடுபடுத்தப்படும் என்று கடற்படைத் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியாவில் இருந்து கிடைக்கப்பெற்ற சயூரா கப்பல் ஏற்கனவே, ஆழ்கடல் ரோந்துச் சேவையில் ஈடுபட்டுவருகிறது. முன்னர் ஆழ்கடல் ரோந்துச் சேவையில் பங்களிப்புச் செய்த பராக்கிரமபாகு கப்பல் காலித்துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்தபோது ஆழிப்பேரலையின் தாக்குதலில் சிக்கி முற்றாகச் சேதமடைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## மீளாய்வுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்22

மலரவன் நம்பிக்கை நிதி பெற்றுவரும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கான மீளாய்வுக் கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்.மாவட்ட மாணவர் அமைப்பு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் மேற்படி மாணவர்களைப் பங்குபற்றி மீளவும் இந்நிதியைப் பெறுவதை உறுதிப்படுத்திக் பெறுவதை உறுதிப் படுத்திக் கொள்ளுமாறு மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

(8-202)

# ஜனாதிபதி வேட்பாளராவதற்கு கதிர்காமருக்கு அமோக ஆதரவு

### பி.பி.ஸி. சந்தேசிய கருத்துக்கணிப்பில் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்22

இலங்கையின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராகயாரை நியமிக்கலாம் என்பது பற்றி பி.பி.ஸியின் சிங்களச் சேவையான சந்தேசிய இணையத்தளமூடாக நடத்திவரும் கருத்துக் கணிப்பில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூடுதலான வாக்கு களைப் பெற்று முன்னணியில் இருக்கிறார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களான லக்ஷ்மன் கதிர்காமர், அநுரா பண்டார நாயக்க, நாடாளு மன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ ஆகியோரில் யாரை ஜனாதிபதி வேட்பளராக நியமிக்கலாம் என்பதே மேற்படி இணையத்தளத்தின் கேள்வியாகும்.

இந்த இணையத்தள வாக்கெடுப்பில் இதுவரை 18ஆயிரத்து 256 வாக்குகளைப் பெற்று - 37.2 சதவீதம் - அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் முன்னணியிலுள்ளார். 15 ஆயிரத்து 237 வாக்குகளைப் பெற்று -31 சதவீதம் - வீமல் வீரவன்ஸ இரண்டாமிடத்திலுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ 14 ஆயிரத்து 530 வாக்குகளைப் பெற்று - 29.6 சதவீதம் - மூன்றாவது இடத்திலும் ஆயிரத்து 114 வாக்கு களைப் பெற்று - 2.3 சதவீதம் - அநுரா பண்டார நாயக்க நான்காவது இடத்திலும் உள்ளனர்.

இந்தக் கருத்துக் கணிப்பு இறுதியானதும் உறுதியானதும் விஞ்ஞானபூர்வமானதும் அல்ல ஏன்பது குறிப்பிடத்தக்கது. (க)


## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன பயிற்சி இணைப்பாளராகிய

**சதாசிவம் சதானந்தன்**

அவர்கள் 20.03.2005 ஞாயிற்றுக்கிழமை காலமாகிய செய்தியறிந்து நாம் மிகவும் கவலையடைகிறோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் இவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பித்து, ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

பணிப்பாளர், பணியாளர்கள்

தேசியபயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை (N.A.I.T.A)

07, கோவில் வீதி,

யாழ்ப்பாணம

(43385) (35-18-16)


## மலசலகூடம் அமைக்க உதவி

மாதவருமானமாக இரண்டாயிரத்து 500 ரூபாவிற்கு உட்பட்ட தொகையைப்பெறும் குடும்பங்களுக்கு மலசலகூடம் அமைப்பதற்கு மானியமாக உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இந்த உதவிகளைப்பெற விரும்புவோர் தத்தமது பிரதேச சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளூடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-30)

## கடற்றொழிலாளருக்கு உதவி

வட்டுக்கோட்டை,மார்ச்22

கடற்கோள் அனர்த்தத்தினால் பாதிப்படைந்த சுழிபுரம் மேற்கு கடற்றொழிலாளர்களுக்கு சர்வோதயத்தின் அனுசரணையுடன் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் வீட்டுப் பாவனைப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட பகுதிக்கு நேரடியாகச் சென்று பாதிப்புக்குள்ளான குடும்பங்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் இப் பொருள்கள் கையளிக்கப்பட்டன. (ஒ-161)


## கண்ணீர் அஞ்சலி

அமரர் நாகலிங்கம் சிவசிதம்பரம்

எமது பாடசாலை விஞ்ஞான ஆசிரியை

**செல்வி ராமேஸ்வரி சிவசிதம்பரம்** அவர்களின் தந்தை **நாகலிங்கம் சிவசிதம்பரம்** அவர்களின் மறைவுச் செய்தியறிந்து எமது பாடசாலைச் சமூகம் மிகுந்த கவலையடைந்துள்ளது. இவரது பிரிவினால் துயறுற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து அமரருக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம்.

யா/திருக்குடும்ப கன்னியர் மடம். யாழ்ப்பாணம். (43388) (24-16-18-35)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.

## வலி.கிழக்குத் தென்பகுதி ப.நோ.கூ. சங்கம். நீர்வேலி

## பதவி வெற்றிடம்

கீழ்க்காணும் பதவிக்கு விண்ணப்பங்கள் இலங்கை பிரசைகளிடமிருந்து உள்வாரியாகவும் வெளிவாரியாகவும் கோரப்படுகின்றன. விண்ணப்ப முடிவுதிகதி 22.04.2005 ஆகும். விண்ணப்பப்படிவங்களை ரூபா 10/- செலுத்தித் தலைமைக் கந்தோரில் காலை 9 மணி தொடக்கம் பி.ப. 5 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் யாவும் "பொதுமுகாமையாளர், வலி. கிழக்குத் தென்பகுதி ப.நோ.கூ. சங்கம், நீர்வேலி" என்ற முகவரிக்கு நேரடியாகவோ அன்றேல் பதிவுத் தபால் மூலமோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடல் வேண்டும். பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும், விண்ணப்பப்படிவத்துடன் சான்றிதழ்களின் நிழற்பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். கூட்டுறவுச் சங்கங்களில் கடமையாற்றிய பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பதவியின் பெயர்: *கூலியாள் சம்பள அலகு 318.17 (165/88)*

சம்பளத் திட்டம்: *3000 – 4150 (31/97)*

*55x10 – 60x10*

வயதெல்லை: **18 - 45**

*(சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது)*

தகைமை: *நல்ல தேக ஆரோக்கியமும் 5 ஆம் வகுப்பு சித்தியும்.*

நீர்வேலி. 2005-03-21 (சி-41638) (24-16-18-35) **பொதுமுகாமையாளர்.**

## Wanted A Medical Officer (Para Medic)

An International Non Government Organization invites applications for the above mentioned post The Applicant should have the following qualifications:

- Knowledge in Training workers in First Aid Training & casualty handling
- Experience in Accident Emergency & Dealing with Trauma Injuries
- Fully Trained Para Medic Nurse or Doctor
- Physically fit
- Excellent Command in Tamil & English
- Work outside Jaffna District when required
- Should posses a valid driving licence
- Knowledge in MS Office

Starting salary Rs.25,000.00 more for the Exceptional Candidate

Please send your CVs with in seven Days to :

**Advt. No.: 2538** (43383) (24-16-18-35)

**C/o Uthayan, Jaffna.**

உ

## சிதம்பரேஸ்வரம்

மாவை கோல்லங்கலட்டி திருவருள் மிகு ஸ்ரீ சிவகாம சுந்தரவல்லி சமேத ஸ்ரீமத் சிதம்பரேஸ்வரசுவாமி திருக்கோவில்

**மணவாளக் கோல விழா விஞ்ஞாபனம்**

அடியார்களே!

நிகழும் தாரண வருஷம் பங்குனி 13ஆம் நாள் (26.03.2005) சனிக்கிழமை காலை 9 மணிக்கு அபிஷேக ஆராதனைகளுடன் மணவாளக் கோல விழா ஆரம்பமாகும்.

அடியார்கள் காலை 9 மணிக்கு தெல்லிப்பழை தடைமுகாமுக்கு வரவும் அங்கிருந்து ஆலயத்துக்கு அழைத்துச் செல்லப்படுவர்.

(43391) (35-16-18) - அறங்காவலர்.

## பெண் விற்பனையாளர் தேவை

ஸ்கை எலக்ரோனிக் சிஸ்ரம் நிறுவனத்துக்கு பெண் விற்பனையாளர்கள் தேவைப்படுகின்றனர் உடனே நேரில் வரவும்.

NO :1 C, ஸ்ரான்லி றோட்,

யாழ்ப்பாணம். (C/41641) (35-16-18)


## மரண அறிவித்தல்

### திருமதி தர்மலிங்கம் மாரிமுத்து



புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், தற்காலிக முகவரி இல.152, கே.கே.எஸ் றோட், அரசடிச் சந்தியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தர்மலிங்கம் மாரிமுத்து அவர்கள் நேற்று (21.03.2005) திங்கட்கிழமை கால மாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும், தையலம்மை, இலட்சுமணன் ஆகியோரின் சகோதரியும் தேவி, ஈஸ்வரி, தனம், வேந்தன், மாவீரன் தர்மகுலவேந்தன் (மருதம்), நேமிநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சின்னராசா, குமார், சிவலிங்கம், சுகி ஆகியோரின் மாமியாரும் திபா, சுபா, நதிஸ், கிரிஸ், சாரங்கன், அனுசன், டினோத், ஜனாத், காந்த், பிரபு, கிசா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.3.2005) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*இல.152, கே.கே.எஸ். வீதி, அரசடிச்சந்தி, யாழ்ப்பாணம்.* (43384)(32-16-18-35)

தகவல்: குடும்பத்தினர்.


## அபாக்கஸ் வகுப்புக்கள்

நிலவு.com

அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க உடனடி **ஆரம்பம்**



ஏற்கனவே பதிவுசெய்தவர்களுக்கு எதிர்வரும் 27 ஆம் திகதி

புதியவர்களுக்கு பிரிவு 2 → 27-03-2005

பிரிவு 3 → 02-04-2005

பிரிவு 4 → 03-04-2005

மானிப்பாய்: நிலவு.COM 275,யாழ் வீதி, மானிப்பாய்

யாழ்ப்பாணம்: FOCUS 120அரசடி வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி: 0777 740413 0714 801391

இலவசம் அபாக்கஸ், புத்தகப் பை, பாடப்புத்தகம், பயிற்சிப்புத்தகம், சீருடை இன்னும் பல

HI KIDS! R U READY?

**GAMA** அபாக்கஸ் பயிற்சிகள்

- மனக்கணக்கில் திறமை
- ஞாபக சக்தி
- கூர்ந்து கவனிக்கும் வல்லமை
- நுண்ணியமான கேள்வி சக்தி
- அபாரமான கிரகிக்கும் தன்மை
- துல்லியமும் வேகமும்
- அனைத்துக் கல்வியிலும் திறன்
- தன்னாற்றல்
- தன்னிறைவு

**GAMA ABACUS** வகுப்புக்கள் நடாத்துவதற்கு பின்வரும் இடங்களில் ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்

❖பருத்தித்துறை ❖நெல்லியடி ❖கோப்பாய் ❖சங்கானை ❖அரியாலை ❖சுளிபுரம் ❖காரைநகர் ❖சுன்னாகம் ❖அராலி

GAMA ABACUS

Regional Office: Nilavu.com 275, Jaffna Road, Manipay. T.P: 0777 769751


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடத்தனை பொற்பகுதி பகுதியில் அமைந்துள்ள இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள மக்களிற்கு யாழ். சுகவாழ்வு நிறுவனத்தினரினால் சேகரிக்கப்பட்ட பொருள்களை இணைப்பாளர் காந்தரூபி, முகாம் பொறுப்பாளரிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (190)

# சாவகச்சேரியில் காலாவதியான மென்பானம்: அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்து

தென்மராட்சி, மார்ச்22

திகதி காலாவதியான மென்பானம் சாவகச்சேரி வர்த்தக நிலையங்களில் விற்பனைக்கு உள்ளதால் பொதுமக்களை அவதானமாகச் செயற்படுமாறு சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர்.

சுகாதாரப் பகுதியினர் கடந்த வாரம் வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனை நடத்திய போது 2004 டிசெம்பர் மாதம் திகதி எனக் குறிப்பிட்ட காலாவதியான 'கொக்கோகோலா' மென்பானம் விற்பனைக்கு வைத்திருந்ததைக் கண்டு பிடித்தனர் என்றும் -

இந்த மென்பானப் போத்தல்கள் அண்மையில் அதன் முகவரால் வழங்கப்பட்டதால் அவற்றினை மீள ஒப்படைக்க முடியுமென வர்த்தகர்கள் உறுதியளித்ததையடுத்து, அவற்றினை விற்பனை செய்யாமல் பத்திரப்படுத்திவைக்குமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தியுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இதனால், மென்பானம் கொள்வனவு செய்யும் பொதுமக்கள் காலாவதி திகதியினைப் பார்வையிட்டு அவற்றைக் கொள்வனவு செய்ய வேண்டும் என்று சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

(எ-117)

## புலோப்பளையில் வெள்ளியன்று சிலுவைப் பாதயாத்திரை

தென்மராட்சி,மார்ச்22

பெரிய வெள்ளி தினத்தன்று புலோப்பளை கிராமத்தில் சிலுவைப்பாத யாத்திரை நடத்தப்படவுள்ளது.

அன்றையதினம் காலை 7.30 மணிக்கு புலோப்பளை புனித அந்தோனியார் தேவாலயத்திலிருந்து புறப்படும் சிலுவைப்பாத யாத்திரை கிராமத்திலுள்ள 14 நிலைகளில் திருச்சிலுவைகள் திருநிலைப்படுத்தப்பட்டு மாலை 5.30 மணிக்கு புலோப்பளை புனித இராயப்பர் தேவாலயத்தில் பெரிய வெள்ளி ஆராதனையுடன பூர்த்தியாகும்.

இதற்கான ஏற்பாடுகளை உதவிப் பங்குத்தந்தை வசந்தசீலன் அடிகள் மேற்கொண்டு வருகிறார்.

(எ-117)

# சமயசந்நிதிகளில்...

வலி.தெற்கு,மார்ச்22

கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் ஆலயத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை ஆறு மணிக்கு பங்குனி உத்திரத்தை முன்னிட்டு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற உள்ளன.

(ஒ-152)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்21

யாழ்.வண்ணை கன்னாதிட்டி அருள்மிகு காளியம்பாள் ஆலய தாரணவருட திருக்குளிர்ச்சி நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

★ ★ ★

காரைநகர்,மார்ச்22

காரைநகர் மணற்காடு கும்பநாயகி முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மதியம் 12.05 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினைந்து தினங்கள் நடைபெறவுள்ளது.

இம்மகோற்சவத்தின் தேர்த்திருவிழா அடுத்த மாதம் 7 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிக்கும் தீர்த்தத்திருவிழா 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கும் இடம்பெறும்.

(ஒ-73-202)

★ ★ ★

வலி.வடக்கு,மார்ச்21

மல்லாகம், கோணப்புலம் ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவம் நேற்றுத் திங்கட்கிழமை ஆரம்பமாகியது. இந்த உற்சவம் அடுத்த மாதம் முதலாம் திகதி நிறைவுபெறவுள்ளது.

தினமும் காலை 8 மணிக்கும் மாலை 7 மணிக்கும் பூஜைகள் இடம்பெறுவதுடன் இரவு சுவாமி வீதியுலாவரவுள்ளார். (ஒ-86)

# மரண அறிவித்தல்கள்

## சிதம்பரப்பிள்ளை சூரியகுமார்

தம்பசிட்டி வீதி, முதலாம் கட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை சூரியகுமார் நேற்று (21.03.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளையின் அன்பு மகனும் மற்றும் திருமதி புவனேஸ்வரியின் பாசமிகு மகனும் சிவகுமார் (இ.போ.ச. சாரதி, பருத்தித்துறைச்சாலை), சிவபாலன் (உரிமையாளர், மைலன் வெதுப்பகம், பருத்தித்துறை), ஜெயசிங்கம் (இந்தியா), சாந்தகுமாரி (டென்மார்க்), கலைவாணி (ஜேர்மனி), கலைச்செல்வி (பிரான்ஸ்), கலையரசி (தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (22.03.2005) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தம்பசிட்டி வீதி, முதலாம் கட்டை, பருத்தித்துறை.*

தகவல்:
சி.புவனேஸ்வரி (தாயார்),
சி.சிவகுமார் (இ.போ.ச. பரு.),
சி.சிவபாலன்
(மைலன் வெதுப்பகம் பருத்தித்துறை).
T.P: 777684693, 021- 2263120

(சி-41652)(29-14-17)

## அப்பாவுப்பத்தர் அன்னப்பிள்ளை

புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாவுப்பத்தர் அன்னப்பிள்ளை நேற்று (21.03.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாவுப்பத்தரின் மனைவியும் நாகநந்தினி, காலஞ்சென்ற செல்வக்குமார், அம்பிகா, யோகராசா, சுப்பிரமணியம் (ஈசன் - ஈசன் ரேடேர்ஸ் உரிமையாளர், சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற நடராசா, காலஞ்சென்ற பகீரதன், சாந்தினி, சிவறூபி ஆகியோரின் அன்பு மாமியாரும் வனஜா, குகன், சிந்துஜன், சுகனிஜா, கவிப்பிரியா, கயேந்திரன், அஜீந்திரன், விஜீந்திரன், ரஜினி, நிகேதா, விதுர்ஷினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2005) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனத்திற்காக கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*பழைய பொலீஸ்நிலைய வீதி, சாவகச்சேரி.* (43398)(29-14-17)

தகவல்:
யோகராசா, ஈசன்
(பிள்ளைகள்).

## திருமதி பாக்கியம் சீவரத்தினம்

(இளைப்பாறிய ஆசிரியர், யாழ்.சன்மார்க்க மகா வித்தியாலயம்)



கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் இல39/5, அம்மன் வீதி, கந்தர்மடத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியர் திருமதி பாக்கியம் சீவரத்தினம் நேற்று (21.03.2005) திங்கட்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*39/5, அம்மன் வீதி, கந்தர்மடம்.* (43392)(29-14-17)

தகவல்:
வாகீசன் (மகன்).

## நாகலிங்கம் சிவசிதம்பரம்

(A.N.S. சைக்கிள் கடை உரிமையாளர்)



தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சிவசிதம்பரம் 19.03.2005 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - பார்வதி தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற விஸ்வநாதன் - வள்ளியம்மை தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்றவர்களான ஆச்சிப்பிள்ளை, அன்னலட்சுமி, சாம்பசிவம், நடராசா, தையல்நாயகி மற்றும் பூமாலட்சுமி (கனடா) ஆகியோரின் சகோதரனும் லீலாவதியின் அன்புக் கணவரும் கேதீஸ்வரன் (Engineer ஆஸ்திரேலியா), Dr. கேதீஸ்வரி (கொழும்பு பொது வைத்தியசாலை), லதா (லண்டன்), ராமேஸ்வரி (ஆசிரியர், திருக்குடும்ப கன்னியர்மடம்), கிருஸ்ணகுமார் (லண்டன்), கிருஸ்ணவேணி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அஞ்சலிகா (ஆஸ்திரேலியா), அகிலநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சரண், சமீரன், வினு ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.03.2005) புதன்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காகத் தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*நந்தாவில் லேன், தாவடி, கொக்குவில்.* (சி-41649)(29-14-17)

தகவல்:
குடும்பத்தினர்.


**படிவம்**
க.பொ.த. (உ.த) 2006 பரீட்சைக்கு முதன் முறையாகத் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாகத் தோற்றவிருப்பவர்கள் தமது பெயரைப் பதிவு செய்வதற்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.
BHARATHY PATHIPPAKAM
430, K.K.S. Road, Jaffna.

**படிவம்**
அரச திணைக்கள சிற்றூழியர்கள், எழுதுவினைஞர் பதவியுயர்வுப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.
முடிவு திகதி: 08.04.2005
BHARATHY PATHIPPAKAM
430, K.K.S. Road, Jaffna.

**படிவம்**
பட்டதாரிகள் பின்வரும் அமைச்சுக்களிலுள்ள கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான படிவங்கள் உண்டு.
01. மகாவலி அமைச்சு - அபிவிருத்தி உத்தியோகத்தர்.
02. இந்து கலாசார அமைச்சு - அபிவிருத்தி உத்தியோகத்தர்.
BHARATHY PATHIPPAKAM
430, K.K.S. Road, Jaffna.

**JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY VADDUKODDAI**
Radio, T.V. and Electronic Servicing Practice
காலம்: 6 மாதங்கள் (முழு நேரம்)
முழு அளவிலான செயல்முறை பயிற்சிநெறி
(Full time Practical Oriented Course)
கல்வித் தகைமை: G.C.E. (O/L) வரை படித்த மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.
விசேட பயிற்சி: UPS, Computer Power Supply, Monitor, CD Player, DVD பழுதுபார்த்தல்
ஆரம்பம்: 28th March 2005
மேலதிக விவரங்களுக்குத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
DIRECTOR
JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY
VADDUKODDAI.
T.Phone:0602213139 (சி-41647)(29-14-17) Email: jcit@sltnet.lk

**G.C.E O/L மாணவர்களுக்கான பல வர்ண சமவுயரக் கோட்டுப் படங்கள் விற்பனைக்குண்டு.**
பிள்ளையார் நேரச்சுப் பதிப்பகம், நல்லூர்.

**பணிநிலை வெற்றிடம்**
ஐக்கிய அபிவிருத்திச் சங்கம் (Alliance Development Trust) எனும் நிறுவனமானது வடமராட்சி பகுதியில் இயந்திரப்படகு தயாரிக்கும் வேலைத்திட்டதை ஆரம்பித்துள்ள படியால் இவ்வேலைத்திட்டத்தில் இணைந்து வேலைசெய்ய விரும்பும் இருபாலாரும் காரியாலயத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று 28.03.2005 இற்கு முன் சமர்ப்பிக்கலாம்.
குறிப்பு: சுனாமியால் பாதிக்கப்பட்ட வாலிபர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் (15 பேருக்கு மாத்திரம் வெற்றிடம் உண்டு).
விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டிய முகவரி:
காரியாலயம்
44/1, பழைய பூங்கா வீதி,
சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.
(43396)(29-14-17)

**நிறைஞ்சனாஸ் சங்கானை**
கமல் (இருவேடம்), மனிஷா கொய்ரால் நடித்த
ஆளவந்தான் (சீல்ஸ்)
கா.நேரம்: 11.00, 2.45, 6.00, (பு.நே)

**நாதன்ஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம். குளிரூட்டப்பட்டது.
கா.நேரம். 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே) மட்டும்
The Passion of the Christ
(இயேசு நாதரின் இறுதி 12 மணி நேரக் கதை) (C/41486)(22-11-45)

**ராஜா யாழ்ப்பாணம்**
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு பிரசாந், வடிவேல், மும்தாஜ் நடித்த
லண்டன் (சீல்ஸ்)
இயக்கம்: சுந்தர் C
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

**நாகம்ஸ் சினிமா சுன்னாகம்**
சிறப்புத் தோற்றத்தில் விஜய், ரவிகிருஸ்ணா, நமீதா, ரம்பா நடித்த
சுக்ரன் (சீல்ஸ்)
தினசரி 11.00, 3.00, 7.00 (பு.நே)

**மனோகரா யாழ்ப்பாணம்**
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு ஆர்யா, ஜோதிகா (மாறுபட்ட வேடங்களில்) மற்றும் பலர் நடித்த
மாயாவி
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30


## இதய அஞ்சலிகள்

எமது பணிமனை ஊழியர்கள் இ.தருமரத்தினம், இ.முத்துலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தை

### சின்னத்தம்பி இராமநாதன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*உதவி அரசாங்க அதிபர் பணிமனை, நெடுந்தீவு.* (சி-41648)(29-14-17)

ஊழியர் நலன்புரிச் சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி சதானந்தன் அமிர்தாம்பிகை அவர்களின் துணைவர்

### ச.சதானந்தன்

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/கல்வியங்காடு இ.த.க. பாடசாலை.

(43397)(29-14-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைச் சாரதி ஒருவர் குவைத்தில் சுட்டுக்கொலை!

இலங்கையைச் சேர்ந்த 26 வயது சாரதியொருவர் குவைத் யாமோர்க் நகரில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின்போது துப்பாக்கி ரவையொன்று இவரது மார்புப் பகுதியில் பாய்ந்ததால் இவர் உயிரிழந்துள்ளாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த மேற்படி இலங்கையர் அண்மையிலேயே தொழில்வாய்ப்புப் பெற்று குவைத் வந்தார் எனக் குவைத் அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தக் கொலை தொடர்பாக மேற்படி சாரதி கடமையாற்றிய வீட்டில் பணியாற்றி வந்த இலங்கைப் பணிப்பெண் ஒருவர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

இந்தப் பணிப்பெண் இலங்கையைச் சேர்ந்தவரும் குவைத்தில் தொழில்புரிபவருமான இளைஞர் ஒருவருடன் தொடர்பு வைத்திருந்தார் என்பது விசாரணைகளின்போது தெரியவந்தது.

பணிப்பெண்ணான தனது காதலி கடமையாற்றிய வீட்டிற்குச் சாரதியாக வேறொர் இளைஞர் [illegible] பொறாமையை ஏற்படுத்தியதால் காதலனான இளைஞர் இந்தக் கொலையை மேற்கொண்டிருக்கக் கூடுமெனப் பொலீஸார் சந்தேகிக்கின்றனர். குவைத் பொலீஸார் இது சம்பந்தமான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-8)

# பொதுக்கட்டமைப்பு உருவாவதை தேசப்பற்றுள்ள இயக்கம் தடுக்கும்!

## முழுமூச்சில் ஈடுபட அந்த அமைப்பு முடிவு

கொழும்பு, மார்ச்22

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பொதுக்கட்டமைப்பொன்றை அரசு அமைக்குமாயின் அதற்கெதிராக, இயன்றளவான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதென தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் நேற்று தீர்மானித்தது. தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் அரசியல் நடவடிக்கைக்கான குழுவின் கூட்டம் நேற்று அதன் அலுவலகத்தில் நடைபெற்றது. இயக்கத்தின் தலைவர் வண.எல்லே குணவன்ஸ தேரர், ஏனைய முக்கியஸ்தர்களான ஜே.வி.பியின் விமல் வீரவன்ஸ எம்.பி., வண.தம்பர அமில தேரர் உட்படப் பலர் இதில் கலந்துகொண்டனர்.

மேற்குலக நாடுகளின் தேவைக்கேற்ப செயற்பட்டு அதற்கேற்றவகையிலும் நாட்டின் இறைமைக்குப் பாதிப்பு ஏற்படும் வகையிலும் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுவதாக இக்கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவரும் ஒருமித்த கருத்தைத் தெரிவித்தனர்.

எனவே, மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், பொதுக்கூட்டங்கள், துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள் போன்றவை ஊடாகவும் இதர செயற்பாடுகள் ஊடாகவும் இம்முயற்சியை எதிர்ப்பதென்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் மேலும் தீர்மானித்தது. (க-8)

# ஹெய்டியில் நடந்த சண்டையில் இலங்கைச் சிப்பாய் உயிரிழப்பு

ஹெய்டியில் முன்னாள் படையினருக்கும் ஐ.நா. அமைதிப் படையினருக்கும் இடையில் நடந்த துப்பாக்கிச் சண்டையில் அமைதிப்படையில் பணியாற்றிய இலங்கை இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். அவரின் சடலத்தை இலங்கைக் கொண்டுவருவதற்கு வெளிவிவகார அமைச்சும் பாதுகாப்பமைச்சும் கூட்டாக நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றன.

ஹெய்டியில் பொலீஸ் நிலையமொன்றை ஆக்கிரமித்திருந்த அந்நாட்டின் முன்னாள் படையினருக்கும் ஐக்கிய நாடுகளின் சர்வதேச அமைதிப் படையினருக்கும் இடையே நேற்று முன்தினம் இந்தத் துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றது. இதில் ஐ.நா. அமைதிப் படையில் பணியாற்றிய இலங்கை இராணுவத்தின் லான்ஸ் கோப்ரல் எச்.எம். விஜேசிங்க உயிரிழந்தார் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரட்னாயக்க நேற்றுத் தெரிவித்தார்.

உயிரிழந்த லான்ஸ் கோப்ரல் பதுளையைச் சேர்ந்தவராவார். இந்தச் சண்டையில் பேராதனையைச் சேர்ந்த சார்ஜண்ட் விஜேதிலக்கவும் கண்டி வெலம்பொடவைச் சேர்ந்த கோப்ரல் பிரேம்சிறியும் பதுளையைச் சேர்ந்த லான்ஸ் கோப்ரல் ஜனக உதயகுமாரவும் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

உயிரிழந்த இராணுவ வீரரின் சடலம் பெரும்பாலும் இன்று அல்லது நாளை நாட்டுக்குக் கொண்டுவரப்படலாமென்றும் -

இதுகுறித்து அவரின் குடும்பத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் - இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

அமைச்சு நடவடிக்கை

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாக முழுமையாகக் கவனஞ்செலுத்தி உயிரிழந்த இராணுவச் சிப்பாயின் சடலத்தை இலங்கைக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளு மாறு கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சு, ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பேர்னாட் குணதிலக்கவைக் கேட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சர்வதேச அமைதிப் படையினர் அமைதியை நிலைநாட்டுவதற்காகக் கடந்த வருடம் ஜூனில் அங்கு சென்ற பின்னர் இடம்பெற்ற முதல் வன்முறைச் சம்பவம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

வெளிநாடு ஒன்றில் அமைதிப் பணியாற்றச் சென்று உயிரிழப்பைச் சந்திப்பது இலங்கை இராணுவத்துக்கும் இதுவே முதற்தடவை என்று கூறப்படுகின்றது. (க-8)

# தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் புதிய நிர்வாகிகள் ஞாயிறன்று தெரிவு

இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் புதிய தலைவராக அனந்த் பாலகிட்ணரும், செயலாளராக ஆர்.பாரதியும், பொருளாளராக எஸ்.ஸ்ரீகஜனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் கொழும்பு ரண்முத்து ஹோட்டலில் நடைபெற்ற ஒன்றியத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் இத்தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஏ.எல்.சலீம் (பிரதித் தலைவர்), எஸ்.தில்லைநாதன்(உபதலைவர்), விசுப்பிரமணியம் (உபதலைவர்), சித்ராஞ்சன்(உபசெயலாளர்), தேவகௌரி (உபசெயலாளர்), ஆ.நிக்ஸன் (உபபொருளாளர்), திருச்செல்வம்(வடமாகாண இணைப்பாளர்), எஸ்.செல்வராஜா(மலையக இணைப்பாளர்), சரவணன்(கிழக்கு மாகாண இணைப்பாளர்).

செயற்குழு உறுப்பினர்களான தனபாலசிங்கம், மொகமட், வேலாயுதம், தவச்செல்வம், திருமதி விவியன்நாதன், மாகாமுனி சுப்பிரமணியம், ரவிவர்மன், துஷ்ஷந்தி, எஸ்.ராஜ்குமார், செ.பேரின்பராஜா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

## ஆழிப்பேரலை அழிவு நிவாரணமாகக் கிடைத்த

# சர்வதேச நிதி மற்றும் உதவிகள் குறித்து சரியான விவரத்தை ஐ.தே.க. திரட்டும்

கொழும்பு,மார்ச்.22

ஆழிப்பேரலை அழிவுக்கான நிவாரண உதவியாக உலக நாடுகளும், சர்வதேச அமைப்புகளும் வழங்கியுள்ள நிதி உதவிகளின் உண்மையான விவரங்களைத் திரட்டுவதற்கென ஐ.தே.கட்சியின் உயர்மட்டக் குழு ஒன்று நியமிக்கப்படும் இதன்மூலம் ஜனாதிபதியின் புளுகுமூடையை பொதுமக்கள் முன் அவிழ்த்துவிட முடியும் என ஐ.தே.க. கூறுகின்றது.

நேற்று ஐ.தேக.தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற ஐ.தே.க. நாடாளுமன்றக்குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான தி.மகேஸ்வரனும், முன்னாள் அமைச்சரான டன்ஸ்டன் பெர்னாண்டோவும் இதற்கான ஆலோசனையை அங்கு கூட்டாக முன்வைத்துள்ளனர். இதனை சமுகளித்திருந்த அனைத்து உறுப்பினர்களும் ஏகமனதாக அங்கீகரித்தனர்.

இத்தீர்மானத்தின்படி -

இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள் மற்றும் வெளிநாட்டு அமைப்புகளுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு ஆழிப்பேரலை அழிவு நிவாரண உதவியாக வழங்கிய பொருள்கள் மற்றும் நிதி தொடர்பான சரியான விவரங்களை ஐ.தே.க.குழு சேகரிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதன்மூலம் ஆழிப்பேரலை அழிவு நிவாரணமாக வெளிநாடுகளிலிருந்து நிதி உதவி கிடைக்கவில்லை என்ற சாரப்பட ஜனாதிபதி கூறிவரும் கருத்தின் உண்மைத் தன்மையைக கண்டறியமுடியும் என ஐ.தே.கட்சி கருதுவதாகத் தெரிகின்றது.

2005 ஆம் ஆண்டில் கட்டாயமாக ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டு[illegible] என்பதை வலியுறுத்தியும், அரசமைப்புக்கு ம[illegible]ாக அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ளும் வகையில் ஜனாதிபதி மேற்கொள்ளும் அராஜகத்தனமான விடயங்களை நாட்டு மக்களுக்குத் தெரிவிக்கும் வகையிலும் அடுத்த மாதம் முதல் நாடளாவிய ரீதியில் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வதென்றும் ஐ.தே.க. தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி நிதியத்திலும், தேசிய லொத்தர் சபையிலும் இடம்பெற்ற அதிகார துஷ்பிரயோகம் மற்றும் ஊழல் மோசடிகள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு வேளையின்போது விவரம் ஒன்றை முன்மொழிவதற்கு கொழும்பு மாவட்ட எம்.பி. மகேஸ்வரனுக்கு கட்சியின் நாடாளுமன்றக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

புதன்கிழமை நாடாளுமன்ற ஒத்திவைப்பு வேளையில் இப்பிரேரணை சபையில் சமர்ப்பிக்கப்படும்.

நேற்று நடைபெற்ற ஐ.தே.க நாடாளுமன்றக்குழுக்கூட்டத்தில் வாழ்க்கைச் செலவு உயர்வு, அத்தியாவசிய பொருள்களுக்கான தட்டுப்பாடு, வேலையில்லாப் பிரச்சினை ஆகியன தொடர்பாக அரசின் அசமந்தப் போக்குக் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிய அரசக்கு எதிராக மக்களைத் திரட்டி, நாடளாவிய ரீதியில் கிராமிய மட்டத்தில் இருந்து பிரசாரங்களை மேற்கொள்ளவும் நேற்றைய குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. (க-8)

# சு.கட்சி அமைப்பாளர்களை ஜனாதிபதி வியாழன் சந்திப்பு

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்ட மற்றும் தேர்தல் தொகுதி அமைப்பாளர்கள் அனைவரையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாளைமறுதினம் வியாழக்கிழமை சந்திக்கவுள்ளார்.

இந்தச் சந்திப்பு ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ளது. முக்கியமான பல விடயங்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதால் அனைத்து அமைப்பாளர்களையும் இதில் தவறாது கலந்துகொள்ள வேண்டுமென ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

கட்சியின் மறுசீரமைப்பு சம்பந்தமான பல புதிய திட்டங்களை இந்தக் கூட்டத்தின்போது ஜனாதிபதி அறிவிப்பாரென ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன. (க-8)

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடுகளைக் கடந்தவாரம் ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொட மேற்கொண்டிருந்தார்.

இலங்கையின் அரசியல் நிலைவரம், சமாதான முயற்சிகள் குறித்தும் இந்தியத் தலைவர்களுடன் ஐ.தே.க. தலைவர் கலந்துரையாடுவாரெனத் தெரிவிக்கப்படுகிறது. (எ-8)

## படையினரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பற்றிப் பொதுமக்கள் முத்துகல பொலீஸ் சோதனைச் சாவடியில் பல முறைப்பாடுகளைச் செய்துள்ளனர்.

சிறுவர்களைப் பலாத்காரமாக அழைத்துச் சென்று பயிற்சி வழங்கித் தமது நடவடிக்கைகளுக்குத் பயன்படுத்துகின்றமை, தீவுச்சேனை கிராமத்தில் பலாத்காரமாக முகாமொன்றை அமைத்தமை, கிராமம[illegible]களை அச்சுறுத்தி வருகின்றமை போன்ற அ[illegible]டித்தனங்கள் குறித்து மக்கள் முறையிட்டுள்ளனர். அங்குள்ள மக்கள் நிம்மதியற்று இருந்துவந்தனர்.

புலிகளின் கட்டுப்பாட்டில் அந்தக் கிராமம் இருந்த காலப்பகுதியில் இருந்து இராணுவமோ, பொலீஸாரோ அப்பகுதிக்குச் செல்வதில்லை. தமிழ்மக்களும், சிங்களமக்களும் மிகவும் நெருக்கமான உறவைப் பேணி வந்த தீவுச்சேனைக் கிராமம் இன்று யுத்தகளமாக மாறியுள்ளது. இதற்குக் காரணமானவர்கள் கருணா குழுவினர் என்று கூறப்படுபவர்களே - என்று அவர் தெரிவித்தார். (க-8)

## தீவுச்சேனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்றனர் என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது. - என்றார்.

எனினும், இந்தத் தாக்குதல் தீவுச்சேனையில் தங்கியிருந்த கருணா குழுவினருடன் இருந்தவர்களாலேயே நடத்தப்பட்டுள்ளது என்று இணையத்தளச் செய்திகள் சில தெரிவித்தன.

இந்தத் தாக்குதல் தொடர்பாகப் புலிகள் தரப்பிலிருந்து உடனடியாகக் கருத்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளை -

கருணா ஆதரவு இணையத்தளம் ஒன்று தமது தரப்பில் மூவர் காயமடைந்ததை உறுதிப்படுத்தியுள்ளது. முகாம் பொறுப்பாளர் மங்களம் மாஸ்ரர், சந்திரமோகன், தேவன் ஆகியோரே காயமடைந்தனர் என்று அந்த இணையத்தளம் தெரிவித்தது. (எ-க-8-7-190)


தொழிற்பயிற்சி நெறிகள்

* RADIO, T.V AND VIDEO DECK REPAIRING
சகல இன றேடியோ,ரீ.வீ,டெக் மற்றும் எலெக்ரோனிக் உபகரணங்கள், Computer Monitor, Ups, Printer, Scanner, என்பன திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 10 மாதங்கள்)

* MOTOR REWINDING AND ELECTRICAL WIRING
சகல இன, (f) பான், ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு Single Phase, Three Phase இணைப்பு முறை என்பன பயிற்சி அளிக்கப்படும். (காலம் 07 மாதங்கள்)

* REFRIGERATION AND AIR-CONDITIONING
சகல இன குளிர்சாதனப் பெட்டி மற்றும் எயார் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 07 மாதங்கள்)

* MOTOR CYCLE MECHANISAM
சகல இன மோட்டார் சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 06 மாதங்கள்)

* DC WIRING (காலம் 03 மாதங்கள்)

ஆரம்பம்:-23,27.03.2005

மேலதிக விவரங்களுக்கு
JAFFNA TECHNICAL INSTITUTE
இல. 07, பலாலி வீதி யாழ்ப்பாணம்.
T.P:- 021-222 3335, 0773 086716
(சி-41536)(29-14-17)



காவலாளிகள் தேவை

எமது ஸ்தாபனத்துக்கு காவலாளிகளாகக் கடமையாற்றுவதற்கு ஆள்கள் தேவை.
சுயவிவரங்களுடன் நேரில் வரவும்.

கொனிக்கா கலர் லாப்,
14, ஸ்ரீ வெங்கடேசன் வீதி,
(பெருமாள் கோயில் அருகில்)
யாழ்ப்பாணம்.
☎ 222 [illegible] (சி-41646)(29-13-17)



கீல்வாத மூட்டு வீக்கம்

கீல்வாத மூட்டு வீக்கம் குணப்படுத்தமுடியாதது என உலகம் இதுவரை எண்ணியது. கீல்வாத மூட்டு வீக்கம் வைரஸினால் உருவாகிறது. அதனை நாங்கள் வைரஸ் எதிர்ப்பு ஆயுள்வேத மருந்தினால் சந்தேகத்திற்கு இடமின்றிக் குணப்படுத்துவோம்.

மேலதிக விவரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்:

FAIR PHARMA (PVT) LTD
(MANUFACTURERS OF AYURVEDIC MEDICINES)
[illegible]l 5/ East Tower/1C, WORLD TRADE CENTER, COLOMBO - 01,
Ph[illegible] 5517897, 5551879, Fax: 5517756
E-mail: [illegible]@lankabellnet.com Website:www.fppvtl.org
A BOI Appro[illegible] & ISo 9001:2000 Qms Certifed Company
(சி-41632)(7-14-17)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள [illegible]வர்களது பணிமனையில் 22.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org